செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில், வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாகக தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் பழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரிஇத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டுக் கட்டு கதறிடக் கட்டுக்
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்

புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தாகுகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனிய வேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என்நா இருக்க யானுனைப் பாட

எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனைப் பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனைச் செயினும்
பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய

அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாத்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்!
விழியால் காண வெருண்டிடும் பேய்கள் :
பொல்லாதவரைப் பொடிபொடியாக்கும்;
நல்லோர் நினைவில் நடனம் புரியும்;
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து, எனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து உணவு ஆக
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்து ஆட்கொள்ள என்றனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே, இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசே!
மயில் நடனம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

* * *

ஓம்

கந்தர் சஷ்டி கவசம்
பழநிப் பதியொளிர் பரமன்

மூன்றாவது கவசம்

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக் (கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக் (கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முறுகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வெற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்

கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ(து) அமர்ந்த(து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய (து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த (து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ (து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில் வாழ் இறைவா நமோநம
கூரகம் அவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோ
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முனைத்தெழும் சோதியை
சால முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்

ஆகாச வட்ட(து) அமர்ந்த சதாசிவன்

பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியன் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவ சம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துள்ளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கணமாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இறங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறு முகம்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்

சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
    எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
    தட்டாத வாக்கும் சர்வா பரணம்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
    துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுந்துச் சொற்பொருள் யாப்பிலங் காரம்
    வழத்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியாக்கும் வாக்கும்
    சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
    அட்சரம் யாவும் அடியேனுக்கு (கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
    நல்ல உன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
    செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
    இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
    அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
    வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
    பேதாளம் துர்க்கை பிடாரீ நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
    உதைத்து மிதித்தங் (கு) உருட்டி நொறுக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
    வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
    தழுவிஅக் கினியாத்தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
    மதம்பெறும் காளி வல்ல சக்கரம்

மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முனே நின்று
வாகனத்துடன் என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடணம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித்வேடணம்
தந்திர மந்திரம் தருபணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்ததம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

* * * *

முருகா

கந்தர் சஷ்டி கவசம்

திருவேரகத்துறை பெருமான்

நான்காவது கவசம்

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த மனமுறைப் பொருளே!
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண்டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா (து) என்னைக்
காணனீ வந்து காப்பதுடன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமார
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல (கு) எல்லாம்
அதிசய மாக அமைந்தவா போற்றி
திரியாட் சரத்தால் சிவனயன் மாலும்
விரிபாருலகில் மேன்மை யுற்றவனே
சதுரட் சரத்தால் சாற்றுதல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவதாய்த்
தஞ்சமென்றோரை தழைத்திடச் செய்தென

நெஞ்சகத்து இருக்கும் நித்தனே சரணம்
தஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறுகோணமாய் ஆறெழுத் தாகி
ஆறுசிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைத் (து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாபதி
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
என்கோ ணத்துள் இயக்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தைவமாய் விளக்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்!
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே

குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிபே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுடன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

* * * *

ஓம்

கந்தர் சஷ்டி கவசம்

குன்றுதோறாடும் குமரவேள்

ஐந்தாவது கவசம்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவியநாயகா
புள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் விசகிரி ஆறுமுகவா
பண்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண்டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண்ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப்பிரபைப்போல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநாயகியாள்
பார்த்தழ கென்னப் புரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கம் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈசுவரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா: குமரா! அப்பனே? என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
காத்தி கேயா எனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்

கூவிய மயிலேறும் குருபரா வருக
தமவியும் சிவனும் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
கொன்போல் சரவணைப் புண்ணிய வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுமோர் மலரணி மணியே வருக
திரிபுர பவவெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலக்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத் தூரியும்
வலம்புரிச் சங்கொலி மணியணி மிடறும்

நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பயிரவர் ஆனந்தமாட
துஷ்ட மிகுஞ்சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி

கட்டழகன் என்று [illegible] வாழ்த்த
இடும்பாயுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் செயசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநகே
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியர் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற கரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே கவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குலத்தை அறுத்துச் சயித்து
விடவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்

திருப்பரங் குன்றம் தீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள் மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்தினுலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந்(து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
நாட்டிக மாய்எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

****

ஓம்

கந்தர் சஷ்டி கவசம்

பழமுதிர் சோலை கதிரோன்

ஆறாவது கவசம்

ங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்

சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரி புர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத்தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் ணவ்வுமாய் பழமுதிர்சோலையில்
தவ்விய ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீரவாகுவோ(டு) ஒன்பதுன்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன்அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்

விமலனும் கேட்க [illegible]
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண்டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமகளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
அறுமுகத்துடன் அவதரித் தோனை
சிங்க முகாசூரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ வமர்கள் தமக்குச்
சேனாபதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைப்பங் காளா
கும்பமா முனிக்கு குரு தேசிகனே
தேன்பொழி பழநித் தேவ குமாரா
கண்பாத்(து) எனையாள் கார்த்திகேயா
என் கஷ்டநிஷ்டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்

தேவ ராயன் செப்பிய கவசம்
பூவலயத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான்செபிப் பாரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்

(ஆறு கவசங்களும் முற்றுப் பெற்றன)

* * * *

ஓம்

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய

சண்முக கவசம்

(அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருள(து) ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகன் அறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என் அருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க 1

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க 2

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க. வாயை
முருகவேல் காக்க, நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிகஅறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ரமணியன் காக்க 3

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேகறு தோள்விலாவும் திருமகள் மருமகன் காக்க
ஆகஇலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க, எந்தன்
ஏகஇலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க 4

உறுதியாய் முன்கை தன்னை உமையிளமதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கை தலத்தை மாமருகன் காக்க
புறம்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமால்மருகன் காக்க, பின் முதுகைச் சேய்காக்க 5

ஊன்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க, வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க, அறுமுகன் குதத்தைக் காக்க 6

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க
அம்சகனம் ஓர் இரண்டு அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான் திமிரு முன் தொடையைக் காக்க 7

ஏரகத்தேவன் என் தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க 8

ஐயுறு மலையன் பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன், அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும், ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க 9

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க, கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத் திடாது அயில்வேல் காக்க 10

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க 11

ஒளவியமுளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர்புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவா ராயின், சராசரம் எல்லாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க 12

கடுவிடப் பாந்தன் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோள், நாய், குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு
நடையுடை எதனா லேனும் நான் இடர்ப் பட்டி டாமல்
சடிதியில் வடிவேல் காக்க, சானவிமுளை வேலி காக்க 13

ஙகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க, வன்புள்
சிகரிதேன் நண்டுக் காலி செய்யன்ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஒந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால், எற்குஓர் ஊறுஇலாது ஐவேல் காக்க 14

சலத்தில் உய்வன்மீனேறு தண்டுடைத் திருக்கை, மற்றும்
நிலத்திலும் சலத்திலும்தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால், நான் வருத்தம் கொண்டிடாது, அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க 15

ஞமலியம் பரியன் கைவேல், நவக்கிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள், தந்த சூலை, ஆக்கிராண ரோகம்
திமிர்கழல் வாதம், சோகை, சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க 16

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி, கண்ட மாலை
குமுறு விப்புருதி, குன்மம், குடல்வலி ஈழைகாசம்
நிமிரொணாது இருத்தும் வெட்டை, நீர்ப்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க 17

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம், மூலவெண்மூளை, தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்த
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும்சக்தி வடிவேல் காக்க 18

தவனமா ரோகம், வாதம், சயித்தியம், அரோசகம் மெய்
கவறவே செய்யும் மூலச்சூடு, இளைப்பு உடற்றுவிக்கல்,
அவதிசெய் பேதி சீழ்நோய் அண்டவாதங்கள், சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க 19

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழிநோய் கக்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப்பகந்தராதி
இமைப்பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க 20

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கத்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர், வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ஹ்ரீம்வேல் காக்க 21

மண்ணிலு மரத்தின்மீது மலையிலும் நெருப்பின்மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும் சாரிசெய் ஊர்திமீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும்வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணிவந்து அருள் ஆர்சஷ்டி நாதன் வேல் காக்க 22

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழ்ஐவேல் கீழ்வேல் காக்க 23

ரஞ்சிதமொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சயவேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன் வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர்காம்தோன் இகலுடைக் கரவேல் காக்க 24

லகரமே போல் காளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க, மேற்கில்
இகல் அயில்காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க 25

வடதிசை தன்னில் ஈசன் மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க
நடக்கையில் இருக்கும் ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில், கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்றும் கிரிதுளைத்துள வேல் காக்க 26

இழந்துபோகாத வாழ்வை ஈயும் முத்தையானார் கைவேல்
வழங்கும்நல் ஊண் உண்போதும் மால்வினையாட்டின் போதும்
பழஞ்சுர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும்குணத்தோடே காக்க திடமுடன் மயிலும் காக்க 27

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளி எழு காலை, முன்எல்ஓம் சிவசாமி காக்க
தெளிநடு பிற்பகல் கால், சிவகுரு நாதன் காக்க 28

இறகுடைக்கோழித் தோகைக்கு இறைமுன் இரவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே, திகழ்பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க 29

இனம்எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அநுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்கவந்தே 30

* * * *

ஓம்

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

கந்தர் அநுபூதி

காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானைபதம் பணிவாம்

நூல்

ஆடும் பரி, வேல் அணிசேவல், எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்:
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே 1.

உல்லாச, நிராகுல யோக, விதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ!
எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா! கரபூ பதியே! 2

வானோ? புனல்பார் கனல் மாருதமோ?
ஞானோதயமோ? நவில் நான் மறையோ
யானோ; மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே! 3

வளைபட்ட கை மாதொடு மக்கள் எனும்
தளைபட்(டு), அழியத் தகுமோ? தகுமோ?
ளைபட்(டு) எழுசூர் உரமும் கிரியும்
தொளைபட்(டு) உருவத் தொடு வேலவனே! 4

மக மாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந்து மொழிந்திலனே:
அகம், மாடை, மடந்தையர் என்(று), அயரும்
சக மாயையுள் நின்று தயங்குவதே! 5

திணியான மனோசிலை மீது, எனதாள்
அணியார் அரவிந்தமரும்பு மதோ?
'பணியா?' என, வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக! தயா பரனே! 6

கெடுவாய் மனனே கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
கடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே. 7

அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட, மெய்ப்பொருள் பேசியவா!
குமரன்! கிரிராச குமாரி மகன்!
சமரம் பொரு தானவ நாசகனே! 8

மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசு என்று ஒழிவேன்?
தட்டூடற, வேல் சயிலத்(து) எறியும்
நிட்டூர, நிராகுல, நிர்ப்பயனே? 9

கார் மா மிசை காலன் வரின், கலபத்
தேர்மா மிசை வந்து எதிரப் படுவாய்!
தார் மார்ப! வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே! 10

'கூகா' என என் கிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா!
நாகாசல வேலவ! நாலுகவித்
தியாகா! கரலோக சிகாமணியே! 11

செம்மான் மகளைத் திருடும் திருடன்,
பெம்மான் முருகன், பிறவான், இறவான்,
'சும்மா இரு சொல் அற, என்றலுமே,
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே 12

முருகன், தனிவேல் முனி, நம் குரு’ என்று
அருள்கொண்டு அறியார் அறியும் தரமோ?
உரு அன்று, அரு அன்று உளது இன்று இலது அன்று
இருள் அன்று, ஒளி அன்று, என நின்றதுவே 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய், மனனே! ஒழிவாய் ஒழிவாய்,
மெய்வாய் விழி நாசியொடும் செவி ஆம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே 14

‘முருகன், குமரன் குகன்’ என்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வு என்(று) அருள்வாய்?
பொரு புங்கவரும், புவியும் பரவும்
குருபுங்கவ! எண்குண பஞ்சரனே? 15

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு,
ஓராவினையேன் உழலத் தகுமோ?
வீரா: முதுசூர்பட, வேல் எறியும்
சூரா! சுரலோக துரந்தரனே! 16

யாம் ஓதிய கல்வியும், எம் அறியும்
தாமே பெற, வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போய், அறமெய்ப் புணர்வீர்!
நாமேல், நடவீர் நடவீர் இனியே 17

உதியா, மரியா, உணரா, மறவா,
விதிமால் அறியா விமலன் புதல்வா1
அதிகா! அநகா! அபயா! அமரா
வதி காவல! சூர பயங்கரனே! 18

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா!
அடி அந்தம்இலா அயில் வேல் அரசே!
மிடி என்று ஒரு பாவி வெளிப் படினே 19

அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா;
விரிதாரண! விக்கிரம வேள்! இமையோர்
புரிதாரக! நாக புரந்தரனே! 20

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்
வரதா! முருகா! மயில் வாகனனே!
விரதா! கர சூர விபாடணனே! 21

காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா!
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுர பூபதி மேருவையே 22

அடியைக் குறியாது அறியாமையினால்
முடியக் கெடவோ? முறையோ! முறையோ
வடி விக்கிரம வேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே! 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ!
சூர் வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர் வேல புரந்தர பூபதியே; 24

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ! அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அயிலோ, கழலோ! முழுதும்
செய்யோய்! மயில் ஏறிய சேவகனே! 25

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே!
வேதாகம ஞான வினோத! மனோ
தீதா! சுரலோக சிகாமணியே! 26

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே; விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே? மயில் ஏறிய வானவனே! 27

ஆனா அமுதே! அயில்வேல் அரசே!
ஞானா கரனே! நவிலத் தகுமோ?
யான் ஆகிய என்னை விழுங்கி வெறும்
தானாய்நிலை நின்றது தற்பரமே 28

இல்லே எனும் மாயையில் இட்டனை நீ,
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையுஞ் சுடர் வேலவனே 29

செவ்வான் உருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாதது என உணர்வித் ததுதான்,
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே? 30

‘பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய்’ என, என்னை விதித்தனையே!
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே! 31

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமாறு, அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே! மலை கூறிடு வாகையனே! 32

சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி, என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோ தயனே!
கந்தா! முருகா: கருணாகரனே 33

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல், எனக்கு வரம் தருவாய்.
சங்க்ராம சிகாவல! சண்முகனே!
கங்காநதி பால! க்ருபாகனே! 34

விதிகாணும் உடம்பை விடா வினையேன்,
கதிகாண, மலர்க்கழல் என்று அருள்வாய்?
மதிவாள் நுதல் வள்ளியை அல்லது, பின்
துதியா விரதா! கரபூ பதியே 35

'நாதா! குமரா! நம' என்று அரனார்
'ஓதாய்' என ஓதியது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா! குறமின் பத சேகரனே! 36

'கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம்' என்னும் பதம் மேவலையே!
புரிவாய் மனனே! பொறையாம் அறிவால்
அரிவாய், அடியோடும் அகந்தையையே 37

ஆதாளியை, ஒன்று அறியேனை, அறத்
தீது ஆளியை, ஆண்டது செப்புமதோ!
கூதாள கிராத குலிக்கு இறைவா!
வேதாள கணம் புகழ் வேலவனே! 38

மாஏழ் ஜனனம் கெட மாயை விடா
மூஏடணை என்று முடிந்திடுமோ!
கோவே! குறமின் கொடி தோள் புணரும்
தேவே! சிவசங்கர தேசிகனே 39

வினைஓட விடும் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி, மயங்கிடவோ
சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு இதணோடு திரிந்தவனே! 40

சாகாது, எனையே சரணங்களிலே
கா கா, நமனார் கலகம் செயும்நாள்;
வா கா! முருகா! மயில் வாகனே!
யோகா1 சிவஞான உபதேசிகனே1 41

குறியைக் குறியாது குறித்து அறியும்,
நெறியைத், தனிவேலை நிகழ்த்திடலும்,
செறிவு அற்று உலகோ(டு) உரை சிந்தையும் அற்று,
அறிவு அற்று அறியாமையும் அற்றதுவே 42

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினது அன்பு அருளால்,
ஆசா நிகளம் துகளாயின பின்,
பேசா அநுபூதி பிறந்ததுவே 43

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லுமதோ?
வீடும், சுரர், மாமுடி, வேதமும், வெம்
காடும் புனமும் கமழும் கழலே 44

கரவாகிய கல்வி உளார் கடைசென்று
இரவா வகை, மெய்ப்பொருள் ஈகுவையோ?
குரவா! குமரா! குலிசாயுத! குஞ்
சரவா! சிவயோக தயாபரனே! 45

எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்,
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே! 46

ஆறு ஆறையும் நீத்து, அதன் மேல் நிலையைப்
பேறா அடியேன், பெறுமாறு உளதோ!
சீறா வருசூர் சிதைவித்து, இமையோர்
கூறா உலகம் குளிர்வித் தவனே 47

அறிவு ஒன்று அறநின்று, அறிவார் அறிவில்
பிரிவு ஒன்று அற நின்ற பிரான் அலையோ?
செறிவு ஒன்று அற வந்து இருளே சிதைய,
வெறி வென்றவரோ(டு) உறும் வேலவனே? 48

தன்னந் தனி நின்று அது, தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் கிருபை சூழ் சுடரே! 49

மதிகெட்டு, அற வாடி, மயங்கி, அறக்
கதிகெட்டு, அவமே கெடவோ? கடவேன்
நதி புத்திர! ஞான சுகாதிப! அத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே! 50

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்,
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க், கதியாய், விதியாய்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே! 51

◇◇◇◇

ஸ்ரீ ஸுப்ரமண்ய பஞ்ச ரத்னம்

ஷடானனம் சந்தன லிப்த காத்ரம்
மஹோரஸம் திவ்ய மயூர வாஹனம்
ருத்ரஸ்ய ஸூனும் ஸூரலோக நாதம்
ப்ரஹ்மண்ய தேவம் சரணம் பரபத்யே ||

ஜாஜ்வல்யமானம் ஸூர ப்ருத்த வந்த்யம்
குமார தாரா தட மந்திரஸ்தம்
கந்தர்ப்ப ரூபம் கமனீய காத்ரம்
ப்ரஹ்மண்ய தேவம் சரணம் பரபத்யே ||

த்விஷட் புஜம் த்வாதச திவ்ய நேத்ரம்
த்ரயீ தனும் சூல மஸிம் ததானம்
சேஷா வதாரம் கமனீய ரூபம்
ப்ரஹ்மண்ய தேவம் சரணம் பரபத்யே ||

ஸுராரி கோரா ஹவ சோப மானம்
ஸுரோத் தமம் சக்தி தரம் குமாரம்
ஸுதார சக்த் யாயுத சோபி ஹஸ்தம் |
ப்ரஹ்மண்ய தேவம் சரணம் பரபத்யே ||

இஷ்டார்த்த ஸித்தி ப்ரத மீச புத்ரம்
இஷ்டான்னதம் பூ ஸுர காமதேனும்
கங்கோத்பவம் ஸர்வ ஜனானு கூலம்
ப்ரஹ்மண்ய தேவம் சரணம் ப்ரபத்யே ||

ய: ச்லோக பஞ்ச கமிதம் படதே ச பக்த்யா
ப்ரஹ்மண்ய தேவ விநிவேசித மாந ஸஸ்ஸன்
ப்ராப்னோதி போக மகிலம் புவியத் யதிஷ்டம்
அந்தே ஸ கச்சதி முதா குஹஸாம்ய மேவ ||

***

உ

வேலும் மயிலும் துணை

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்
ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது

ஸதா பாலரூபாபி விக்நாத்ரிஹந்த்ரீ
மஹா தந்திவக்த்ராபி பஞ்சாஸ்ய மாந்யா |
வீந்த்ரா திம்ருக்யா கணேசாபிதா மே
விதத்தாம் ச்ரியம் காபி கல்யாணமூர்த்தி : ||

ந ஜாநாமி சப்தம் ந ஜாநாதி சார்த்தம்
ந ஜாநாமி பத்யம் ந ஜாநாமி கத்யம் |
சிதேகா ஷடாஸ்யா ஹ்ருதி த்யோததே மே
முகாந்நிஸ்ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம் ||

மயூரா திருடம் மஹாவாக்ய கூடம்
மநோஹரிதேஹம் மஹச்சித்தகேஹம் |
மஹீதேவதேவம் மஹாவேதபாவம்
மஹாதேவபாலம் பஜே லோகபாலம் ||

யதா ஸந்திதாநம் கதா மாநவாமே
பவாம்போதிபாரம் கதாஸ்தே தைதவ
இதிவ்யஞ்யஜயந் ஸிந்துதீ ரே ய ஆஸ்தே
தமீடே பவித்ரம் பராசக்திபுத்ரம்

லஸத்ஸ்வர்ணகேஹே ந்ருணாம் காமதோஹே
ஸுமஸ்தோமஸஞ்சந்நமாணிக்யமஞ்சே |
ஸமுத்யத்ஸஹஸ்ரார்க்கதுல்யப்ரகாசம்
ஸதா பாவயே கார்த்திகேயம் ஸுரேசம் ||

ரணத்தம்ஸகே மஞ்ஜுலே அத்யந்தசோணே
மநோ ஹாரிலாவண்யபீயூஷபூர்ணே |
மநஷ்ஷட்பதோ மே பவக்லேசதப்த :
ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே ||

ஸுவர்ணாபதிவ்யாம்பரைர் பாஸமாநாம்
க்வணத்கிங்கிணீமேகலாசோபமாநாம்
லஸத்தேமபட்டேந வித்யோதமாநாம்
கடிம் பாவயே ஸ்கந்ததே தீப்யமாநாம் ||

புலிந்தேசகந்யாகநாபோகதுங்கஸ்
தநாலிங்கநாஸக்தகாச்மீரராகம் |
நமஸ்யாத்யஹம் தாரகாரே தவோர :
ஸ்வபக்தாவநே ஸர்வதா ஸாநுராகம் ||

விதௌக்லுப்ததண்டாந் ஸ்வலீலா த்ருதண்டான்
நிரஸ்தேபசுண்டாந் த்விஷத்காலதண்டாந் |
ஹதேந்த்ராரிஷண்டாந் ஜகத் த்ராண சௌபிடாந்
ஸதா தே ப்ரசண்டாந் ச்ரயே பாஹு தண்டாந் ||

ஸதா சாரதா : ஷண்ம்ருகாங்கா யதி ஸ்யு :
    ஸமுத்யந்த ஏவ ஸ்திதாஸ்சேத் ஸமந்தாத் ।
ஸதா பூர்ணபிம்பா : கலங்கைஸ்ச ஹீநா :
    ததா த்வன் முகா நாம் ப்ருவே ஸ்கந்த ஸாம்யம் ॥

ஸ்புரந்மந்தஹாஸை : ஸஹம்ஸாநி சஞ்சத்
    கடாக்ஷாவலீப்ருங்கஸங்கோஜ் ஜ்வலாநி ।
ஸுதாஸ்யந்திபிம்பாதராணீ ச ஸூநோ
    தவாலோகயே ஷண்முகாம்போருஹாணி ॥

விசாலேஷு கர்ணாந்ததீர் கேஷ்வஜஸ்ரம்
    தயாஸ்யந்திஷு த்வாதசஸ்வீக்ஷணேஷு ।
மயீஷத் கடாக்ஷ : ஸக்ருத் பாதிதஸ்சேத்
    பவேத் தே தயாசீல கா நாம ஹாநி : ॥

ஸுதாங்கோத்பவோ மே அஸி ஜீவேதி ஷட்தா
    ஜபந் மந்த்ரமீசோ முதா ஜிக்ரதே யாந் ।
ஜகத்பாரப்ருத்ப்யோ ஜகந்நாத தேப்ய
    கிரீடோஜ் ஜ்வலேப்யோ நமோ மஸ்தகேப்ய : ॥

ஸ்புரத்ரத் நகேயூரஹாரபிராம :
    சலத்குண்டலஸ்ரீலஸத்கண்டபாக : ॥
கடௌ பீதவாஸா : கரே சாருசக்தி :
    புரஸ்தாந் மமாஸ்தாம் புரோரேஸ்தநூஜ : ॥

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தாந் ப்ரஸார்ய
    ஆஹ்வயத்யாதராத் சங்கரே மாதுரங்காத் ।
ஸமுத்பத்ய தாதம் ச்ரயந்தம் குமாரம்
    ஹராச்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம் ॥

குமாரேசஸூநோ குஹ ஸ்கந்த ஸேநா -
    பதே சக்திபாணேம யூராதிரூட ।
புலிந்நாத்மஜாகாந்த் பக்தார்த்திஹாரிந்
    ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷ மாம் த்வம் ॥

ப்ரசாந்தேந்த்ரியே நஷ்டஸம்ஜ்ஞேவிசேஷ்டே
    கபோத்காரிவக்த்ரே பயோத் கம்பிகாத்ரே ।
ப்ரயாணோந்முகே மய்யநாதே ததாநீம்
    த்ருதம் மே தயாலோ பவாக்ரே குஹ த்வம் ॥

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத்
தஹ ச் சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு |
மயூரம் ஸமாருஹ்ய மா பைரிதி த்வம்
புர : சக்திபாணிர் மமாயாஹி சீக்ரம் ||

ப்ரணம்யாஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயே அநேகவாரம் |
நவக்தும் க்ஷமோஹம் ததாநீம்க்ருபாப்தே
நகார்யந்தகாலே மநாகப்யுபேக்ஷா ||

ஸஹஸ்ராண்ட போக்தா த்வயா சூரநாமா
ஹதஸ்தாரக: ஸிம்ஹவக்த்ரஸ்ச தைத்ய: |
மாமந்தர்ஹ்ருதிஸ்தம் மந: க்லேசமேகம்
நஹம்ஸி ப்ரபோ கிம் கரோமி க்வ யாமி ||

அஹம் ஸர்வதா து:க்கபாராவஸந்நோ
பவாந் தீநபந்து : த்வதந்யம் ந யாசே |
பவத்பகதிரோதம் ஸதா க்லுப்தபாதம்
மமாதிம் த்ருதம் நாசயோமாஸுத த்வம் ||

அபஸ்மாரகுஷ்டக்ஷயார்ச: ப்ரமேஹ
ஜ்வரோந்மா தகுல்மாதிரோகா மஹாந்த: |
பிசாசாஸ்ச ஸர்வே பவத்பத்ர பூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே ||

த்ருசி ஸ்கந்தமூர்த்தி: ச்ருதௌ ஸ்கந்தகீர்த்தி:
முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம் !
கரே தஸ்ய க்ருதயம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீநா மமாசேஷபாவா : ||

முநீநாமுதாஹோ ந்ருணாம் பக்திபாஜாம்
அபீஷ்டப்ரதஸ் ஸந்தி ஸர்வத்ர தேவா : |
ந்ருணாமந்த்ய ஜாநாமபி ஸ்வார்த்ததாநே
குஹாத் தேவமந்யம் ந ஜாநே ந ஜாநே ||

களத்ரம் ஸுதா பந்துவர்க: பசுர்வா
நரோ வாத நாரீ க்ருஹே யே மதீயா: ।
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்
ஸமரந்தஸ்ச தே ஸந்து ஸர்வே குமார ॥

மிருகா: பக்ஷிணோ தம்சகா யே ச துஷ்டா :
ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே ।
பவச்சக்திதீக்ஷ்ணாக்ரபிந்தா: ஸுதூரே
விநச்யந்து தே சூர்ணிதக்ரௌஞ்சசைல ॥

ஜநித்ரீ பிதா ச ஸ்வபுத்ரா பராதம்
ஸஹேதே ந கிம் தேவஸோநாதிநாத ।
அஹம் சாதிபாலோ பவாந் லோக நாத :
க்ஷமஸ்வா பராதம் ஸமஸ்தம் மஹேச ॥

நம: கேகிநே சக்தயே சாபி துப்யம்
நம: சாக துப்யம் நம: குக்குடாய ।
நம: ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்
புந: ஸ்கந்தமூர்த்தே நமஸ்தே நமோஸ்து ॥

ஜயா நந்தபூமந் ஜயா பாரதாமந்
ஜயா மோகீர்த்தே ஜயாநந்நமூர்த்தே ।
ஜயாநந்தஸிந்தோ ஜயாசேஷபந்தோ
ஜய த்வம் ஸதா முக்திதாநேசஸூநோ ॥

புஜங்காக்ய வ்ருத்தேந க்லுப்தம் ஸ்தவம் ய :
படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய ।
ஸபுத்ராந் களத்ரம் தநம் தீர்க்கமாயு :
லபேத் ஸ்கந்தஸாயுஜ்யமந்தே நரஸ் : ॥

★★★★★

ஸ்ரீ ஸுப்ரமண்ய த்ரிஸதீ அர்ச்சனை

ஷண்முக காயத்ரீ

(தத்புருஷாய வித்மஹே மஹாஸேனாய தீமஹி |
தன்ன : ஷண்முக ப்ரசோதயாத் ||)

ஸ்ரீ சுப்ரமணிய ஆவாஹனம்

ஸிந்தூரருணம் இந்து காந்தி வதனம்
கேயூர ஹாராதிபி:
திவ்யைராபரணை: விபூஷித தநும் |
ஸ்வர்க்காதி ஸௌக்யப்ரதம்
அம்போஜாபய ஶக்கி குக்குடதாம்
ரக்தாங்க ராகோஜ்ஜ்வலம்
ஸுப்ரம்மண்யம் உபாஸ்மஹே ப்ரணமதாம்
பீதி ப்ரணாஶோத்யதம் ||

ஷட்வக்த்ரம் ஶிகிவாஹனம் த்ரிநயனம்
சித்ராம்பராலங்க்ருதம்
வஜ்ரம் ஶக்தி மஸிம் த்ரிஶூலமபயம்
கேடம் துநுஶ சக்ரகம்
பாஶம் குக்குடம் அங்குஶம் ச வரதம்
தோர்பிர் ததானம் ஸதா
த்யாயேத் ஈப்ஸித ஸித்திகம் ஶிவஸுதம்
ஸ்கந்தம் ஸுராராதிதம் ||

ஓம் நம் ஸௌம் ஸ்ரீம் ஶரவணபவ ஸத்யோஜாத ஹ்ருதய ப்ரம்ஹ ஸ்ருஷ்டிகாரண ஸுப்ரமண்ய சிவ

ஓம் நாதாய நம :
ஓம் நிர்லோபாய நம :
ஓம் நிஷ்கலாய நம :
ஓம் நிர் மோஹாய நம :
ஓம் நிரஞ்ஜனாய நம : 5

ஓம் நிர்விகாராய நம :
ஓம் நிராபாஸாய நம :
ஓம் நிர்விகல்பாய நம :
ஓம் நிராலம் பாய நம :
ஓம் நித்யத்ருப்தாய நம : 10

ஓம் நிரவத்யாய நம :
ஓம் நிருபத்ரவாய நம :
ஓம் நிதீஶாய நம :
ஓம் நிர்ணயப்ரியாய நம :
ஓம் நித்யயோகீஶாய நம : 15

ஓம் நிர்ணயஸித்தாய நம :
ஓம் நிதீனாம் பதயே நம :
ஓம் நித்ய நியமாய நம :
ஓம் நிஷ்காரணாய நம :
ஓம் நிஸ்ஸங்காய நம : 20
ஓம் நிதி ப்ரியாய நம :
ஓம் நித்ய பூதாய நம :

ஓம் நித்ய கல்யாண ஸுஶீலாய நம :
ஓம் நித்யவஸ்துநே நம :
ஓம் நித்யானந்த குரவே நம : 25

ஓம் நியந்த்ரே நம :
ஓம் நியமாய நம :
ஓம் நித்யயோகி ஸாக்ஷிப்ரிய வாதாய நம :
ஓம் நாகேந்தர ஸேவிதாய நம :
ஓம் நாரதோப தேஶகாய நம : 30

ஓம் நக்னரூபாய நம :
ஓம் நாநாபாப த்வம்ஸிநே நம :
ஓம் நாதபீட ஸ்தாய நம :
ஓம் நாதாந்த குரவே நம :
ஓம் நாகபூஷண ஸுதாய நம : 35

ஓம் நாதஸாக்ஷிணே நம :
ஓம் நாதஸ்வர க்ராஸாய நம :
ஓம் நாகாஸ்த்ர தராய நம :
ஓம் நடேஶ ப்ரியாய நம :
ஓம் நந்தி த்வம்ஸிநே நம : 40

ஓம் நவரத்னோ ஜ்வலத்பாத கடகாய நம :
ஓம் நாட்யப்ரியாய நம :
ஓம் நூபுரஹார கேயூர தராய நம :
ஓம் நிமிஷாத்மதேந நம :
ஓம் நித்யஸுத்தாய நம : 45

ஓம் நமஸ்கார ப்ரியாய நம :
ஓம் நாதபிந்து கலா மூர்த்தயே நம :
ஓம் நித்யகௌமார வீரபாஹவே நம :
ஓம் நித்யமுக்தோப தேஶகாய நம :
ஓம் நகாராத்யந்த ஸம்பூர்ணாய நம : 50

ஓம் மம் ஸௌம் க்லீம் ரவணபவஶ வாமதேவ ஶிரஸே விஷ்ணு ஸ்திதி காரண

ஓம் மஹோத்ஸாஹாய நம :
ஓம் மஹாபலாய நம :
ஓம் மஹாபுத்தயே நம :
ஓம் மஹாபாஹவே நம :
ஓம் மஹாமாயாய நம : 55

ஓம் மஹாத்ருதயே நம :
ஓம் மஹாதநுஷே நம :
ஓம் மஹாபாணாய நம :
ஓம் மஹாகடகாய நம :
ஓம் மஹாகேடாய நம : 60

ஓம் மஹாஸீலாய நம :
ஓம் மஹாதநுர் தராய நம :
ஓம் மஹாதேவ ப்ரியாத்மஜாய நம :
ஓம் மஹாத்யுதயே நம :
ஓம் மஹா ஸம்க்ஞாய நம : 65

ஓம் மஹாஸத்யாய நம :
ஓம் மஹாமாயா ஸ்வரூபாய நம :
ஓம் மஹாமயூர வாஹநாய நம :
ஓம் மஹாநுபாவாய நம :
ஓம் மஹாப்ரபவே நம : 70

ஓம் மஹாகுரவே நம :
ஓம் மஹாரஸாய நம :
ஓம் மஹாரதாரூடாய நம :
ஓம் மஹாபாகாய நம :
ஓம் மஹாமகுடாய நம : 75

ஓம் மந்தார ஶேகராய நம :
ஓம் மஹாகுணாய நம :
ஓம் மஹாஹாராய நம :
ஓம் மஹாமார்க்காய நம :
ஓம் மஹா மாதங்க கமனாய நம : 80

ஓம் மஹாஸங்கீத ரஸிகாய நம :
ஓம் மதுஸூதனாய நம :
ஓம் மதுஸூதன பூஜிதாய நம :
ஓம் மஹாஶக்தயே நம :
ஓம் மஹாஶக்தி தராய நம : 85

ஓம் மஹாப்ரஶஸ்தாய நம :
ஓம் மஹாவ்யக்தயே நம :
ஓம் மஹாவக்த்ராய நம :
ஓம் மஹாயஶஸே நம :
ஓம் மஹாமாத்ராய நம : 90

ஓம் மஹாராத்மணே நம :
ஓம் மஹாஹவிஷே நம :
ஓம் மஹிமாகாராய நம :
ஓம் மதோன்மத்த பைரவ பூஜிதாய நம :
ஓம் மஹாவல்லீ ப்ரியாய நம : 95

ஓம் மதனாகார வல்லபாய நம :
ஓம் மஹாமந்தார குஸுமப்ரியாய நம :
ஓம் மாம்ஸகர்ஷணாய நம :
ஓம் மண்டலத்ரய வாஸிநே நம :
ஓம் மகாராத்யந்த ஸம்பூர்ணாய நம : 100

ஓம் ஶி ஸௌம் ஹ்ரீம் வணபவஶர அகோர ஶிகாருத்ர ஸம்ஹாரகாரண

ஓம் ஶிவானந்த குரவே நம :
ஓம் ஶிவஸச்சிதாநந்த ஸ்வரூபாய நம :
ஓம் கண்டீமண்டல வாஸாய நம :
ஓம் ஶிவப்ரியாய நம :
ஓம் ஶரவணோத்பவாய நம : 105
ஓம் ணாஸ்வத ப்ரஸாதாய நம :
ஓம் ஸங்கரப்ரிய ஸுதாய நம :
ஓம் ணூரபத்மாஸூரத்வேஷிணே நம :
ஓம் ணூராநந்த த்வம்ஸிநே நம :
ஓம் ஶுக்லரூபாய நம : 110
ஓம் ஶுத்தவீரயுத்த ப்ரியாய நம :
ஓம் ஶுத்தமாநஸீக நிதனாய நம :
ஓம் ஶுத்ததத்வ ஸம்பூர்ணாய நம :
ஓம் ஶூரபத்மாஸுர ஹந்த்ரே நம :
ஓம் ஶூந்யவர்ஜிதாய நம : 115
ஓம் ஶுங்க சக்ர குலிண த்வஜ நம :
ஓம் ரேகாங்க்ரி பங்கஜாய நம :
ஓம் ஶுத்தயோகி நிதாத்ரே நம :
ஓம் ஶோகபர்வத த்வம்ஸிநே நம :
ஓம் ஶுத்தவீரப்ரியாய நம :
ஓம் ஶுத்தாங்கநா பூஜிதாய நம : 120
ஓம் ஶுத்தாயுத தராய நம :
ஓம் ஶுத்த ரணப்ரிய பண்டிதாய நம :

ஓம் ஶரபவேகாயுத தராய நம :
ஓம் ஶரபதயே நம :
ஓம் ஶரஸம்பூதாய நம : 125
ஓம் ஶாகிநீ டாகிநீ ஸேவித பாதாப்ஜாய நம :
ஓம் ஶங்கராங்க விபூஷணாய நம :
ஓம் ஶக்திகுக்குட தராய நம :
ஓம் ஶங்கபத்ம நிதி ஸேவித ஸ்ரீமந் மங்களாய நம :
ஓம் ணதஸஹஸ்ராயுததர மூர்த்தயே நம : 130
ஓம ஶிபூஜாமானஸீக நிலயாய நம :
ஓம் ஶிவதீக்ஷாகுரவே நம :
ஓம் ஶூரவாஹநாதிரூடாய நம :
ஓம் ஶோகரோகாதி த்வம்ஸிநே நம :
ஓம் ஶுசயே நம : 135
ஓம் ஶுத்தாய நம :
ஓம் ஶுயத்தகீர்த்தயே நம :
ஓம் ஶுசிஶரவஸே நம :
ஓம் ஶத்ருக்ரோத விமர்த்தநாய நம :
ஓம் ஶதாவ்ருத்தாய நம : 140
ஓம் ஶதமூர்த்தயே நம :
ஓம் ஶதாயுதாய நம :
ஓம் ஶாரணகுலாந்தகாய நம :
ஓம் ஶரீரத்ரய நாயகாய நம :
ஓம் ஶுபலக்ஷணாய நம : 145
ஓம் ஶுபாஶுப வீக்ஷணாய நம :
ஓம் ஶுக்லணோணித மத்யஸ்தாய நம :
ஓம் ஶுண்டாதண்ட பூத்கார ஸோதராய நம :
ஓம் ஶூந்யமார்க்க தத்பராய நம :
ஓம் ஶிகாராத்யந்த ஸம்பூர்ணாய நம : 150

***

ஓம் வம் ஸௌம் இம் ணபவஶரவ தத்புருஷ கவச மஹேஶ்வர திரோபவ காரண

ஓம் வல்லீமானஸ ஹம்ஸிகாய நம :
ஓம் விஷ்ணவே நம :
ஓம் விதுஷே நம :
ஓம் வித்வஜ்ஜன ப்ரியாய நம :
ஓம் வேகாயுத தராய நம : 155

ஓம் வேக வாஹனாய நம :
ஓம் வாமதேவ முகோத்பந்நாய நம :
ஓம் விஜயாக்ராந்தாய நம :
ஓம் விணவரூபாய நம :
ஓம் விந்த்ய ஸ்கந்தாத்ரி நடனாய நம : 160

ஓம் விஶ்வபேஷஜாய நம :
ஓம் வீரஶக்திமானஸ நிலயாய நம :
ஓம் விமலாஸநோத் க்ருஷ்டாய நம :
ஓம் வாக்தேவீ நாயகாய நம :
ஓம் வௌஷடந்த ஸம்பூர்ணாய நம : 165

ஓம் வாசா மகோசராய நம :
ஓம் வாஸாநாதிசந்தன த்ரவ்ய ப்ரியாய நம :
ஓம் வாதபோதகாய நம :
ஓம் வாதவித்யா குரவே நம :
ஓம் வாயுவேகாய நம : 170

ஓம் வாயுஸாரத்ய ரதாரூடாய நம :
ஓம் வாஸுகீ ஸேவிதாய நம :
ஓம் வாதுலாகம பூஜிதாய நம :
ஓம் விதிபந்தனாய நம :
ஓம் விணவாமித்ர மக ரக்ஷிதாய நம: 175

ஓம் வேதாந்த வேத்யா நம:
ஓம் விஷ்ணுப்ரம்ஹாதி பூஜிதாய நம:

ஓம் வீராகம ஸேவிதாய நம:
ஓம் வேதசதுஷ்டய ஸ்துதாய நம:
ஓம் வீரப்ரமுக ஸேவித ஸ்ரீமத்குரவே நம: 180

ஓம் விஶ்வபோக்த்ரே நம:
ஓம் விஶாம் பதயே நம:
ஓம் விஶ்வயோநயே நம:
ஓம் விஶாலாக்ஷாய நம:
ஓம் வீரஸேவிதாய நம: 185

ஓம் விக்ரமோபரிவேஷாய நம:
ஓம் வரதாய நம:
ஓம் வரப்ரதாய நம:
ஓம் வர்த்தமாநாய நம:
ஓம் வாரிஸூதாய நம: 190

ஓம் வானப்ரஸ்த ஸேவிதாய நம:
ஓம் வீர பாஹவே நம:
ஓம் விஶ்வதோமுகாய நம:
ஓம் வீரபாஹ்வாதி ஸேவிதாய நம:
ஓம் வீராயுத ஸமாவ்ருதாய நம: 195

ஓம் வீரஶூரவிமரத்தனாய நம:
ஓம் வ்யாஸவஸிஷ்டாதி பூஜிதாய நம:
ஓம் வாஞ்சிதார்த்த ப்ரதாய நம:
ஓம் வ்யாகரண நவோத் க்ருஷ்டாய நம:
ஓம் வகாராத்யந்த் ஸம்பூர்ணாய நம: 200

☆☆☆

ஓம் யம் ஸௌம் ரம்
பவஶரவண ஈஶான நேத்ரத்ரய ஸதாஶிவானுக்ரஹ காரண

ஓம் ஏகவஸ்துநே நம:
ஓம் ஏகமூர்த்தயே நம:
ஓம் ஏகாக்ஷரரூபாய நம:
ஓம் ஏகாக்ர சித்த நிலயாய நம:
ஓம் யஜநாதி ஷட்கர்ம தத்பராய நம: 205

ஓம் யக்ஞ பண்டிதாய நம:
ஓம் யமாய நம:
ஓம் யுத்த தர்ஷணாய நம:
ஓம் யுத்த கம்பீராய நம:
ஓம் யுக ப்ரளய ஸாக்ஷிணே நம: 210

ஓம் யோக ஸித்த ஹ்ருதயாம்புஜ நிதனாய நம:
ஓம் யோஜனாய நம:
ஓம் யக்ஞ மஹதே நம:
ஓம் யஜமான ரூபாய நம:
ஓம் யக்ஞானாம் பதயே நம: 215

ஓம் யஜுர்வேத ஸ்துதாய நம:
ஓம் யஜுஷே நம:
ஓம் யக்ஞ கம்யாய நம:
ஓம் யக்ஞ பலப்ரதாய நம:
ஓம் யக்ஞாங்கபுவே நம: 220

ஓம் யக்ஞபூதாய நம:
ஓம் யமதர்மபூஜிதாய நம:
ஓம் யஞவித்வம் ஸினே நம:
ஓம் யக்ஞரக்ஷணாய நம:
ஓம் யக்ஞேஶாய நம: 225

ஓம் ஈஷணாத்ரய வர்ஜிதாய நம:
ஓம் யக்ஞ மேஷகர்வ ஸ்தம்பனாய நம:
ஓம் யுத்த ணூரமர்தனாய நம:
ஓம் யுத்த ஶத்ரு பயங்கராய நம:
ஓம் யுகாந்த க்ருதே நம: 230

ஓம் யுகாவ்ருத்தாய நம:
ஓம் யுகதர்ம ப்ரவர்த்தகாய நம:
ஓம் யோக பாரகாய நம:
ஓம் யாந்திக வர்த்தகாய நம:
ஓம் யுக மாலா தராய நம: 235

ஓம் யோகாஷ்டாங்க ஸாக்ஷிணே நம:
ஓம் யோன்யாமார்க்க தத்பராய நம:
ஓம் ஏக போகாய நம:
ஓம் ஏகானந்த ஸ்வரூபாய நம:
ஓம் ஏகஶூராய நம: 240

ஓம் ஏக வீராய நம:
ஓம் ஏக ஸம்க்ஞாய நம:
ஓம் ஏக தர்ஶனவரதாய நம:
ஓம் ஏக தசஶத ஸஹஸ்ரகோடி நம:
ஓம் வக்த்ர சார ம்ருக மர்த்தனாய நம:
ஓம் ஏக ஸாக்ஷி ஸ்வாரூபாய நம: 245

ஓம் இந்தனாய நம:
ஓம் இத்மாய நம:
ஓம் லக்ஷ்யார்த்த போதகாயக நம:
ஓம் ஈஶோபதேஶகாய நம:
ஓம் யகராத்யந்த ஸம்பூர்ணாய நம: 250

* * *

ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் க்லீம்
ஜெஸளம் நம்ஶஶிவாய
ஸெளம நம் இம் வஶஶரவணப

ஓம் அம் ” அஸ்தர வாஸ்த்ரதர மூர்த்தயே நம:
ஓம் ஆம் ” சதுஷ் ஷஷ்டிகலா குரவே நம:
ஓம் இம் ” ணாரதாங்கா ஸ்ரீமத் ப்ரபவே நம:
ஓம் ஈம் ” ஸர்வ ஶத்ரு த்வமஸிநே நம: 255

ஓம் உம் “ ஸஹஸ்ராயுத பரிஷ் க்ருதாய நம:
ஓம் ஊம் ” ஸஹஸ்ர கோட்யண்ட தராய நம:
ஓம் ரும் ” ஸகல லோக வஶங்கராய நம:
ஓம் ரூம் ” மஹா ஶக்த்யாயுத குரவே நம:
ஓம் லும் ” ஏகாதஶ ருத்ராஸ்த்ர தராய நம:
ஓம் லூம் ” மஹா ஶூரகர்வ பங்க பண்டிதாய நம: 260

ஓம் ஏம் ” ஶிம்ஹவக்த்ராஸூர ஹந்த்ரே நம:
ஓம் ஐம் ” பானுகோப ஸம்ஹார வீராதிஸேவிதாய நம:
ஓம் ஒம் ” நவ வீர பூஜிதாய நம:
ஓம் ஒளம் ” மஹா ரதாரூடாய நம:
ஓம் அம் ” மஹாதநுர்தர ஸ்ரீமத் குரவே நம: 265

ஓம் அ: ” க்ருத்திகா ஸூர க்ருபாய நம:
ஓம் கம் (Kam) ” இந்த்ராணீ மாங்கல்ய ரக்ஷகாய நம:
ஓம் கம் (Kham) ” ஜயந்தாதி தேவ பத்த பந்த மோசனாய நம :
ஓம் கம் (Gam) ” மஹாவிஷ்ணு பூஜித ஸ்ரீமத் குரவே நம:
ஓம் கம் (Gham) ” மார்த்தாண்ட பைரவ பூஜிதாய நம: 270

ஓம் ஙம் ” உபேந்த்ர ப்ராண ரக்ஷகாய நம:
ஓம் சம் (Cam) ” உக்ர கோப மர்த்தனாய நம:
ஓம் சம் (Cham) ” யுக ப்ரளய ஸாக்ஷி பூதாய நம:
ஓம் ஜம் (Jam) ” ஷட் க்ரந்தி நிலயாய நம:
ஓம் ஜம் (Jham) ” மஹா வீர ஸைநிகாய நம: 275

ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் க்லீம்
ஸௌம் நமஶ்ஶிவாய
ஸௌம் நம் இம் வஶரவணப

ஓம் ஞம் ,, மஹாயுத்த ஸமூஹ பரிவ்ருதாய நம:
ஓம் டம் ,, மஹா பூத ஸைநிகாய நம:
ஓம் டம் (Tham) ,, மஹா மயூர வாஹநாய நம:
ஓம் டம் (Dam) ,, மஹா பாஶுபதாஸ்த்ர தராய நம: 280
ஓம் டம் (Dham) ,, க்ஷுரிகாஸ்த்ர தராய நம:
ஓம் ணம் ,, ப்ரம்ஹாஸ்த்ர தராய நம:
ஓம் தம் ,, விஷ்ண்வாஸ்த்ர தராய நம:
ஓம் தம் (Tham) ,, குக்குடாப்ஜ தராய நம:
ஓம் தம் (Dam) ,, ஶங்க சக்ர குலிஶத்வஜ தராய நம:
ஓம் தம் (Dham) ,, பிண்டி பால முஸல தண்டதராய நம: 285
ஓம் நம் ,, கட்க கேடக பாஶாங்குஶ தராய நம:
ஓம் பம் ,, தநுர் பாண நாராசாத் யஸ்த்ர தராய நம:
ஓம் பம் (Phum) ,, ஶக்தி ஶூல கதா பரஶுதராய நம:
ஓம் பம் (Bam) ,, வந்ஹி த்ருட டிண்டிம தராய நம:
ஓம் பம் (Bham) ,, வ்ருஷபாஸ்த்ர தராய நம: 290
ஓம் மம் ,, ஸூர்யாஸ்த்ர தராய நம:
ஓம் யம் ,, மஹா பத்மாஸுர பாகதேய க்ராஸாய நம:
ஓம் ரம் ,, அஸுர குலாந்தகாய நம:
ஓம் லம் ,, குக்குட த்வஜ மஹாரதாரூடாய நம:
ஓம் வம் ,, பிநாக பாஶாதி வருணாஸ்த்ர தராய நம: 295
ஓம் ஶம் ,, ஸர்வ மந்த்ரார்த்த பீஜ முக்ய ஸ்வரூபாய நம :
ஓம் ஷம் ,, ஓங்கார ரூப ஸ்ரீமத் குரவே நம :
ஓம் ஸம் ,, வஷட்கார ஸ்வாஹா கார ஸ்வரூபாய நம:
ஓம் ஹம் ,, ஸர்வ ஶத்ரு நாஶநாய நம;
ஓம் ளம் ,, ஸமஸ்த ஹ்ருதயாம்போஜ நிலயாய நம :
ஓம் க்ஷம் ,, ஏகபஞ்சாதஶாத்யக்ஷர ஸம்பூர்ணாய நம: 300

ஓம் ஸ்ரீ வல்லீ தேவ நாயகீ ஸமேத
ஸுப்ரமண்ய ஸ்வாமி நம :
த்ரிஶதீ..............அர்ச்சநாதி ஸமர்ப்பயாமி

எந்த மலரைக்கொண்டு அர்ச்சனை செய்கிறோமோ அதன் பெயரை த்ரிஶதி என்பதன் பின் சேர்த்து அர்ச்சனாதி ஸமர்ப்பயாணி என்று சொல்லி முடிக்கவும்.

(உ-ம்) : த்ரிஶதி பில்வார்ச்சநாதி ஸமர்ப்பயாமி)

ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஐம் ஈம் நம் ளம் ஸௌ:
நம: ஶிவாய, ஸௌ: வபணவரஶ
ஸத்யோ ஜாத வாமதேவ அகோர தத்புருஷ
ஈஶாண அதோமுக ஹ்ருதய ஶிரஶ் ஶிகா கவச

நேத்ர த்ரயாஸ்த்ர, ப்ரம்ம விஷ்ணு ருத்ர மஹேஸ்வர
ஸதாஶிவ பரப்ரம்ஹ பஞ்சக்ருத்ய காரணாய
ஜகத்புவே, வசத்புவே, விஸ்வபுவே ருத்ரபுவே
ப்ரம்ஹபுவே அக்நிபுவே, லம் வம்ரம் யம் ஹம் ஸம்
ஸர்வாத்மகாய, ஓம் ஹ்ரீம், வ்ரீம் ஸௌம் ணரவணபவ!
ஸர்வலோகம் மமவஶம் ஆதய ஆதய :
மம ஶத்ரு ஶம்க்ஷோபணம் குரு குரு;
ஷண்முகாய, மயூரவாஹநாய, ஸர்வ ராஜபய
நாஶநாய, ஸ்கந்தேஶ்வராய, வபணவரஶ
க்ஷாம் க்ஷீம் க்ஷூம் க்ஷைம் க்ஷௌம் க்ஷ;
ஹூம் பட் ஸ்வாஹா

***


ஸ்ரீ கச்சபேஸ்வரர்

ஸ்ரீ கச்சாலீஸ்வரர்



ஸ்ரீ கச்சாலீஸ்வரர்

ஸ்ரீ கச்சாலீசுவரர் ஸ்துதி:

वेदान्तामल सौध कोटि विलसत् पारावतं पार्वती
वक्त्राम्भोज मरविन्द बिन्दु लहरि माधुर्य भृङ्गं सदा
देवेन्द्रादि निलिम्प रत्न मकुट ज्योति ज्वलत्पादुकम्
पात्मशद्रुममूल मुख्य निलय श्रीकच्छपेशं भजे ॥

युष्मान् रतनु विश्वमङ्गलकरो विश्वाधिको वेधसा
कूर्माङ्गेन सनत्कुमार मुनिना सम्पूज्य सम्प्रार्थितः
तेषां दोषमपोहि भोगमतुलं मुक्तिं च योदत्तवान्
सोयं सौन्दरनायकी सहचर। श्री कच्छपेशः प्रभुः ॥

प्रनम्य शिरसा गौरीं कामाक्षीं कच्छपेश्वरम्
सम्पूज्य विधिवच्छम्भुं काञ्चीक्षेत्रेश्वरं शिवम् ॥

ஸ்ரீ கச்சாலீசுவரர் பஞ்ச ரத்ன ஸ்துதி:

பண் தக்கேசி - இராகம் : காம்போதி

நச்சரா அணி நங்கள் பிரானை
நல்ல கம்பனைக்கள்ளக்கம் பனைப்போய்ப்
பிச்சை புக்குழல் பெரியபெம்மானைப்
பேயொ டாடியைப்பிங்கலம் கலந்த
செச்சை மேனி எம் செல்வனைத்தளவாய்ச்
செட்டியார் முதன் முதற்றிருப்பணி செய்
கச்ச பாலயச் சென்னைக்கச்சாலைக்
கச்சபேசனைக்கஞுது கென்மருனே! 1

அயிலை ஏந்திய செங்கல்வராயன்
அவன் பின் ஐயப்பன் ஐம்முகக்களிலு
வெயிலை நேர்ஒளி மெய் அழகம்மை
வீரபத்திரன் வைவரவன் முதலோர்
பயிலும் மாதிருச் சுற்றும் ஆலயமும்
பணிபவர்க்கருள் புரிவதற்காக்கொள்
கயிலை யாளியைச் சென்னைக்காச்சாலைக்
கச்சபேசனைக் கருது கென் மருனே! 2

சுமடனேயும் ஒருவொருடோகத்
தொண்டுகொண்டருள் ஜோதியின் உருவைச்
சமணர் பாழ்படச்சைவம்ம முன் தழைக்க
ஸம்பந்ததாக்கருள் தந்தசெல் வத்தை
அமரர் போற்றிடும் அரதந்த அடிகள்
அடிமை செய்ய உள்ளருச்செய்தனைக்
கமடம் பூஜை செய் சென்னைக்கச் சாலைக்
கச்சபேசனைக் கருகென் மருனே! 3

பண் : திருத்தாண்டகம் இராகம் வாரிகாம்போதி தாளம் : ஸீத்தாங்கம்

அடல் உடைய திருக்ஞான ஸம்யந்தர்க்கும்
அப்பர்க்கும் சுந்தரர்க்கும மணிவாக்கார்க்கும்

மிடல் உடைய அருள் நந்தி சிவாச்சார்யார்க்கும்
மெய்கண்ட தேவர்க்கும் உமாபதிக்கும்
திட்டம் உடைய மறைக் ஞாந ஸம்பந்தர்க்கும்
செவ்வியவா சைவம் வளர் அருள் செய்திட்டான்
டேல் ஒலியால் நகர் ஒலிகொள் சென்னைக்கச்சிக்
கச்சாலை கருத்தில் வையார் கருத்திலாரே! 4

கச்சபம்தான் பூஜித்த கச்சி மேவும்
கச்சாலை ஈசனை நாள் தவறாதென்றும்
முச்சகமும் அறியவழிபட்டு வந்த
மொய்ம்பர் தளவாய்ச் செட்டி யார் முட்டுற்ற
அச்சமயம் தானே வந்தமர்வதாக
அருள்செய்து பாண லிங்கமாய் வந்தான்மால்
கச்சபமாய் தொழ இருந்த சென்னைக் கச்சிக்
கச்சாலைத் தொடர் பறியார் மெய்யிலரரே. 5

உ

ஸ்ரீ சிவ த்யான ஸ்லோகங்கள்

திருச்சிற்றம்பலம்

உலக எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகு இலா சோதியன், அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

ஓம் நமசிவாய பரமேஸ்வராய சசிசேகராய நம ஓம்
பவாய குணசம்பவாய சிவதாண்டவாய நம ஓம் 1

குருவே ஸர்வலோகாநாம் பிஷஜே பவரோகிணாம்
நிதயே ஸர்வவித்யாநாம் தக்ஷிணாமூர்த்தயே நம: 2

ஓம் நம் ப்ரணவார்த்தாய சுத்த ஜ்ஞான மூர்த்தயே
நிர்மலாய ப்ரசாந்தாய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்யே நம: 3

அப்ரமேயத் வயாதீத நிர்மல ஜ்ஞான மூர்த்தயே
மனோகிராம் விதூராய ஸ்ரீ தக்ஷிணாமுத்த்தயே நம: 4

சிந்முத்தித கரகமலம் சிந்தித பக்தேஷ்ட தாயகம் விமலம்
குருவர மாத்யம் கஞ்சன நிரவதிகா நந்த நிர்பரம் வந்தே 5

மூலேவடஸ்ய முனிபுங்கவ ஸேவ்யமானம்
முத்ராவிசேஷ முகுளீ க்ருத பாணிபத்மம்
மந்தஸ்மிதம் மதுரவேஷ முதாரமாத்யம்
தேஜஸ்ததஸ்து ஹ்ருதிமே தருணேந்து சூடம் 6

கற்பூர கர்தரம் அரவிந்த தளாயதாக்ஷம்
கர்பூர ஸீதள ஹ்ருதம் கருணா விலாஸம்
சந்த்ரார்த்தசேகரம் அனந்த குணாபிராமம்
இந்த்ராதி ஸேவ்ய பதபங்கஜ மீசமீடே 7

வடதருநிகட நிவாஸம் படுதர விக்ஞான முத்ரிதகராப்ஜம்
ஆதியே அடியேன் ஆதரித் துஅழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே.

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்து கீர்த்தி வியன்மண்ட லத்து ஈசன்
கண்சமந்த நெற்றி கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

விண்ஆளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ஆளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழ்அளிக்கும் தன்பாண்டி நாட்டானைப்
பெண்ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவும்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ?

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப்புச் சிவம்
வேண்டார்தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை யிறைதாள்
பூண்டேன் புறம்போகேன் இனிப்
புறம் போகலொட் டேனே

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்நான்
உடையானே உனைஅல்லா த(உ)றுதுணைமற் றுஅஹியேனே

முன்னை வினைஇரண்டும் வேர்அறுத்து முன்னிற்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து

பேராசை யிமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ?

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்தன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன்உடை யாய் என்னைக்கண்டுகொள்ளே

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்தானேவந்
துஎனதுள்ளம் புகுந்து அடியேற குஅருள்செய்தான்
ஊனாரும உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
கண்ணபபொன் நீற்றங்கே சென்றூதாய் கோத்தும்பீ

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூகவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றேஅனையாய் என்னைஆட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றுஎனக்குண்டோ எண்தோல் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானேஇதற்கு நாயகமே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவ து இனியே

காசணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்பணிமின்கள் கறைஉரரை
நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக
என்று வாழ்த்தி
தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன்
செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்றுபாடிப்
பொற்சுண்ணம் இடித்து நாமே

பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே
சட்டம் நேர்பட வந்திலாத சழக்கனேன் உனைச்சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு நாயினும் கடையாய எம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்துகாட்டினாய் கழுக்குன்றிலே

ஈசனேநீ அல்லதில்லை இங்கும் அங்கும என்பதும்
பேசினேனொர் பேதமின்மை பேதையென்என் எம்பிரான்
நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலாஓர் நின்லால்
தேசனே ஓர் தேவர் உண்மை சிந்தியாது சிந்தையே

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத்து அடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

வெறுப்பனவே செய்யும் என் சிறுமையைநின் பெருமையினால்
பொறுப்பவனே அராப்பூண்பவனே, பொங்கு கங்கைசடைச்
செறுப்பவனேநின் திருவருளால் என் பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.

ஊசலாட்டுமிவ் வுடலுயி ராயின இருவினை அறுத்தென்னை
ஓசையாலுணர் வார்க்குணர் வரியவன் உயர்வுதந் தொளியாக்கிப்
பாசமானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசைதீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புதம் அறியேனே

ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநாம் மாயப்படை வாராமே

இரங்கும் நமக்கு அம்பலக்கூத்தன்
என்றென்று ஏமாந்து இருப்பேனே
அரும்கற் பனைகற் பித்தாண்டாய் ஆள்வார்
இலிமாடு ஆவேனோ

நெருங்கும் அடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள் வாழ்வே
வாவென்று அருளாயே

மானேர் நோக்கி உமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனேஅமுதே கரும்பின் தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதானேன் உடையானே

தன்மை பிறால் அறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டையா புறமே போக விடுவாயோ
என்னைநோக்கு வார்யாரே என்நான்செய்தேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி எந்தாய் எங்குப் புகுவேனே.

திருச்சிற்றம்பலம்

* * *

திருவிசைப்பா
ஒன்பதாம் திருமுறை

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே1
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் துஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்து(உ)கந் தாயைத்
கொண்டனேன் விளம்புமா விளம்பே!

கோலமே! மேலை வானவர் கோவே!
குணங்குறி இறந்ததோர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள்
காலகாலா! காம நாசா!
ஆலமே அமுதுண்டம் பலஞ் செம்பொற்
கோயில்கொண்டாட வல்லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனே நணுகுமா நணுகே

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ(நான்மறைத்ள தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா!
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்னடிக் கீழ(து)என் னுயிரே.

வண்டார் குழலுமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத்தின்பின்
கண்டார் கவல வில்லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தாய்! என்னும்
பண்டாய மலரயன் தக்கன் எச்சன்
பகலோன் தலைபல் பசுங்கண்
கொண்டாய் என்னும் குணக்குன்றே! என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

- திருமாளிகைத்தேவர்

ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
    என்னுயிர்க்(கு) அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்(கு) அருளிப்
    பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
    மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
    உண்டென உணர்கிலேன் யானே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
    கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
    மதிப்பவர் அறியா மணமணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
    திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
    குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

திலக நுதல்உமை நங்கைக்கும்
    திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க்(கு) என்னையாட்
    கொடுத்தாண்டு கொண்ட குணக்டல்
அலதொன்(று) அறிகின்றிலேம் எனும்
    அணியும்வெண் ணீ(று)அஞ் செழுத்தலால்
வலதொன் றிலள் இதற்(கு)என் செய்கேன்
    வயலந்தண் சாந்தையர் வேதந்தனே!

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
    படுமிடர் குறிக்கொளா(து) அழகோ?
மணமணி மறையோர் வானவர் வையம்
    உய்யமற்(று) அடியனேன் வாழத்
தினமணி மாடத் திருவிடைக் கழியில்
    திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பெருநீர்க் கங்கைதன் சிறவன்
    கணபதி பின்னிளங் கிளையே

- சேந்தனார்

தாயின்நேர் இரங்குந் தலைவ! ஓ என்றும்
தமியனேன் துணைவ! ஓ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால் இரங்கி
நல்புரி பரமர்தங் கோயில்
வாயில்நேர் அரும்பு மணிமுக்(கு) அலர
வளரிளஞ் சேனால் மாந்தளிர்செந்
தீயின்நேர் அரும்பும் பெரும் பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே
நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்திலம் நிரைத்(து) இலங் கினவே
போலுமே முறுவல் நிறையஆ னந்தம்
பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே என்று
குழைவரே கண்டவர் உண்ட(து)
ஆலமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

திருநுதல் விழியும் பவளவாய் இதழும்
திலகமும் உடையவன் சடைமேல்
புரிதரு மலரின் தாதுநின்(று) ஊதப்
போய்வருந் தும்பிகாள் இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணியம் பலவனைக் கண்(டு) என்
மனத்தையுங் கொண்டுபோ துமினே.

அம்பரா! அனலா! அணிலமே! புவிநீ!
அம்புவே! இந்துவே! இரவி!
உம்பரால் ஒன்றும் அறிவொணா அணுவாய்!
ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
மொய்ம்பராய் நலஞ்சொல் மூதறி வாளர்
முதத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
எம்பிரா னாகி ஆண்டநீ மீண்டே
எந்தையும் தாயுமா யினையே.

அன்னமாய் விசும்பு பறந்(து)அயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்(ம்) நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனும் இருவா
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

செம்பொன்! பவளக்குன்றமே! நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்(து)
அன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே!
அத்தனே! பித்தனே னுடைய
சம்புவே! அணுவே! தாணுவே! சிவனே!
சங்கரா! சாட்டியக் குடியார்க்(கு)
இன்பனே! எங்கும் ஒழிவற நிறைந்(து)ஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே.

சித்தனே அருளாய் செங்கணா! அருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்னே! அருளாய் அமரனே! அருளாய்
அமரர்கள் அதிபனே! அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே! அருளாய் முதல்வனே! அருளாய்
முன்னவா துயர்கெடுத்(து) எனக்கே

இந்திலோகம் முழுவதும் பணிகேட்(டு)
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாகம் மேகலை அரையா
அகந்தொறும் பலிதிரி அடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின்னரங் கலந்(து) ஒலிப்ப
மந்திர கீதந் தீங்குழல் எங்கும்
மருவிடம் திருவிடை மருதே - கருவூர்த்தேவர்

கைகுவான் முத்தின் சரிவளை பெய்து
    கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கண்நா யகராய்ப் பவனிபோந்(து) இங்ஙன்
    முரிவதோர் முரிவுமை அளவும்
தக்கசீர்க் கங்கை அளவுமன்(று) என்னோ?
    தம்மொருப் பா(டு)உல குஅதன்மேல்
மிக்கசீ ராரூர் ஆதியாய் வீதி
    விடங்கராய் நடம்குலா வினரே.

முத்துவயிரமணி மாணிக்க மாலை கண்மேல்
    தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
    அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிந்தே.
அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
    புகலோக முண்டென்று புகுமிட(ம்)நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணியசீர்ச்
    சிவலோகம் ஆவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே.

- பூந்துருத்தி நம்பி காடநம்பி

பாரோர்முழுதும் வந்திறைஞ்சப் பதஞ்சலிக்(கு) ஆட்டுகந்தான்
    வாரார்முலையான் மங்கைபங்கன் மாமறையோர் வணங்கச்
சீரான்மல்கு தில்லைச்செம்பொன் அம்பலத் தாடுகின்ற
    காரார்மிடற்(று)எங் கண்டனாரைக் காண்பதும் என்றுகொலோ?

நெடியானோடு நான்முகனும் வானவரும் நெருங்கி
    முடியான்முடிகள் மோதிஉக்க முழுமணியின் திரளை
அடியார்அலகி னால்திரட்டும் அணிதில்லை அம்பலத்துக்
    கடியார்கொன்றை மாலையானைக் காண்பதும் என்றுகொலோ?

- கண்டராதித்தர்

ஆயாத சமயங்கள் அவரவர்கள் முன்பென்னை
    நோயோடு பிணிநலிய இருக்கின்ற அதனாலே
போயாவித் தொழும்பனைத்தம் பிரான்இகழும் என்பித்தாய்
    நாயேனைத் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே!

நின்றுநினைந்(து) இருந்துகிடந் தெழுந்துதொழும்தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையாதி ருந்தாலும் இருக்கவெட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ? திருத்தில்லை நடம் பயிலும் நம்பானே!

மண்ணோடு விண்ணளவும் மனிதரோடு வானவர்க்கும்
கண்ணாவாய் கண்ணாகா(து) ஒழிதலும்நான் மிகக்கலங்கி
அண்ணாவோ என்றுஅண்ணாந்(து) அலமந்து விளித்தாலும்
நண்ணாயால் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே.

- வேணாட்டடிகள்

படங்கொள்பாம்பணை யானொடுபிரமன் பரம்பரமா! அருளென்று
தடங்கையால் தொழவுந் தழலாடுசிற் றம்பலவன்
தடங்கைநான்குமுத் தோள்களுந் தடமார்பினிற் பூண்கள்மேற்றிசை
விடங்கொள் கண்டமன்றே வினையேனை மெலிவித்ததே.

வைத்த பாதங்கள் மாலவன் காண்கிலேன் மலரவன்முடிதேடி
எய்த்து வந்திழுந்தின்னமும் துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்தத்தலைக் கமலம் மலர்ந்தோங்கிய தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட என்மனம் பதைபதைப் பொழியாதே

சித்தர் தேவர் இயக்கர் முனிவர் தேனார்பொழில் தில்லை
அத்தா அருளாய் அணியம் பலவா என்றென்றும் அவர் ஏத்த
முத்தும் மணியும் நிரந்த தலத்துள் முளைவெண் மதிசூடிக்
கொத்தார் சடைகள் தாழ நட்டம் குழகன் ஆடுமே.

காண்பதி யான்என்றுகொல் கதிர்மாமணி யைக்கனலை
ஆண்பெண் அருவுருவென்(று) அறிதற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ் தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்
மாண்புடை மாநடஞ்செய் மறையோன் மலர்ப்பாதங்களே

- திருவாலியமுதனார்

அரும்புனல் அலமருஞ் சடையினானை
அமரர்கள் அடிபணிந்(து) அரற்றஅந் நாள்
பெரும்புரம் எரிசெய்த சிலையின்வார்த்தை
பேசவும் நையும் என் பேதை நெஞ்சம்

கருந்தட மலர்புரை கண்ட வண்டார்
காரிகை யார்முன்(பு) என் பெண்மைதோற்றேன்
திருந்திய மலரடி நடையினாலே
தில்லையம் பலத்(து) எங்கள தேவதேவே!

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை உண்டார்தாம்
ஊனமிலா என்கை ஒளிவளைகள் கொள்வாரோ?
தேனல்வரி வண்டறையுந் தில்லைச் சிற்றம்பலவர்
நானமரோ என்னாதே நாடகமே ஆடுவரே

என்னை வலிவாரார் என்ற இலங்கையர்கோன்
மன்னும் முடிகள் நெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித் தில்லைச்சிற் றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவார் ஒவ்வார்இம் மூத்தரே.

சேயிழை யார்க்கினி வாழ்வரிது
திருச்சிற்றம் பலத்தெங்கள் செல்வனே! நீ
தாயினும் மிகநல்லை என்றடைந்தேன்
தனிமையை நினைகிலை சங்கரா உன்
பாயிரும் புலியத ளின்னுடையும்
பையமே லெடுத்தபொற் பாதமுங்கண்(டு)
ஏயிவள் இழந்தது சங்கம் ஆவா
எங்களை ஆளுடை ஈசனேயோ - புருடோத்தம நம்பி

அறவ னே!அன்று பன்றிப் பினேகிய
மறவ னே! எனைவாதைசெய் யேல்எனும்
சிறைவண் டார்பொழில் தில்லையு ளீர்!எனும்
பிறைகு லாம்நுதற் பெய் வளையே!

அன்று அருக்கனைப் பல்லிறுத்(து) ஆனையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீர்எனும்
தென்ற லார்பொழில் தில்லையு ளீர்! இவள்
ஒன்றும் ஆகிலள் உம்பொ ருட்டே - சேதிராயர்

திருச்சிற்றம்பலம்

***

பத்தாம் திருமுறை திருமந்திரம்

சிவனொடு ஒக்குந் தெய்வந் தேடினும் இல்லை
அவனொடுஒப் பார் இங்கு யாவரும் இல்லை
புலனங்கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்ந்தி அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

பிறப்பிலி பிஞ்ஞகன் பேர ருளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுயின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி (சு) ஈசன் அருள் பெறலாமே

சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை போற்றவல் லார்க்குக்
கனஞ்செய்த வாணுதல் பாகனும் அங்கே
இனஞ்செய்த மான்போல் இணங்கி நின் றானே.

அந்திவண்ணா அரனே! சிவனே! என்று
சிந்தை செய்வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண்ணா முதல்வா பரனே என்று
வந்தில் வண்ணன்எம். மனம்புகுந் தானே.

கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி
கண்டேன் க்ரியுரி யான்றன் கழலினை
கண்டேன் கமல மலர்உறை வான்அடி
கண்டேன் கழலதுஎன் அன்பினுள் யானே

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

ஆளும் மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளு மனத்தொடும் வைத்தொழிந் தேனே.

சிவன்சக்திசீவன் செறுமல மாயை
அவன்சேர்த்த பாசமலம் ஐந்து அகலச்
சிவன்சக்தி தன்னுடன் சீவனார் சேர
அவஞ்சேர்த்த பாசம் அணுககி லாவே

நமவென்னு நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவவென்னு நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்
பவமது தீரும் பரிசு மதற்றால்
அவமதி தீரும் அறும் பிறப்பன்றோ.

கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கையிரண் டெட்டும் பரந்தெழுந்
தேடு முகம்ஐந்து செங்கணின் மூவைந்து
நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே.

சக்தி சிவமாம் இலிங்கமே தாபரஞ்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்
சத்தி சிவமாம் இலிங்கமே சதாசிவஞ்
சத்தி சிவமாகுந் தாபரந் தானே.

தேவர் பிரானைத் திசைமுக நாதனை
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரானென் றிறைஞ்சுவா ரவ்வழி
யாவர் பிரானடி அண்ணலு மாமே.

உலகம தொத்துமண் ணொத்துயர் காற்றை
அலர்கதிர் அங்கியொத் தாதிப் பிரானும்
நிலவிய மாமுகில் நீரொத்து மீண்டச்
செலவொத் தமர்திகைத் தேவர்பி ரானே.

நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
அறம் பல எவ்வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்ற கிலாரே.

* * *

பதினோராம் திருமுறை

திருவாலவுடையார் அருளிய திருமுகப்பாசுரம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற(கு)
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

உருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாணப்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே - திருமுகப்பாசுரம்

எனக்கு இனிய எம்மானைட ஈசனை யான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்-எனக்கு அவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கு அரியது ஒன்று.

அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவி புனல் காற்றாவான் அவனே
இயமானனாய் அட்டமூர்த்தியமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம் பயின்று தாள் அருவி தூங்குதலால் ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளி சேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு

முடிமேற் கொடு மதியான் முக்கணான் நல்ல
அடிமேற்கொடு மதியோங் கூற்றைப் படிமேல்
குனிய வலமாம் அடிமை கொண்டாடப் பெற்றோம்
இனி அவலம் உண்டோ எமக்கு

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேல்
பொங்கரவம் வைத்து உகந்த புண்ணியனை ஆங்கொரு நாள்
ஆவா என்று ஆழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை

வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்கு
ஆதியனை ஆதிரை நன்னாளனைச் சோதிப்பான்
வல்லேன் மாய்ப்புக்க மாலவனும் மாட்டாது
கில்லேன் மா என்றான் கீழ்

தொல்லை வினை வந்து குழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் மெல்லியல் ஓர்
கூற்றானைக் கூற்றுருவம் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை

அடித்தலத்தில் அன்று அரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீ முரித்தவாறு என் முடித்தலத்தில்
ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ

- காரைக்கால் அம்மையார்

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச் சிற்றம்பலமே நண்ணாமுன் நன்நெஞ்சே
தில்லைச்சிற்ற றம்பலமே சேர்

இழவாடிச் சுற்றத்தார் எல்லாருங் கூடி
விழவாடி ஆவி விடாமுன்னம் மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்று அயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை

என் நெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால் வன்னெஞ்சேய்
மாகம்பத்து ஆனை உரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு - ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

விரிகின்ற ஞாயிறு போன்றது மேனி அஞ் ஞாயிறு (ஞுழ்ந்து)
எரிகின்ற வெங்கதிர் ஒத்தது செஞ்சடை அச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டம் அக்காரிருட் கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுள தால் எந்தை ஒண்பொடியே

சங்கரன் சங்கக் குழையன் சரணார விந்தத் தன்னை
அங்கரம் கூப்பித் தொழுதாட் படுமின் தொண்டீர் நமனார்
கிங்கரர் தாம் செய்யும் கீழா யினமிறை கேட்டலுமே
இங்கரம் ஆயிரம் ஈர என் நெஞ்சம் எரிகின்றதே

எம் இறை வன் இமையோர் தலை வன் உமையாள் கணவன்
மும்முறையாலும் வணங்கப் படுகின்ற முக்கண் நக்கற்கு
எம்முறை யாள் இவள் என்பிழைத் தாட்கிறை என்பிழைத்தான்
இம்முறையாலே கவரத் கருதிற்று எழிற்கலையே

பொய்யா நரகம் புகினுந் துறக்கம் புகினும் புக்கிங்கு
உய்யா உடம்பினோ (டு) ஊர்வ நடப்ப பறப்ப என்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான்மறை சேர்
மையார் இடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே.
- சேரமான் பெருமாள் நாயனார்

அரணம் ஒரு மூன்றும் ஆரழலாய் வீழ
முரண் அம்புகோத்த முதல்வன் - சரணமே
காணுமால் உள்ள வன்றன் காளத்தி கைதொழுது
பேணுமால் உள்ளம் பெரிது.

கணக்கிட்டுக் கொண்டிருந்து காலனார் நம்மை
வணக்கி வலைப்படா முன்னம் பிணக்கின்றிக்
காலத்தால் நெஞ்சே கயிலாயம் மேவியநற்
சூலத்தான் பாதந்தொழு.

வரமாவ தெல்லாம் வடகயிலை மன்னும்
பரமாஉன் பாதார விந்தம் சிரமார
எற்றிடும்போ தாகவந் தென்மனத்தில் எப்பொழுதும்
வைத்திடுநீ வேண்டேன்யான் மற்று

அடியும் முடியும் அரியும் அயனும்
படியம் விசும்பும்பாய்ந் தேறி நொடியுங்கால்
இன்ன தெனஅறியா இங்கோயே ஓங்காரம்
அன்னதென நின்றான் மலை.

வழுகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி பழகி
எழுந்ததெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்ததெழுந்த செஞ்சடையான் குன்று - நக்கீரதேவ நாயனார்

அந்தி மதிமுகிழான் அந்தியஞ் செந்நிறத்தான்
அந்தியே போலும் அவிர்சடையான் அந்தியில்
தூங்கிருள்சேர் யாமமே போலும் சுடுநீற்றான்
வீங்கிருள்சேர் நீல மிடறு.

தேவனைப் பூதப் படையனைக் கோதைத் திருவிதழிப்
பூவனைக் காய்சினப் போர்விடை தன்னொடும் போற்றநின்ற
மூவனை ஈருரு வாயமுக் கண்ணனை முன்னுமறை
நாவனை நான்மற வேன்இவை நான்வல்ல ஞானங்களே

மாலை ஒருபால் மகிழ்ந்தானை வண்கொன்றை
 மாலை ஒருபால் முடியானை மாலை
ஒளியானை உத்தமனை உண்ணாநஞ் சுண்டற்
 கொளியானை ஏத்தி உளம்

விரையார் புனற்கங்கை சேர்சடையான் பொன்னார்
 விரையார் பொழிறபுறந்தை மேயான் விரையாநீ(று)
என்பணிந்தான் ஈசன் இறையான் எரியாடி
 என்பணிந்தான் ஈசன் எனக்கு

பண்பாய நான்மறையான் சென்னிப் பலிதேர்ந்தான்
 பண்பாய பைங்கொன்றைத் தார்அருளான் பண்பால்
திருமாலு மங்கைச் சிவற்கடிமை செய்வான்
 திருமாலு மங்கைச் சிவன் - கபில தேவ நாயனார்

ஒன்றுரைப்பீர் போலப் பலஉரைத்திட் டுழையாதே
 ஒன்றுரைப்பீர் ஆயின் உறுதுணையாம் ஒன்றுரைத்துப்
பேரரவம் பூண்டு பெருந்தலையில் உண்டுழலும்
 பேரரவம் பூணும் பிரான்

உற்றுரையாய் நன்னெஞ்சே ஓதக் கடல் வண்ணன்
 உற்றுரையா வண்ணம்ஒன் றானானை உற்றரையா
ஆனை உரித்தானை அப்பனை எப்பொழுதும்
 ஆனையுரித் தானை அடைந்து.

மாயனைஓர் பாகம் அமர்ந்தானை வானவரும்
 மாயவரு மால்கடல்நஞ் சுண்டானை மாய
வருவானை மாலை ஒளியானை வானின்
 உருவானை ஏத்தி உணர்

வாய்த்த அடியார் வணங்க மலரோன்மால்
 வாய்த்த அடிமுடி யுங்காணார் வாய்த்த
சலந்தரனைக் கொன்றிட்டுச் சங்கரனார் என்னோ
 சலந்தரனாய் நின்றவா தாம்.

மதியாருஞ் செஞ்சடையான் வண்கொன்றைத் தாரான்
மதியாரும் மாலுடைய பாகம் மதியாரும்
அண்ணா மலைசேரார் ஆரோடுங் கூடாகி
அண்ணா மலைசெர் வரால்

தீயான மேனியனே செம்பவளக் குன்றமே
தீயான சேராமற் செய்வானே தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராய் என்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர்.
-பரணதேவ நாயனார்

இதுநீர் ஒழிமின் இடைதந் துமைஇமை யத்தரசி
புதுநீர் மணத்தும் புலியத ளேஉடை பொங்குகங்கை
முதுநீர் கொழித்த இளமணல் முன்றில்மென் றோட்டதிங்கட்
செதுநீர் ததும்பத் திவளஞ்செய் செஞ்சடைத் தீவண்ணரே.

நெறிவிரவு கொன்றை நெடும்படற்கீழ்க் கங்கை
எறிதிரைகள் ஈர்த்தெற்ற ஏறிப் பொறிபிதிர
ஈற்றராக் கண்படுக்கும் இண்டைச் சடைச்செங்கண்
ஏற்றரால் தீரும் இடர்

பொருளாக யான் இரந்தால் புல்லருக்கின் போது
அருளாய்மற் றல்லாதார் வேண்டின் தெருளாத
பான்மறா மான்மறிக்கைப் பைங்கட் பகட்டுரியான்.
தான்மறான் பைங்ககொன்றைத் தார்.
இளம்பெருமானடிகள்

நானே பிறந்த பயன்படைத் தேன்அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகிஎன் தீமையெல்லாம் அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

மானும் மழுவும் திருமிடற்றில் வாழும் இருள்
தானும் பிறையும் தரித்திருக்கும் வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி.

மெய்த்தொண்டர் செல்லும் நெறிஅறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண் டுவந்திலன் உண்பதற்கே
பொய்த் தொண்டு பேசிப்புறம்புற மே உன்னைப் போற்றுகின்ற
இத்தொண்டே னேன்பணி கொள்ளுதி யோகச்சி ஏகம்பனே

தருக்கவற் றான்மிக்க முப்புரம் எய்தஎன் தன்தலையை
நெருக்கவற் றோட மழுவாள் விசைத்தது நெற்களென்றும்
பருக்கவற் றாங்ச்சி ஏகம்பர் அத்தர்நம் பாம்புகளின்
திருகவற் றாலிட் டருளும் கடகத் திருக்கரமே.

சென்றேறி விண்ணுறும் அண்ணா மலைதிகழ் வல்லம்மென்யூ
வின்றேறல் பாய்திரு மாற்பேறு பாசூர் எழில் அழுந்தூர்
வன்றே ரவன்திரு விற்பெரும் பேறு மதில்ஒற்றியூர்
நின்றேர் தருகச்சி ஏகம்பம் மேயார் நிலாவியவே.

கல்லாப்பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழரப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

நல்கும் புகழ்க்கட லூர்நன் மறையவன் உய்யநண்ணிக்
கொல்நின்ற கூற்றைக் குமைத்தவெங் கூற்றும் குளிர்திரைகள்
மல்குந் திருமறைக் காட்டமிர் தென்றும் மலைமகள்தான்
புல்கும் பொழிற்கச்சி ஏகம்பம் மேவிய பொன்மலையே.

நிலாவு புகழ்த்திரு வோத்தூர் திருவாமாத்தூர் நிறைநீர்
கலாவு சடையோன் புலிவலம் வில்வெங் கொச்சை தொண்டர்
குலாவு திருப்பனங் காடுநன் மாகறல் கூற்றல் வந்தால்
அலாயென் றடியார்க் கருள்புரி ஏகம்பர் ஆலயமே
- பட்டினத்துப் பிள்ளையார்.

மாயவன் முந்நீர்த் துயின்றவன் அன்று மருதிடையே
போயவன் காணாத பூங்கழல் நல்ல புலத்தினர் நெஞ்
சேயவன் சிற்றம பலத்துள்நின் றாடுங் கழல்எவர்க்கும்
தாயவன் தன்பொற் கழல்என் தலைமறை நன்னிழலே.

உண்டேன் அவரருள் ஆரமிர் தத்தினை உண்டலுமே
கண்டேன் எடுத்த கழலும் கனலும்க வித்தகையும்
ஒண்தேன் மொழியினை நோக்கிய நோக்கும் ஒளிநகையும்
வண்தேன் மலர்த்தில்லை அம்பலத் தாடும் மணியினையே

விளைவைத் தளர்வித்த விண்டுவும் தாமரை மேல் அயனும்
அளவிற் கறியா வகை நின்ற அன்றும் அடுக்கல் பெற்ற
தளர்வில் திருநகை யாளும்நின் பாகங்கொல் தண்புலியூர்க்
களவிற் கனியுரை யுங்கண்ட வார்சடைக் கங்கையனே.

பொடியேர் தருமே னியன் ஆகிப் பூசல் புகஅடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு கோயிற் கருவியில்லா
வடியே படஅமை யும்கணை என்ற வரகுணன் தன்
முடியே தருகழல் அம்பலத் தாடிதன் மொய்கழலே

நண்ணிய தீவினை நாசஞ் செலுத்தி நமனுலகத்
தெண்ணினை நீக்கி இமையோர் உலகத் திருக்கலுற்றீர்
பெண்ணினொர் பாகத்தன் சிற்றம் பலத்துப் பெரநடனைக்
கண்ணினை யார்தரக் கண்டுகை யாரத் தொழுமின்களே

- நம்பியான்டார் நம்பி

திருசிற்றம்பலம்

***

சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த பன்னிரண்டாம் திருமுறை

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்தே
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

அண்ணா மலைஅங் கமரர்பிரான் வடிவு போன்று தோன்றுதலும்
கண்ணால் பருகிக் கைதொழுது கலந்து போற்றும் காதலினால்
உண்ணா மலையாள் எனனும் பதிகம் பாடித்தொண்டர் உடன்போந்து
தெண்ணீர் முடியார் திருவண்ணாமலையைச் சென்று சேர்வுற்றார்

ஆதியாய நடுவு மாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் கணர்வுமாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதநடம் போற்றி போற்றி.

மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனின் உலகர்முன் வருகென உரைப்பார்.

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டே லுன்னையென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் னடியின்கீ ழிருக்கவென்றார்.

திருச்சிற்றம்பலம்

* * * * *

ஸ்ரீ அபிராமி பட்டர் அருளிச்செய்த
ஸ்ரீ காலஸம்ஹார மூர்த்தி பதிகம்

அந்த ரத்தமரர் மந்த ரத்தையொலி
அலைக டற்றரை நிறுத்தி நின்று
அழலு றக்கடைய அதனி டத்துடைய
அமுத முற்றடையும் அண்ணலார்
கந்த ரத்திடை கறுப்பி னார்கவுரி
கண்க ளித்திடு முறுப்பினார்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
பந்தம் ஆசையவ மான நிந்தையோடு
பழிப்ப சத்திய மனப்பயம்
படிறு வஞ்சனை அனர்த்தமா கொடுமை
பாப மீறுகொலை சஞ்சலம்
தொந்த மோகம்அவி வேக மாக சதி
துயர மூடமுழு வைரநீள்
தோதகங் குடிலம் அவகுணந் தவறு
சோகமுந் தவிரு வார்களே 1
வெங்க யத்துரியர் பங்க யர்க்கரியர்
வேத வாம்பரியர் தீதிலர்
வீரர் விஞ்சுகர் விநோதர் கஞ்சுகர்
வெற்றிமால் மகிழும் அத்தனார்
கங்கணத்தர்மிகு வெங்க ணத்தலைவர்
களத்தி சைந்தபொருநிர்த்தனர்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
திங்கள் வெண்குடை கவிப்ப மும்முரசு
சென்று சென்றெதிர் ஒலிப்ப எண்
திசை புரக்குமனர் கைமுகிழ்ப்ப இகல்
எவ்வருந் திறைய யளப்பமே
மங்கை மார்கவரி கால சைப்பநெடு
மகர தோரண வளப்பமாய்
மத்த யானைமிசை வெற்றி யாளரென
வைய கந்தனில் இருப்பரே. 2

திருகு வெள்ளெயிறு வரிநெ டுங்கயிறு
செய்ய குஞ்சியொடு நஞ்செனச்
சீறு கோபமுடன் ஏறு தீபவிழி
தெறும்இடிக்குரல்மு ழக்கியே
கருமலைக்குநிகர் எருமை யிற்பெரிய
கால்மலைக் குவடுபோல் வருங்
கால காலகடவூ ரா கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
பெரும முப்படை இலங்கு செஞ்சடை
பொருந்து வெள்விடை திருந்துவெண்
பூதி யாகமொடு தோகை பாகமழல்
பொங்கு நாகமணி கங்கணம்
பெருகு கங்கைநதி முடி விளங்குவதி
பிஞ்சு மாமதி கொழுந்தழல்
பெய்த பெற்றிபெறும் ஒற்றை நெற்றிவிழி
பெற்றி ருப்பர்அடை யாளமே 3

பெண்ணி டும்பரி புரத்தி னாரொலி
பிறந்தி டும்பரி புரத்தினார்
பிறைமு டிக்குளணி கங்கை யார்மறைப்
பொருளை வைத்துளணி கங்கையார்
கண்ணி சைந்ததொரு மூன்றினா ருரிய
கயிலை தாழநக மூன் றினார்
கால காலகடவூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
மண்ண ளந்தச ரணர்க்கு மென்முளரி
மாலை யாபர ணர்க்குமோர்
வச்சி ரத்திறை வருக்கும் எண் திகிரி
மாத்தி ரத்துறை வருக்குமே
விண்ண வர்க்குமிகு பண்ண வர்க்குமுயர்
வித்த கர்க்குமதி யொத்துவாழ்
மெய்த்த வத்துநிலை பெற்ற வர்க்குமவர்
மேலி ருப்பர் அடையாளமே 4

உரகு குண்டலர் நெருங்கி விண்டலர்
உறைந்த வண்டுமுரல் கொன்றையார்
உத்த ரீகமல ரொப்பி லாதசிலை
ஒத்த நெற்றிமுலை மங்கையார்
கரக பாலர்திரி சூலர் நீலமணி
கண்டர் புண்டரிக ஆடையார்
கால காலகட வூரர் கோலமது
கண்டு தண்டனிட வல்லபேர்
விரக மானதில் உணங்கிடார் உலகை
வேண்டி ஈனரை வணங்கிடார்
வெகுளி யானது செறிந்திடார் உடல்
வேதனைப்பட அறிந்திடார்
நரக மென்பதினி எய்திடார் கருமம்
நல்ல(து) அல்லதவர் செய்திடார்
நமனிருந்த ததிசை கண்டிடார் இறுதி
நாளுமே பகுதி யாவரே 5

துலைநி றுக்குமொரு வணிக னுக்குமது
சூத னுக்குமநு நீதிசேர்
தொல் புவிக்கரச னுக்குமிக் கதமிழ்
சொல்லு மோர்புலவ னுக்குமெய்க்
கலையனுக்குமதி நடுவ னுக்குமுனி
காத லர்க்குமினி தருள்செயுங்
கால காலகட வூரர் மேவிவளர்
கயிலை போலவரு மயிலனர்
முலைய ரும்பிவரு பனசமே இனிய
மொழியும் இன்பமுறு வனசமே
முத்தை யொத்தமணி மூரனே அளிகள்
மொய்த்த தோள்களின் வேரலே
சிலையி ரண்டனைய புருவமே இரதி
தேவி யொத்தவள் உருவமே
திருமிடற் றழகு சங்கமே அமுது
சிந்து மாணடிபு சங்கமே. 6

விதிசி ரத்தையரி பழியர் அஞ்சுகணை
வேளுரத் தையெரி விழியர்மா
மேருவிற் கையினர் நேர்கடுக் கையினர்
வேள்வியிற் பணியும் வள்ளலார்
கதிர வன்றனது தந்தம் அம்புவியில்
உதிர வன்பொடு புடைத்திடும்
கால காலகடவூரர் மேவிவளர்
கயிலை போலவரு மயிலனார்
மதியில் நஞ்சமு மிருக்குமோ கரிய
மஞ்சு மாலிகை கரிக்குமோ?
வாளரா அமுதம் ஊறுமோள? கனக
வரையிலே புளக மீறுமோ?
எதிர்கலன்பல திருத்துமோ? இடையில்
இலகுமே கலைபொ ருத்துமோ?
விளங்கு தோட்கழை வியக்குமோ? இனிமை
விண்டசொற்கழை விளங்குமே. 7

இகல றிந்துவரு பகையி னார்புரம்
எரித்திடுங் கொடிய நகையினார்
எரிம ழுப்படை வலத்தினார் முடியில்
ஏறு மீறிய சலத்தினார்
சுகன மண்டலமும் உருவி நின்றுவிதி
காணொ ணாததொரு தாணுவார்
கால காலகட வூரர் மேவிவளர்
கயிலை போலவரு மயிலனார்
முகம திக்குவமை புகலுவார் அளிகள்
மொய்குழற் குவமை நுவலுவார்
முலையி னுக்குவமை பகருவார் இனிய
மொழியி னுக்குவமை மொழிகுவார்
நகையி னுக்குவமை கூறுவார் சரண
நடையி னுக்குவமை பேசுவார்
நயமறிந் திளமை சொல்லுவார் எவரம்
நடுவ றிந்தவர்கள் இல்லையே 8

சிறைய னந்தர்நறை யெழுவனத் தர்இவர்
தினமத் திடைதி யானமே
செய்து தங்கள்வரம் எய்து தற்குரிய
தேவ தேவர்பரி பூரணர்
கறையிடற் றலைவர் அலைகடற் பரியர்
கதிதரும் குரவை வெருவிலார்
கால காலகட வூரர் கோலமது
கண்டு கைதொழுது கொண்டுகாண்
எறிதி ரைப்பறை முழுக்கி அங்கைதனில்
இக்கு வார்சிலைவ ணக்கிநீள்
இரு தலைக்குமளி நரி றுக்கிமுன்
எழுந்து மீசையை முறுக்கிவேள்
வெறிம லர்க்கணை யெடுத்ததுங் கொடிய
வேக மாயது தொடுத்ததும்
மெய்யி னிற்பட விடுத்ததுஞ் செவியில்
விண்டுள விண்டுசொல வேணுமோ?

குயில்மொ ழிப்புர் முலைக்கருங் கணொடு
கோதை பாதியுறை ஜோதியார்
கொக்க ரித்துவரு தக்க னாருயிர்
குறைத்தெ முந்திடு மறத்தினார்
கயிலை நாதர்கண நாதர் பூதியணி
காய தாயகமு மாயினார்
கால காலகட வூரர் கோலமது
கண்டு கைதொழுது வண்டுகாள்
அயலி னுங்கொடிய அம்பினால் மதுர
ஆர வாரமிசை வேயினால்
அந்த ரந்தனில் அசைந்து நின்(று) அடரும்
அம்புலிக் கொடிய தீயினால்
துயில்து றந்துமெய் மறந்து வாடிமிக
சோக மோகம் பிந்துளத்
தோதகப் படவும் நானகப் படுதல்
சொல்லுவீர் மதளை வெல்லவே.

ஸ்ரீ சிவத்துதித் துளிகள்

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் புதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில்நின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலும் இசையும் அணிந்தருளே.

அன்பெனும் பிடியுள் அனப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புருவாம் பர சிவமே

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரே மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்த வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான் மறவேனே.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்து கின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்த பெருந் தெய்வம்

காயாகி கனியாகிச் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றும் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக எனைவளர்க்கும் தெய்வமாக தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல் கனிந்த கனியே
ஓடையிலே யூருகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே -வள்ளலார்

பரமன்நீ என்று பணிந்துருகிப் பாடி
கரம் சேர்த்துநீர்சோரக் கண்கள் - வரங்கேட்ட
என்னவா வின்படியே ஈந்தாய் இதற்கருணை
மன்னவா காணேன்கைம் மாறு

என்ன தவப்பயனோ ஏழையேற் கென்றறியேன்
முன்னமறை காணாத முக்கண்ணா - நின்னையே
தேடுகைக்கும் சோணகிரித் தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன் - குகை நமச்சிவாயர்

உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால் எப்பொழுதும்
உன்னைக்கண்டு எல்லாமும் உன்னுருவாய் - அன்னியமல்
அன்புசெயும் அன்னோன் அருணாசலாவெல்கும்
இன்புருவாம் உன்னில ஆழ்ந்தே!

அண்ணா மலையுனை எண்ணான் எனஎனை
அண்ணாந்து ஏங்கிட எண்ணாதே
மண்ணா மலவுடல் எண்ணா அகமென
மண்ணா மாய்ந்திட வொண்ணாதே

தண்ணார் அளிசெறி கண்ணாடு ஒருகிறி
பண்ணாது என்னிரு கண்ணாளா
பெண்ணான் அலியுரு நண்ணா வொளியுரு
வண்ணா என்னக நண்ணாயே!

கருணையால் என்னை ஆண்டநீ எனக்குன்
காட்சிதந்து அருளிலை என்றால்
இருள்நலி உலகில் ஏங்கியே பதைத்துஇவ்
உடல்விடில்என் கதியென்னாம்

அருணனைக் காணாது அலருமோ கமலம்
அருணனுக்கு அருணனாம் அன்னி
அருணன்(இ)னி சுரந்தங்கு அருவியாய்ப் பெருகும்
அருணன்மா மலையெனும் அன்பே!

- மஹான்ரமண மஹரிஷி

தந்தை தாயும்நீ என்னுயிர்த் துணையும்நீ சஞ்சல மது தீர்க்க
வந்த தேசிக வடிவும்நீ உனை அலால் மற்றொரு துணைகாணேன்
அந்தம் ஆதியும் அளப்பருஞ் சோதியே ஆதியே அடியார்தம்
சிந்தைமேவிய தாயுமா னவனெனும் சிரகிரிப் பெருமாளே

- தாயுமானவர்

அஞ்சசெழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தா ல்அர்ச்சித் து இதயத்தில் - அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமம் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனாம் சேடனாம் அங்கு!

- சிவஞான போதம்

சிவமே சிவமாக யானினைந்தாற் போல
சிவமாகி யேயிருப்ப தன்றிச் சிவமென்று
உணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி

- திருக்களிற்றுப்படியார்

நமச்சிவாய அஞ்செழுத்தும் நிற்குமே நிலைகளும்
நமச்சிவாய மஞ்சுதஞ்சுபு ராணமான மாய்கையை
நமச்சிவாய அஞ்செழுத்தும் நம்முள்ளே இருக்கவே
நமச்சிவாய உண்மையை நன்குரைசெய் நாதனே!

-சிவவாக்கியர்

மானாட மழுவாட மதியாடப் புனலாட மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட மறைதந்த பிரம்மனாட
கோனாட வானுலக கூட்டமெல்லாமாட குஞ்சர முகத்கனாட
குண்டல மிரண்டாட தண்டை புலியுடையாட குழந்தைமுருகேசனாட
ஞான சம்பந்தரோடு இந்திரர் பதினெட்டு முனியாட பாலகருமாட
நரைதும்பை யறுகாட நந்தி வாகனமாட நாட்டியப் பெண்களாட
வினையோட உனைபாட எனைநாடி இதுவேளை விருதோடு ஆடிவருவாய்
ஈசனே சிவகாமிநேசனேஎனைஈன்ற தில்லைவாழ் நடராஜனே

- நடராஜப்பத்து

பூவண்ணம் பூவின் மணம் போல மெய்போத மின்பம்
ஆவண்ணம் மெய்கொண்டு அவன்தன்வலி ஆணைதாங்கி
மூவண்ணறன் சந்நிதி முத்தொழில் செய்ய வாளா
மேவண்ணல் அன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

பூவில் நாயகன் பூமகள் நாயகன்
காவின் நாயகன் ஆதிக் கடவுளர்க்(கு)
ஆவி நாயகன் அங்கயற்கண்ணிமா
தேவி நயகன் சேவடி ஏத்துவாம்
உண்மைஅறிவு ஆனந்த உருவாகி
எவ்வுயிர்க்கும் உயிராய் நீரின்
தண்மை. அனல் வெம்மையெனத் தனை அகலாது
இருந்து சரா சரங்கள் ஈன்ற
பெண்மைஉரு ஆகியதன் ஆனந்தக்கொடி
மகிழ்ச்சி பெருக யார்க்கும்
அண்மையதாய் அம்பலத்துள் ஆடியருள்
பேரொளியை அகத்துள் வைப்பாம்!

-பரஞ்சோதிமுனி

மங்களத் துளிகள்

நமஸ்தே நமஸ்தே விபோ விஸ்வ மூர்ததே
    நமஸ்தே நமஸ்தே சிதா நந்த மூர்த்தே
நமஸ்தே நமஸ்தே தபோ யோக கம்ய
    நமஸ்தே நமஸ்தே ச்ருதிக் ஞான கம்ய. 1

கைலாஸ வாஸிநம் சம்பும் ஜ்யோதிர்மண்டலமத்யதம்
    தபோ மூர்த்திம் மஹாதேவம் சங்கரம் சரணம் வ்ரஜே
தேவானாம் ஈச்வரம் சம்பும் லோகத்ரய விபூஷணம்
    தேவ தேவம் த்ரயீ மூர்த்திம் சங்கரம் சரணம் வ்ரஜே.
அவித்யா க்ரஸ்த ஜீவானாம் ஞானதம் முக்திதம் சிவம்
    ஜடத்வாதி நிவிருத்யர்த்தம் சங்கரம் சரணம் வ்ரஜே
அஷ்டமூர்த்திதரம் சம்பும் சுபகர்மபலப்ரதம்
    சாந்தம் சிவம் சுபம் சுத்தம் சங்கரம் சரணம் வ்ரஜே.

பஞ்சப்ரஹ்மாத்மகம் சம்பும் பஞ்சபாண நிவர்த்தகம்
    பஞ்ச ச்லோகைக ஸ்துதம் தேவன் சங்கரம் சரணம் வ்ரஜே. 2

பவாய சந்திர சூடாய நிர்கணாய குணாத்மனே
    காலகாலாய ருத்ராய நீலக்ரீவாய மங்களம்
வ்ருஷபாரூடாய பீமாய வ்யாக்ர சர்மாம பராயச
    பசூனாம்பதயே துப்யம் கௌரீகாந்தாய மங்களம்
பஸ்மோத்தூளிக தேஹாய வியானபஜ்ஞோப வீதினே
    ருத்ராக்ஷமாலா பூஷாய வியோமகேசாய மங்களம்
ஸூர்ய சந்த்ராக்னி நேத்ராய நம: கைலாஸ வாஸிநே
    ஸச்சிதானந்த ரூபாய பரமதேசாய மங்களம்

ம்ரத்யுஞ்ஜயாய ஸாம்பாய ஸ்ருஷ்டி ஸ்திதிதவன் த காரிணே
    த்தியம்பகாய ஸாந்தாய த்ரிலோகேசாய மங்களம்.
கங்காதாராய ஸோமாய நமோ ஹரிஹராத்மனே
    உக்ராய த்ரிபுரக்கினாய வாமதேவாய மங்களம்
ஸத்யோஜாதாய சர்வாய பவ்யஜ்ஞான ப்ரதாயினே
    ஈசானாய நமஸ்துப்யம் பஞ்ச வக்த்ராய மங்களம்

ஸதாசிவ ஸ்வரூபாய நமஸ்தத் புருஷாயச
அகோராயச கோராய மஹாதேவாய மங்களம்
ஸ்ரீ சாமுண்டா பிரேரிதேன ரசிதம் மங்களாஸ்பதம
தஸ்யாபீஷ்ட த்ரதம் சமப்யோ ய:படேன் மங்களாஷ்டகம் 3

வாழ்க அந்தணத் வானவர் அனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஒங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே -சம்பந்தர்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
போதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி
-சேக்கிழார்

கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்குழல் போற்றி போற்றி
- பெரியபுராணம்

வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணருள்ளத் தொறுஞ்
சென்றுளே அமுதம் ஊற்றும் திருவருள் போற்றி ஏற்றுக்
குன்றுளே இருந்துகாட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி ஆடும் மறைச்சிலம்படிகள் போற்றி
மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகமெல்லாம் பரவலன் செங்கோல் வாழ்க
- திருவிளையாடற்புராணம்

வாழியென் ஆண்டவன் வாழிஎங் கோனருள் வாய்மையென்றும்
வாழியெம் மான்புகழ் வாழியென் நாதன் மலர்ப்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு
வாழியில் வையமும் வானமும் மற்றவும் வாழியவே

-வள்ளலார்

மன்னுக தில்லை! வளர்கநம் பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல!
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து பவனி யெல்லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமைகோள் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

-சேந்தனார்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே

- திருமந்திரம்

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சிவாய புறம் எனைப் போக்கல் கொண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி!

ஆடக் மதுரை அரசே போற்றி!
இடரைக் களையும எந்தாய் போற்றி!
ஈச போற்றி இறைவ போற்றி!
முத்தா போற்றி முதல்வா போற்றி!
அத்தா போற்றி அரனே போற்றி!
அண்ணாமலையெம் அண்ணா போற்றி!
கண்ணார் அமுதக்கடலே போற்றி!
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி!
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

அஞ்சேல் என்றுஇங்கு அருளாய் போற்றி!
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி!
அத்தா போற்றி ஐயா போற்றி!
நித்தா போற்றி நிமலா போற்றி!

பத்தா போற்றி பவனே போற்றி!
திருக்கழுக்குன்றிற் செல்வா போற்றி!
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி!
ஆராவமுதே அருளே போற்றி!
புரம்பல எரித்த புராண போற்றி!
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி!
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி! போற்றி! சய சய போற்றி!

- திருவாசகம்

சங்கரனே நின்பாதம் போற்றி! போற்றி!
சதாசிவனே நின்பாதம் போற்றி! போற்றி!
பொங்கரவா நின்பாதம் போற்றி! போற்றி!
புண்ணியனே நின்பாதம் போற்றி! போற்றி!
அங்கமலத்(து) அயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி! போற்றி!
செங்கமலத் திருப்பாதம் போற்றி! போற்றி!
திருமூலட்டானனே போற்றி! போற்றி!

-திருநாவுக்கரசு நாயனார்

அன்பருக் கன்பா போற்றி அயனும் அரியும் ஆகித்
தென்புலக் குறைவு நீங்கச் சிவமென நிறைந்தாய் போற்றி!
முன்பிலா நடுவும் இல்லா முடிவிலாப் பிரமம் ஆன
இன்பமே திருக்குற்றலாத் திறைவனே போற்றி! போற்றி!

- திருக்குற்றால குறவஞ்சி

வையம்நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம்தழைத் தோங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்மறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

- சுந்தபுராணம்

- திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சாம்ப பரமேஸ்வர பூஜா விதானம்
ஸ்ரீ மஹாகணபதி ஸங்க்ரஹ பூஜை

முதலில் ஆசமனம் செய்யுவம். (கையில், புஷ்பம். அக்ஷதை எடுத்துக் கொண்டு) சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே (என்று சொல்லிக் கொண்டே குட்டிக் கொள்ளவும்).

ப்ராணாயாமம் : ஓம் பூ: ஓம் புவ: ஓம் சுவ: ஓம் மஹ: ஓம் ஜனக: ஓம் தப: ஓம் சத்யம் ஓம் தத்சவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹிம் தியோ யோந: ப்ரசோதயாத் ஓமாப: ஜ்யோதீரச: அம்ருத ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்.

ததேவ லக்னம் ஸுதினம் ததேவ தாராபலம் சந்த்ரபலம் ததேவ வித்யாபலம் தெய்வபலம் ததேவ லக்ஷ்மீபதே தேங்க்ரியுகம் ஸ்மராமி.

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் கரிஷ்யமாணஸ்ய கர்மன: அவிக்னேன பரிஸமாப்த்யர்த்தம் - ஆதௌ மஹாகணபதி பூஜாம் கரிஷ்யே (உத்தரணியால் ஜலம் எடுத்து கைகளை துடைத்துக் கொள்ளவும்) (மஞ்சள் பிள்ளையார் செய்து கையில் புஷ்பம் அக்ஷதை எடுத்துக் கொண்டு)

மந்திரம் : ஓம் கணாணாம் த்வா கணபதிகும் ஹவாமஹே கவிம் கவீனாம் முபமஸ்த்ரவஸ்தமம் ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே ஆன: ச்ருண்வன் ஊதிபி: ஸீத ஸாதனம்.

அஸ்மின் ஹரித்ராபிம்பே ஸுமுகம் மஹாகணபதிம் த்யாயாமி, அவாஹயாமி, ஆஸனம் ஸமர்ப்பயாமி, பதயோ: பாத்யம் ஸமர்ப்பயாமி, அர்க்யம் ஸமர்ப்பயாமி, ஆசமனீயம் ஸமர்ப்பயாமி, ஸ்நாபயாமி, ஸ்நாநானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி - வஸ்த்ரார்த்தம் ஆக்ஷதான் ஸமர்ப்பயாமி, உபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி, ஆபரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி, திவ்ய பரிமள கந்தான் (சந்தனம்) தாரயாமி, ஹரித்ராசூர்ணம் (குங்குமம்) ஸமர்ப்பயாமி, அக்ஷதான் ஸமர்ப்பயாமி, புஷ்பை: பூஜயாமி.

அர்ச்சனை : ஓம் ஸுமுகாய நம: ஓம் ஏகதந்தாய நம: ஓம் கபிலாய நம: ஓம் கஜகர்ணகாய நம: ஓம் லம்போதராய நம: ஓம் விகடாய நம: ஓம் விக்னராஜாய நம: ஓம்விநாயகாய நம: ஓம் தூமதேகவே நம: ஓம் கணாத்யக்ஷாய நம: ஓம் பாலசந்த்ராய நம: ஓம் கஜானனாய நம: ஓம் வக்ரதுண்டாய நம: ஓம் சூர்பகர்ணாய நம: ஓம் ஹேரம்பாய நம: ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம: ஓம் மஹாகணபதயே நம: நானாவித பரிமளபத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி, தூப தீபார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி.

நைவேத்யம் : ஓம் பூர்ப்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோன: ப்ரசோதயாத் தேவஸவித: ப்ரஸுவ ஸத்யம் த்வர்த்தேன பரிஷிஞ்சாமி, அம்ருதோ பஸ்தரணமஸி ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யானாய ஸ்வாஹா, ஓம் உதானாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹ். ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மண்ய ஆத்மா அம்ருதத்வாய மஹாகணபதயே நம: கதளீ பலம் நிவேதயாமி மத்யே மத்யே பானீயம் ஸமர்ப்பயாமி. மஹா நைவேத்யம் நிவேதயாமி. நிவேதானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி, அம்ருதாபிதானமஸி.

தாம்பூலம் : பூகி பலஸமாயுக்தம் நாகவல்லீ தளைர்யுதம் கர்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூல் ம்ப்ரதிக்ருஹ்யதாம் மஹா கணபதயே நம: தாம்பூலம் ஸமர்ப்பயாமி. கர்ப்பூர நீராஜனம் தர்சயாமி மஹா கணபதயே நம: நீராஜனாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. ஸமஸ்தோபசாரன் ஸமர்ப்பயாமி.

ப்ரார்த்தனை : வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரபா நிர்விக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா (நமஸ்காரம்) (பூஜை செய்த புஷ்பத்தை எடுத்து கண்ணில் ஒத்திக் கொள்ளவும்).

விக்னேஸ்வர பூஜை ஸமாப்தம். இனி ப்ரதான பூஜை ஆரம்பம்.

❊❊❊❊

ஸ்ரீ சாம்ப பரமேஸ்வர பூஜைக்கான ப்ரதான ஸங்கல்பம்

சங்கல்பம் : சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே (என்று சொல்லிக் கொண்டே குட்டிக் கொள்ளவும்)

ப்ராயணாயாமம் : ஓம் பூ: ஓம் புவ: ஓம் சுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓம் சத்யம் ஓம் தத்சவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹிம் தியோ யோந: ப்ரசோதயாத் ஓமாப: ஜ்யோதீரச: அம்ருத ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்.

சங்கல்பம் : மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஸுபே சோபனே முஹுர்த்தே ஆத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே ச்வேத வராஹ கல்பே வைவஸ்வத மன்வந்த்ரே, அஷ்டாவிம்சதி தமே, கலியுகே, ப்ரதமே பாதே, ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரத கண்டே மேரோ: தக்ஷிணே பார்ச்வே ஸகாப்தே அஸ்மின் வர்த்தமானே வ்யாவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே .... (வருஷத்தின் பெயர்) நாம ஸஸ்வத்ஸரே தக்ஷிணாயனே அல்லது உத்தராயணே .... ருதௌ (ருதுவின் பெயர்)................. மாஸே (மாதத்தின் பெயர்) ....பக்ஷே (பக்ஷத்தின் பெயர்) .... யாம் (திதியின்பெயர்) சுபதிதௌ .... வாஸரயுக்தாயாம் (கிழமையின் பெயர்) ..... நக்ஷத்ர யுக்தாயாம் (நக்ஷத்திரத்தின் பெயர்) சுபயோக சுகபரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம சுபதிதௌ மம ஸஹ குடும்பானாம் க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய ஐஸ்வர்யாணாம் அபிவ்ருத்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம் தர்மார்த்த காமமோக்ஷ சதர்வித பல புருஷார்த்த ஸித்யர்த்தம்

ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் ஜ்ஞான வைராக்ய ஸித்யர்த்தம் சிவராத்ரி / ப்ரதோஷ புண்ய காலே ஸ்ரீ சாம்ப பரமேஸ்வர ப்ரஸாத ஸித்யர்த்தம் யாவத் சக்ய த்யான ஆவாஹ னாதி ஷோடஸோபசார பூஜாம் கரிஷ்யே. தங்கம் கலஸ பூஜாஞ்ச கரிஷ்யே (என்று சங்கல்பம் செய்து ஜலத்தை கையினால் ஸ்பரிசித்து பிறகு கணபதியை உத்யானனம் செய்யவும்)

ஸ்ரீ விக்நேக்வர உத்யாபனம் : ஓம் கணாணாம் த்வா கணபதிகும் ஹவாமஹே கவிம் கவீனாம் முபமஸ்த்ரவஸ்தமம் ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே ஆன: ச்ருண்வனங ஊதிபி: ஸீத ஸாதனம். அஸ்மின் ஹரித்ராபிம்பே ஸுமுகம் ஸ்ரீ மஹாகணபதிம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி, சோபனார்த்தே க்ஷேமாய புனராகமனாயச (என்று சொல்லி புஷ்பத்தைப் போட்டு விநாயகரை வடக்கே நகர்த்தவும்)

கலஸ பூஜை - (தீர்த்த பாத்திரத்தை கந்தம், குங்குமம், புஷ்பம் இவைளால் அலங்கரித்து வலது கையினால் மூடிக் கொண்டு) கலசஸ்ய முகே விஷ்ணு: கண்ட்டே ருத்ர: ஸமாஸ்ரித: மூலே தத்ர ஸ்த்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா: ஸ்ம்ருதா: குக்ஷெளது ஸாகரா: ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா ரிக்வேதோ (அ)த யஜுர் வேத: ஸாம வேதோ ப்யதர்வண: அங்கைச்ச ஸஹிதா: ஸ்வே கலஸாம்பு ஸமாச்ரிதா ஆயாந்து. ஸ்ரீ சாம்ப பரமேஸ்வர பூஜார்த்தம் துரிதக்ஷயகாரகா: கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதீ நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸன்னிதம் குரு (கலச ஜலத்தினால் பூஜா த்ரவ்யங்களையும் தன்னையும் ப்ரோக்ஷித்துக் கொள்ளவும்)

கண்டா பூஜை : ஆகமார்த்தந்து தேவானாம் - கமனார்த்தந் து ரக்ஷஸாம் - கண்டாரவம் கரோம்யாதெள - தேவதா ஹ்வான லாஞ்சனம் (என்று சொல்லி மணி அடிக்கவும்)

(த்யானாவாஹனாதி - ஷோடசோபசார பூஜா)

(த்யாயாமி தக்ஷிணாமூர்த்திம் நீலகீரீவம் தரிலோசனம் கங்காதரம் உமாகாந்தம் நித்யகல்யாண ரூபிணம் கோக்ஷீரதவளாகாரம் சந்த்ர பிம்ப ஸமானனம், பஸ்மபூஷித ஸர்வாங்கம் ருத்ராக்ஷாபரணான்விதம் அஸ்மின் பிம்பே ஸ்ரீ சாம்ப பரமேஸ்வரம் த்யாயாமி (புஷ்பம்)

ஆவாஹயாமி தேவேச மாதிமத்யாந்தவர்ஜிதம் ஆதாரம் ஸர்வ லோகானா மாச்ரிதார்த்தி விநாசனம் அஸ்மின் பிம்பே சாம்ப பரமேஸ்வரம் ஆவாஹயாமி (புஷ்பம்)

ஆஸனம் க்ருஹ்யதாமீச நிர்மலம் ஸ்வர்ணநிர்மிதம் ஆதாரம் ஸர்வலோகானாம் அந்தகாஸூரஸூதன ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம:ஆஸனம் ஸமர்ப்பயாமி (புஷ்பம்)

பாத்யம் க்ருஹாண பகவன் பாவனம் பரமேச்வர பார்வதீ ஹ்ருதயானந்த பாபம் ஸர்வம் வ்யபோஹய ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: பாத்யம் ஸமர்ப்பயாமி (புஷ்பம்)

அர்க்யம் க்ருஹாண கிரிச கந்த புஷ்பாக்ஷதைர்யுதம் அகமஜ்ஞான மகிலம் நீலகண்ட நிவாரய ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: அர்க்யம் ஸமர்ப்பயாமி (புஷ்பத்துடன் தீர்த்தம்)

க்ருஹாணா சமனார்த்தாய கங்காதி ஸரிதாஹ்ருதம் விமலம் ஜலமீசான வ்யாதீன்மே விநிவாரய ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (தீர்த்தம்)

ரஸோஸி ரஸ்யவர்கேஷூ ஸூக ரூபோஸி சங்கர மதுபர்க்கம் ஜகந்நாத தாஸ்யே துப்யம் மஹேச்வர ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம : மது பர்க்கம் ஸமர்ப்பயாமி

பஞ்சாம்ருதம் க்ருஹாணேதம் பன்னகேச்வர பூஷண பஞ்சவக்த்ர நமஸ்துப்யம் பஞ்ச பாபானி நாசன ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: பஞ்சாம்ருதம் ஸமர்ப்பயாமி (தேன், பால், தீர்த்தம்)

கங்கா க்லின்ன ஜடாபார ஸோம ஸோமார்த்த சேகர ஸஹ்யஜாதி ஸரித்தோயை: ஸ்நானம் குரு ஸதாசிவ ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம:

ஸ்நானம் ஸமர்ப்பயாமி (தீர்த்தம்)

மந்தா கின்யா ஸமாநீதம் ஹேம மம்போருஹ வாஸிதம் ஸ்நாநாய தேமயா பக்த்யா நீரம் ஸ்வீக்ரியதாம் விபோ ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம:

சுத்தோகஸ்நாநம் ஸமர்ப்பயாமி : (தீர்த்தம்) ஸ்நானானந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி.

கஜ-சர்மதரானந்த கரளாங்கித கந்தர துகூலம் க்ருஹ்யதாம் தேவ துர்க்கதிம் மே நிவாரய ஸ்ரீ சாம்ய பரமேஸ்வராய நம: **வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி (இலவம்பஞ்சுமாலை)**

உபவீதம் க்ருஹாணேச பவித்ரம் பரமம் சுபம் உமாகாந்த நமஸ்துப்ய முத்தமம் தேஹி மே பலம் ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: **உபவீதம் ஸமர்ப்பயாமி (அக்ஷதை)**

குண்டாலாங்கத முக்யானி குண்டலீச்வர பூஷண பூஷணாணி க்ருஹாணேச பூதி பூஷித விக்ரஹ ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: ஆபரணானி ஸமர்ப்பயாமி (புஷ்பம்)

கந்தம் குங்கும் ஸம்யுக்தம் ம்ருகநாபி ஸமன்விதம் மஹாதேவ க்ருஹாணேச மஹாபாப விநாசன ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: கந்தம் ஸமர்ப்பயாமி கந்தானாமுபரி ஹரித்ரா சூர்ணம் ஸமர்ப்பயாமி. (சந்தனம் இட்டு பிறகு குங்குமம் இடவும்)

அக்ஷதான்க்ஷதவிபோ நக்ஷத்ரேச விபூஷண சுத்தஸ்படிக ஸங்காச ஸ்வாமின் ஸ்வீகுரு சங்கர ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: அக்ஷதான் ஸமர்ப்பயாமி (அகடிதை ஸமர்ப்பிக்கவும்)

மல்லிகா குந்த மந்தார கமலாதீனி சங்கர புஷ்பாணி பில்வ பத்ராணி க்ருஹாண கருணாநிதே ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம : புஷ்பாணி ஸமர்ப்பயாமி (புஷ்பம் ஸமர்ப்பிக்கவும்) (புஷ்பத்துடன் தீர்த்தம்)

★★★★

அங்க பூஜை

ஓம் ஸிவாய	நம:	பாதௌ பூஜயாமி
ஓம் ஸர்வாய	நம:	குல்பௌ பூஜயாமி
ஓம் ருத்ராய	நம:	ஜானுநீ பூஜயாமி
ஓம் ஈசாநாய	நம:	ஜங்கே பூஜயாமி
ஓம் பரமாத்மனே	நம:	ஊரு பூஜயாமி
ஓம் ஹராய	நம:	ஜகனம் பூஜயாமி
ஓம் ஈஸ்வராய	நம:	குஹ்யம் பூஜயாமி
ஓம் ஸ்வர்ணரேதஸே	நம:	கடிம் பூஜயாமி
ஓம் மஹேஸ்வராய	நம:	நாபிம் பூஜயாமி
ஓம் பரமேஸ்வராய	நம:	உதரம் பூஜயாமி
ஓம் ஸ்படிகாபரணாய	நம:	வக்ஷஸ்தலம் பூஜயாமி
ஓம் த்ரிபுரஹந்த்ரே	நம:	பாஹூன் பூஜயாமி
ஓம் ஸர்வ அஸ்த்ரதாரிணே	நம:	ஹஸ்தான் பூஜயாமி
ஓம் நீலகண்டாய	நம:	கண்டம் பூஜயாமி
ஓம் வாசஸ்பதயே	நம:	முகம் பூஜயாமி
ஓம் த்ரயம்பகாய	நம:	நேத்ராணி பூஜயாமி
ஓம் பாலசந்த்ராய	நம:	வலாடம் பூஜயாமி
ஓம் கங்காதராய	நம:	ஜடாமண்டலம் பூஜயாமி
ஓம் ஸதாஸிவாய	நம:	சிர: பூஜயாமி
ஓம் ஸர்வேஸ்வராய	நம:	ஸர்வாண்யங்கானி பூஜயாமி

* * *

அஷ்டோத்தர சத நாமாவளி பூஜை

(அர்ச்சனை செய்யவும்)

ஓம் சிவாய நம:
ஓம் மஹேஸ்வராய நம:
ஓம் சம்பவே நம:
ஓம் பிநாகிநே நம:
ஓம் சசிகேராய நம:
ஓம் வாமதேவாய நம:
ஓம் விருபாக்ஷாய நம:
ஓம் கபர்த்திநே நம:
ஓம் நீலலோஹிதாய நம:
ஓம் சங்கராய நம: 10

ஓம் சூல வாணயே நம:
ஓம் கட்வாங்கினே நம:
ஓம் விஷ்ணுவல்லபாய நம:
ஓம் சிபிவிஷ்டாய நம:
ஓம் அம்பிகாநாதாய நம:
ஓம் ஸ்ரீ கண்டாய நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் பவாய நம:
ஓம் சர்வாய நம:
ஓம் த்ரிலோகேசாய நம: 20

ஓம் சிதிகண்டாய நம:
ஓம் சிவாப்ரியாய நம:
ஓம் உக்ராய நம:
ஓம் கபாலினே நம:
ஓம் காமாரயே நம:
ஓம் அந்தகாரஸுரஹூதநாய நம:
ஓம் கங்காதராய நம:
ஓம் லலாடாக்ஷாய நம:
ஓம் காலகாலாய நம:
ஓம் க்ருபாநிதயே நம: 30

ஓம் பீமாய நம:
ஓம் பரஸுஹஸ்தாய நம:
ஓம் ம்ருகபாணயே நம:
ஓம் ஜடாதராய நம:
ஓம் கைலாஸவாஸிநே நம:
ஓம் கவசினே நம:
ஓம் கடோராய நம:
ஓம் த்ரிபுராந்தகாய நம:
ஓம் வ்ருஷாங்காய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம: 40

ஓம் பஸ்மோத்ததூளித
விக்ரஹாய நம:
ஓம் ஸாமப்ரியாய நம:
ஓம் ஸர்வமாயா நம:
ஓம் த்ரயீமூர்த்தயே நம:
ஓம் அநீஸ்வராய நம:
ஓம் ஸர்வஜ்ஞாய நம:
ஓம் பரமாத்மனே நம:
ஓம் ஸோமஸூர்யாக்நி
லோசனாய நம:
ஓம் ஹவிஷே நம:
ஓம் யக்ஞமயாய நம: 50

ஓம் ஸோமாய நம:
ஓம் பஞ்சவக்த்ராய நம:
ஓம் ஸதாசிவாய நம:

ஓம் விஸ்வேஸ்வராய நம:
ஓம் வீரபத்ராய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் ப்ரஜாபதயே நம:
ஓம் ஹிரண்யரேதஸே நம:
ஓம் துர்த்ர்ஷாய நம:
ஓம் கிரீசாய நம: 60
ஓம் அறகாய நம:
ஓம் புஜங்கபூஷணாய நம:
ஓம் பர்க்காய நம:
ஓம் கிரிதன்வனே நம:
ஓம் கிரிப்ரியாய நம:
ஓம் புராராதயே நம:
ஓம் பகவதே நம:
ஓம் ப்ரமதாதிபாய நம: 70

ஓம் ம்ருத்யுஞ்ஜாய நம:
ஓம் ஸூக்ஷ்மதனே நம:
ஓம் ஜகத்வ்யாபினே நம:
ஓம் ஜகத்குரவே நம:
ஓம் வ்யோமகேசாய நம:
ஓம் மஹாஸேனஜனகாய நம:
ஓம் சாருவிக்ரமாய நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் பூதபதயே நம:
ஓம் ஸ்தாணவே நம: 80

ஓம் அஹிர்புத்ன்யாய நம:
ஓம் திகம்பராய நம:
ஓம் அஷ்டமூர்த்தியே நம:
ஓம் அநேகாத்மனே நம:
ஓம் ஸாத்விகாய நம:
ஓம் சுத்தவிக்ரஹாய நம:
ஓம் சாஸ்வதாய நம:
ஓம் கண்டபரசவே நம:
ஓம் அஜாய நம:
ஓம் பாசவிமோசகாய நம:
ஓம் ம்ருடாய நம:
ஓம் பசுபதயே நம:
ஓம் தேவாய நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் ஹரயே நம:
ஓம் பநேத்ரபிதே நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் தக்ஷாத்வரஹராய நம:100

ஓம் ஹராய நம:
ஓம் பூஷதந்தபிதே நம:
ஓம் அவ்யக்ராய நம:
ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:
ஓம் அபவர்க் ப்ரதய நம:
ஓம் அனந்தாய நம:
ஓம் தாரகாய நம:
ஓம் பரமேஸ்வராய நம:108

ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: நானாவித பரிமள புஷடபபாணி ஸமர்ப்பயாமி.

தூபம் : தஸாங்கம் குக்லோபேதம் ஸுகந்தம் ச மநோஹரம் ஆக்ரோய: ஸ்ர்வதேவானாம் தூபோயம் ப்ரதி க்ருஹ்யதாம் ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: தூபம் ஆக்ராபயாமி. ஆசமனீயம் ஸமர்ப்பயாமி.

தீபம் : ஸாஜ்யம் த்ரிவார்த்தி ஸம்யுக்தம் வஸ்நினா யோஜிதம் மயா தீபம் க்ருஹாண தேவேஸ த்ரைலோக்ய திமிராபஹம் ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: தீபம் தர்சயாமி. தூப தீபாநந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி. (தீர்த்தம் விடவும்)

நைவேத்யம் : ஓம் பூர்ப்புவஸ்ஸுவ: தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்யதீமஹி தியோயோன: ப்ரசோதயாத் தேவஸவித: ப்ரஸுவ ஸத்யம் த்வர்த்கேன பரிஷிஞ்சாமி, அம்ருதோபஸ்தரணமஸி, ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யானாய ஹ்வாஹா, ஓம் உதரனாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா, ப்ரும்மணிம ஆத்மா அம்ருதத்வாய நைவேத்யம் க்ருஹ்யதாம் தேவ பகதிம்மே ஹ்யசலாம் குரு சிவேப்ஸிதம் வரம் தேஹி பரத்ர ச பராம் கதிம் ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: மஹா நைவேத்யம் நிவேதயாமி, அம்ருதாபிதாநமஸி நிவேத்யாநந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி.

தாம்பூலம் : பூகி பலஸமாயுக்தம் நாகவ் யுதம்ளர் கர்பூரசூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்ய தாம் ஸ்ரீசாம்ப பரமேஸ்வர நம : தாம்பூலம் ஸமர்ப்பயாமி

நீராஜனம் : ஸோமா வா ஏதஸ்ய ராஜ்ய மாதத்தே யோ ராஜாஸன் ராஜ்யோ வா ஸோமேன யஜதே தேவஸுவா மேதானி ஹ்வீகும்ஷி பவந்தி ஏதாவந்தோவை தேவானாகும் ஸவா: த ஏவாஸ்மை ஸவான் ப்ரயச்சந்தி த ஏனம் புனஸ் ஸுவந்தே ராஜயாய தேவஸு ராஜா பவதி ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: கர்ப்பூர நீராஜனதீபம் தர்சயாமி. நீராஜநாநநதரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி.

புஷ்பாஞ்ஜலி : புஷ்பாஞ்ஜலிம் ப்ரதாஸ்யாமி க்ருஹாண கருணாநிதே நீலகண்ட விருபாக்ஷ வாமார்த்த கிரிஜ ப்ரபோ ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம: புஷ்பாஞ்ஜலிம் ஸமர்ப்பயாமி.

மந்தர புஷ்பம் : யோ(அ) பாம் புஷ்பம் வேத புஷ்பவான் ப்ரஜாவான் பசுமான். பவதி சந்த்ரமா வா அபாம் புஷ்பவான் ப்ரஜாவான் பசுமான் பவதி ஸ்ரீ சாம்ப பரமேஸ்வராய நம : மந்த்ர புஷ்பம் ஸமர்ப்பயாமி

தவசரணம் சரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்திநி சைலஸுதே 18

தவ விமலேந்துகுலம் வதநேந்துமலம்
ஸகலம்நது கூலயதே
கிமு புருஹூதபுரீந்துமுகீ
ஸூமுகீபிரஸௌ விமுகீ க்ரியதே !
மமது மதம் சிவநாமதநே பவதீ
க்ருபயா கிமுத க்ாயதே.
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்திநி சைலஸுதே 19

அயி மயி தீன தாயலுதயா க்ருபயைவ
த்வயா பவிதவ்யமுமே
அயி ஜகதோ ஜநநீ க்ருபயாஸி
யதாஸி ததாநுமிதாஸி ரதே!
யது சிதமத்ர பவத்யுரரீ குருதா
துருதா பமாபாகுருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்திநி சைஸுதே.

தேவி பாடம்

கொப்பியளோ பஞ்சநதிஸா
கொப்பியளோ ப்ரணதார்ச்சிதா
கொப்பியளோ ஜயதர்மசம்வர்த்தினி
கொப்பிபாடுவோம் ஜயகொப்பியளோ

மிருகண்டுரிஷி பிள்ளை மார்கண்டேயமுனி
யாகம் பண்ணுகின்ற காலத்தினில்
மார்க்கண்டேயர் ஜய முனிவர்க்குச் சொன்ன
மகாதேவியுடைய மகிமை எல்லாம்.

வியாசமுனி பரீக்ஷித்துக்குச் சொன்ன
விச்வேச்வரி மகிமை எல்லாம்
ஸுதமுனி சவுன காதிகட்குச் சொன்ன
ஸ்ரீ தேவியின் மகிமை தன்னில்

அறிந்தமட்டுக்கும் நானுரைப்பேனிதில்
        அக்ஷரப் பிழைகள் வராமல்
சேக்ஷாத்திரி குருவை பணிந்தேமஹா
        தேவிமகிமை சொல்லத் துணிந்தேன்
சரஸ்வதியும் கணேசரும் எந்தனுக்கு
        தந்தேன் பாக்கியம் என்று சொல்ல
சந்தோஷமான ஜயத்துடனே
        ஸர்வேச்வரி மகிமை யுரைப்பேன்.

கதை வரலாறு

கரதனென்ற ஓரராசன் தன்னுட
        ஜகத்தை எல்லாம் ஆண்டிருந்தான்
தர்மாதர்மத்தை ஆராய்ந்து நல்ல
        சாஸ்திரப்படிக்கு ஆண்டிருந்தான்

அஸூயை யினாலொரு பகையரசன்
        அவனை அடித்துத் துரத்திவிட்டான்
அதிசோகத்துடன் ராஜாவும் ஒரு
        அடவிதனில் வந்து சஞ்சரித்தான்

சமாதி என்கிற வைசிய னொருத்தன்
        புத்திரருடன் விரோதப்பட்டு
பொருக்கமாட்டாது கோமுட்டியும்
        புறப்பட்டு வந்தான் வனத்தை நோக்கி

கோமுட்டியைக் கண்டு ராஜனுமப்போ
        குசலப்ரச்னம் கேட்டிடவே
அன்புடையாளுமென் புத்திராளும் மஹா
        அவமானந்தனைப் பண்ணினார்கள்

சசிக்கமாட்டதே நானுமிப்போதிந்தத்
தவவனத்தினில் வந்தேனென்றான்
அவன் சொல்லிவந்த வார்த்தைகளைக் கேட்டு
ஆச்சரியப்பட்டு ராஜனப்போ

என்னுடைய வர்த்தமானந்தன்னை
எடுத்துரைப்பேன் நீர்கேளும்
சத்துருவான ஒரு ராஜன் வந்து என்னை
சண்டை பண்ணி ஜயித்து விட்டான்

பாரியையுடனே புத்திராளையுமென்
பட்டணந் தன்னையும் நானிழந்தேன்
பந்து ஜனங்கள் தனையிழந்து இந்த
வேடர்வனத்தில் வந்தேனென்று

சொல்லிக்கொண்டு இருவருமாய்
சுமேதஸ் முனியைக்கண்டு பணிந்தார்
திடபுத்தியாய் இருக்கும்பொழுதிந்த
சோகம்வந்து மறைப்பானேன்

ஞானஸ்வரூபியே சொல்லுமென்று கேட்க
ராஜாவைப் பார்த்து முனியுஞ் சொல்வர்
பள்ளுபறை பதினாலுசாதிகட்கும்
ஈ எறும்பு எண்பத்தி நான்கினுக்கும்

எனது நானென்று அபிமானம் ஜீவர்
எல்லாரிடமும் இருக்கின்றது
அகங்காரம் பூர்ணமாயிருக்கும்போது
அகபிரும்மம் நானென்கன்றீரே

அஞ்ஞானமாயா மயக்கம் விலக்கிட
ஹரி ப்ரம்மவாலும் கூடாது
அண்டம்பதினாலுலகம் முழுவதும்
அம்மன் மாய்கையினால் விளங்கும்
ஸ்ரீதேவி ஜகன் மாதாவினுடைய
திருஷ்டியினாலே விளங்கி நிற்கும்
ஸ்ரீதேவி மாயாவல்லப் மென்றந்தச்
சுமேதஸ்முனியு முரைக்கலுற்றார்

மதுகைடவர் விருத்தாந்தம்

திருப்பாற்கடல் தன்னில் ஸ்ரீஹரியும்
சேஷசயனத்தில் பள்ளி கொண்டார்
மகாவிஷ்ணுவின் கர்ணங்களிலிருந்து
மதுகைடவர் இருவர் உண்டானர்

விழித்துப் பார்த்தங்கே பிரம்மாவை யவர்கள்
முஷ்டியுத்தம் பண்ண வந்தெதித்தார்
அயனுங்கண்டு பயந்துகொண்டு ஸ்ரீ
ஹரியை வந்து நமஸ்கரித்தார்

நினைவுதெரியாது விஷ்ணுவுமப்போ
நித்திரையின் வசப்பட்டிருந்தார்
அம்மாதேவி நித்திராமோஹினியே பொல்லா
அஸுரான் பயத்தால் அயனிடம் வந்தேன்

மோகினியே ஜகன்மாதாவே மஹா
விஷ்ணுவைவிட்டு வெளியிரம்மா
(என்று) லோகமோஹினி மஹிமைதனைச் (சொல்லி)
நாலுமுகவரும் ஸ்தோத்தரிக்க

பகவானுடைய சரீரந்தனை விட்டு (தேவி)
பிரத்யக்ஷமாக எதிரில் வந்து
வேண்டும் வரத்தைக கொடுத்து பிரம்மாவுக்கு
விச்வமோகினியும் மறைந்தாள்

மஹாவிஷ்ணுவும் எதிர்நின்ற பிரம்மாவை
வந்த காரியங் கேட்கலுற்றார்
(நீர்)யோக நித்திரைப் பண்ணுகின்றபோது
உம்முடைய கர்ணங்களிலிருந்து

மதுகைடவர் என்றிரண்டு பொல்லாத
மஹா அஸிரரைக் உண்டானர்
அந்த அஸூராரைக் கொல்ல வேணுமென்று
ஹரியைப் பிரம்மன் நமஸ்கரித்தார்

ஆகட்டுமப்படியே சம்ஹரிப்போமென்று
அனுப்பிவைத்தார் பிரம்மாவை
மகாவிஷ்ணுவுடன் யுத்தம் பண்ணப் (பொல்லா)
மதுகைடவர் வந்தெதித்தார்

ஹரியுடனே அஸூரர்களிவருக்கும்
அநேகங்காலம் யுத்தஞ்சசெய்தும்
ஹரியும் ஜயிக்க முடியாமல் அந்த
அஸீரர்களைப் பார்த்து சந்தோஷமாய்

அஸூரர்களே உங்களுக்கு எம்மால்
ஆனவரத்தைத் தருவோ மென்றார்
ஆனவரத்தைத் தருவோமென்றவுடன்
அஸீராளும் அதிகோபத்துடன்

விஷ்ணுவைப் பார்த்தவாள் கர்வத்துடன் உமக்கு
வேண்டும் வரத்தை நாம் தருவோ மென்றார்
உங்களிருவரையும் சம்ஹரித்திட
ஒருவரமெனக்கு வேண்டுமென்றார்

வஞ்சித்தார் நம்மை மஹாவிஷ்ணுவுமிப்போ
வார்த்தை இரண்டு சொல்லலாகாதென்று
சரிக்குச்சரி நாமும் ஆகவேணுமென்று
சக்கரத்தாருடன் ஏது சொல்வாள்

அப்பு இல்லாத ஸ்தலந்தனில் எங்களை
பிருதிவியில் வைத்துக் கொல்லுமென்றார்
தன்னுடைய தொடைதனில் வைத்துமே
சம்ஹரித்தாரப்போ அஸுரர்களை

அஸுராளுடைய தேகங்கள் தானிப்போ
அவனியாக இதோ விளங்குவது
ராஜேஸ்வரி மகிமைகள் தான் சொல்ல
நான்முகராலும் முடியாது

மகிஷாஸுரன் விருத்தாந்தம்

மகிஷ அஸுரன் என்னும் ஒருத்தன்
தபஸுமிகப்பண்ணி வரமடைந்தான்
ஜகத்திலுள்ளோரை உபத்திரவிக்க அஸுரன்
தேவர்கள் ரிஷிகளெல்லோருங்கூடி

கைலாசத்திற்கு ஓடிவந்தெல்லோரும்
அறிவித்தாள் மஹாதேவருக்கும்
சிவனுடைய சந்நிதியில் நின்று
தேவிமகிமை சொல்லி ஸ்துதித்தாள்

தேவாளுடைய முகத்திலிருந்தம்மன்
தேஜோரூபமாய் ஒன்று சேர்ந்து
அத்னை பேர்களின் தேஜஸைக்கிரகித்து
அம்மன் பிரத்யக்ஷமாக வந்தாள்

அத்தனை தேவர்களும் பணிந்து தங்கள்
ஆயுதமும் தேவி கைக்கொடுத்தாள்
பக்தியாய் ஆயுதமுங்கொடுக்க அம்மன்
பதினெட்டுக்கையிலும் தரித்துக்கொண்டு

சிம்ஹவாகனத்தில் ஏறிக்கொண்டாள் மஹா
தேவியும் யுத்தம் பண்ணவந்தாள்
மஹிஷாஸுரனும் தேவியுமாய் மஹா
ஆங்காரமாய் யுத்தம் பண்ணுலுற்றார்

அநேகாலம் மகிஷன் தேவியுடன்
அஞ்சாமலே யுத்தம்செய்து நின்றான்
மாய்கையினால் பலரூபமெடுத்தவன்
மகாதேவியுடன் யுத்தம் செய்தான்

காளிரூபமெடுத்துக்கொண்டு தேவி
கைதனில் சக்ராயுதமுங் கொண்டு
மஹிஷ ரூபமெடுக்கும் போதவனை
மடியவெட்டினாள் மாதேவியும்

காமாக்ஷிதேவியும் சந்தோஷமாயந்தக்
காளிகாதேவியைக் கண்டகந்து
மஹிஷாஸூரனை ஸம்ஹரித்த எங்கள்
மஹதேவியும் தானழைத்தாள்

மகிஷாஸூரனை ஸம்கரித்த எங்கள்
மஹாதேவியே நமஸ்காரம்
மனஸ்தாபம் போக்கிநாடுகள் தந்த
மஹேஸ்வரியே நமஸ்காரம்

அண்டத்திற்கெல்லாம் அதிபதியே
ஜகதாம்பிகையே நமஸ்காரம்
அபயமென் றோரை ரக்ஷித்திடும்
அம்மா உனக்கு நமஸ்காரம்

பிரணவமயமான பார்வதியே
பரதேவதையே நமஸ்காரம்
சுத்தஸ்வரூப சுந்தரியே சிவ
காமவல்லியே நமஸ்காரம்

ஞானஸ்வரூபியே கல்யாணியே
ஸ்ரீ மந்நாராயணியே நமஸ்காராம்
சாந்தரூபசரீரணியே சிவ
சங்கரியே நமஸ்காரம் (என்று)

தேவரெல்லோரும் ஸ்துதிக்கலுமே
மஹாதேவியுங்கேட்டதி சந்தோஷமாய்
வேணவரங்களைக் கேளுந்தாரோமென்று
வேதநாயாகி சொல்லலுமே

ஆபத்துக்களொன்றும வாராமலே எங்கள்
அம்மா வந்து நீ ரஷிக்கவேணும்
ஆகட்டுமென்று விடையளித்துஜக
தம்மனும அந்தர்த்தான மடைந்தாள்

அதற்குப்பின் சிலகாலத்தினில் பொல்லா
அஸுரர் இரண்டுபேர் உண்டானார்
அந்த அஸுராளை சம்ஹரித்த ஜக
தம்பிக்கையின் மகிமை சொல்லுவேன்

கம்பன் நிசும்பன் என்றிரண்டு பொல்லா
சூரர்களப்போ உண்டானார்கள்
பால்யவயதில் தபசுபண்ணி அவர்
வரங்கள் வேணதெல்லாம் மடைந்தார்

இந்திரனுடனே தேவர்கள் பிரம்மனை
எல்லாரையுமடித்துத் துரத்தி
சமஸ்தலோகம் நடுங்கிடச் செய்து
சங்கையில்லாமலே ஆண்டிருந்தார்

நடுங்கிப் போயந்தத் தேவர்களெல்லாம்
நமக்குப் பொல்லாத கலமென்று
வெவ்வோறு ரூபமெடுத்துக்கொண்டு தேவாள்
பூலோகத்தில் வந்து சஞ்சரித்தார்

நாற்பத்தொரு சதுர்யுகமாயத் தேவர்
ராஜ்ஜியந்தன்னை யிழந்திருந்தார்
விமோசனமொன்றையும் காணாமே என்று
விஷ்ணு உலகத்திற் கோடி வந்தாள்

நடுங்கி வந்தீர்கள் தேவர்களே இப்போ
நம்மாலிதற்கொன்று மாகாது
விஷ்ணுமூர்த்தியும் தேவரும் இந்திரனும்
விரிஞ்சமூர்த்தியும் கூடிக்கொண்டு

மஹாமேரு பர்வதச்சாரலிலே
வந்து பிரம்மாதி தேவரெல்லாம்
இதற்கு நாமென்ன செய்யப் போறோமென்று
ஏக்கமடைந்தார் அமராளெல்லாம்

புத்தியுள்ள ஒரு தேவனப்போ எண்ணி
பூர்வத்தில் தேவியும் சொன்னாரே
இடுக்கண் வந்திட்ட வேளையினிலே
என்னை ஸ்துதியுங்கள் என்றாரே

ஆமாம் அதுவும் உள்ளதென்றெண்ணியே
அமரர் எல்லோரும் கூடிக்கொண்டு
நமஸ்தே நமஸ்தே என்று சொல்லியப்போ
ராஜேஸ்வரியை ஸ்தோத்தரித்தார்

மூலாதாரி சரஸ்வதியே ஜகன்
மோஹினியே நமஸ்காரம்
மாயாதாரியே லக்ஷ்மியே
மாஹேஸ்வரியே நமஸ்காரம்

பகவான் தேகத்தில் பாதியன்றோ எங்கள்
பார்வதியே நமஸ்காரம்
எங்களை ரக்ஷிக்க வேண்டுமிப்போ ஜக
தீஸ்வரியே நமஸ்காரம் என்று

தேவரெல்லோருமாய் ஸ்தோத்தரிக்க
தேவியும் பிரத்யக்ஷமாக வந்து
அஞ்சாதேயுங்கள் நீங்களென்று
(அப) யஸ்தங்கொடுத்தாள் தேவருக்கு

ஹிமயபர்வதந் தன்னில்வந்து தேவி
கன்னிகாரூப மெடுத்துக் கொண்டு
கோகிலம் போலும் குரலுடையாள்
கொம்புத் தேன் போலும் மொழியுடையாள்

ஹம்ஸம்போலும் நடையுடையாள்
அபயங்கொடுக்கும் கரமுடையாள்
மன்மதன் கைகெண்ட விற்போலுமுள்ள
வளைந்த புருவச் சிலையழகும்

முத்துக்கோத்தாப்போல் பல்லொளியும்
பவழம் போன்ற அதரங்களும்
பட்டமுஞ்சட்டியும் நெற்றிதனில் மின்ன
பதக்கம் சரப்பளி மார்பிலசைய

தண்டைசிலம்பு கல கலலென்னக்காலில்
சிலம்பு கொஞ்சிச் சலஞ்சலென்க
சொர்ணமயமான ஊஞ்சலில் இருந்து
கோடிஸூரியர் உதித்ததுபோல்

தங்கத்திலான சங்கிலியைத் தொட்டு
தானே பாடிக்கொண்டு ஆடலுற்றாள்
சண்முண்டரென்ற இரண்டசுரர்களும்
(தேவி) கானந்தன்னைக் கேட்டு ஓடிவந்து

தேவியுடைய அருகினில் வந்தாள்
சேதிஒன்று எடுத்துரைப்பாள்
எங்கள் ராஜாவின் ப்ரதாபங்கள் தன்னை
இத்தனை நாளிலும் கேட்டில்லையோ

சும்பன் நிசும்பன் என்றிரண்டுபேர்கள்
மூன்று உலகமும் ஆண்டிருக்காள்
உமக்கு மெத்த அழகிருந்து மிப்போ
போக பாக்கியம் புஜியாமல்

அதிசயமான ரூபத்துடன் நீரும்
தனித்திருக்கின்ற காரியமேன்
எங்கள் ராஜனுக்கே ஏர்யைம்மா நீர்
இந்த க்ஷணத்தில் வாருமம்மா

வாருமென்றஸுரன் சொல்லுமே
மஹேஸ்வரியும் எடுத்துரைப்பாள்
ஸ்திரீபுத்திக்கு ஸ்திரமில்லையே நான்
தெரியாமலே ஒன்று செய்துவிட்டேன்

பிரதிக்ஞை ஒன்று செய்து கொண்டேன்
என் பார்த்தாவாய் வரவேணுமென்றால்
யுத்தம் பண்ணியே என்னை ஜயித்தவர்
எனக்கிஷ்டமாகிய பர்த்தாவென்று

உங்களிர்ராஜர்க்குச் சொல்லுங்களென்றம்மன்
உத்தரஞ்சொல்லி அனுப்பிவைத்தாள்
சண்டமுண்டவரும் ஓடிவந்தாரந்தச்
சும்ப நிசும்பர் அண்டையினில்

உச்சிதமாகின்ற ரத்தினங்கள்
உங்கிளிடத்தில் இருந்தாலும்
சேர்க்க வேண்டிய இரத்தினங்களில்
ஸ்திரீ ரத்தினம் உங்களுக்கில்லையே

ஏற்றமானதோர் கன்னிகாரத்தினம்
ஹிமய பருவதத்திலிருக்காள்
சகாயமாகப் புருஷர்களுமில்லை
தனித்திருக்காள் சகியுடனே

சண்முடமுண்டரும் சொல்லுமே
சும்பாஸுரன் கேட்டுச் சந்தோஷமாய்
சும்பன் மகிழ்ந்து தன் மந்திரியான
சுக்ரீவன் .தன்னைக்கிட்டழைத்து

என்மகிமைகளை அவளுக்குரைத்து (நல்ல)
இஷ்டமாகிய வார்த்தைசொல்லி
வார்த்தை சொல்லி வசமாக்கிக் கொண்டு
வாருமென்று அனுப்பிவைத்தான்

சுக்ரீவன் கேட்டு சந்தோஷமாய் வெகு
சீக்கிரமாகவே ஓடிவந்தான்
தேவியருகினில் கிட்டவந்து மெள்ளச்
சேதியை நன்றாய் எடுத்துரைப்பான்

எங்கள் ராஜாவின் சேதிப்ரதாபங்கள்
வந்தவர்களிங்கே சொல்லலையோ
சும்பநிசும்பனென்று இரண்டுபேர்
மூன்றுலகுங்கண்டி யாண்டிருக்காள்

உமக்கு மெத்த அழகிருந்தும் நல்ல
போகபாக்கியம் புஜியாமல்
(இந்த) அதிரூப சவுந்தரியத்துடன்
தனித்திருக்கின்ற காரியமேன்

எங்களிராஜற்கு ஏர்வையம்மா நீர்
இந்த க்ஷணத்தினில் வாருமென்றான்
வாருமென்று அழைக்கமேலுமேயவன்
மாஹேச்வரியுமேது சொல்லுவாள்

சபதமொன்றல்லோ செய்திருக்கேன்
சத்தியமாகவே சொல்லுகிறேன்
சண்டையிட்டு என்னை ஜயித்தவர்கள்
கொண்டு போகலாமென்று சொல்லி

உங்களிராஜர்க்குச் சொல்லுங்களென்று
உத்தரஞ் சொல்லி யனுப்பிவைத்தாள்,
சுக்ரீவன் கேட்டு கோபத்துடன்
சும்பாஸுரன் கிட்ட வந்து சொன்னான்

கம்பஸூரன் கேட்டுக் கோபத்துடன்
தூம்ரலோசனனைக் கிட்டழைத்து
நயபயமாய் அவளுக்குச் சொல்லி
நம்ம மகிமை எடுத்துரைத்து

(இந்தச்) சேதியொன்றையுங் கேட்காவிட்டால்
சிட்ஷை பண்ணிக்கொண்டு வாருமென்றால்
தூம்ரலோசனன் கேட்டுச் சந்தோஷமாய்
துரிதமுடன் தேவிகிட்டவந்து

ஏனம்மா இந்த அக்ரமம் உனக்கு
எங்கள் இராஜரிடத்தினிலே
சேராதே போனால் உம்மையிப்போ நான்
சிட்ஷைபண்ணுவே னென்று சொல்லி

அதட்டியே சிலவார்த்தை சொல்லியவன்
இழுக்க வந்திட்டான் அம்மனையும்
பார்த்த அம்மனும் ஹூங்காரம் பண்ணவே
பஸ்பமாக எரிந்து போனான்

தூம்ரலோசனன் பட்டுபோனானென்று
தூதர்கள் ஓடிச்சொன்னாருடனே
மந்திரியும் பட்டுப்போனான் என்றவுடன்
மண்டியெரிந்து கண்கள் சிவந்து

சண்டமுண்டரைக் கிட்டழைத்து நீங்கள்
சம்ஹரித்திங்கே வாருமென்றான்
சண்டமுண்டரும் ஓடிவந்து அந்தச்
சங்கரி தேவியை வந்தெதித்தார்

கண்டு தேவிதன் கோபத்தீயலே
காளிதேவியை உண்டாக்கினாள் (அவள்)
சண்டமுண்டர் தலையை வெட்டிச்சிவ
சங்கரி தேவிமுன் வைத்து நின்றாள்

சங்கரி யம்மனும் சந்தோஸமாயப்போ
சாமுண்டி என்றபேர் தான்கொடுத்தாள்
தேவர்கள் எல்லோருங் கூடிக்கொண்டு மஹா
தேவிக்குப் புஷ்பமலர் சொரிந்தாள்

சண்டமுண்டரும் பட்டாரென்று கேட்டு
சர்ப்பம்போலே யவன் சீறிக்கொண்டு
தனக்குண்டானதோர் சேனைக்கெல்லாமப்போ
அனாக்ஷணத்தில் ஆளைவிட்டான்

எண்பத்து நாலாயிரம் சேனைகளும்
இமைப்பொழுதினிற் கூட்டிவைத்தான்
அதிபலவானான இரத்த பீஜன்றன்னை
அம்பிகை முன்னாள அனுப்பிவைத்தாள்

சகலதேவர்கள் அம்சங்களுடம் சேர்ந்து
ஸ்பதமாதர்கள் உண்டானாள்
நாராயணி நரசிம்ஹி என்றும்
வைஷ்ணவி மஹாதேவி என்றும்

பிரஹ்மாணி கௌமாரி என்றும்
காளி சாமுண்டிதேவி என்றும்
ஈச்வரியுடைய தோழிகளாகவே
ஏழுபெண்டுகள் கூட்டிக்கொண்டு

ரத்தபீஜனுடன் யுத்தம் பண்ணும்போது
ரத்தங்கீழே விழுந்ததப்போ
பிந்துவுக்குப்பிந்து இரத்த பீஜனாக
பூமியெங்கிலும் முளைக்கலானான்

அம்பிகையுடைய அனுக்ஞையினால் மஹா
அட்டகாஸத்துடன் காளிதேவி
இரத்தபீஜனை சம்ஹரித்து அவன்
இரத்தமெல்லாம் உறிஞ்சிவிட்டாள்

காளிகாதேவியும் இரத்தபீஜர்களை
வாரி வாரி விழுங்கிவிட்டாள்
இரத்த பீஜனும் பட்டவுடன் பொல்லா
நிசும்பனும் பார்த்துக் கோபத்துடன்

ஸம்ஹரிப்பேன் இவளையென்று சொல்லி
சபதம் செய்து தமயன் முன்னே
தேவியடனே எதிர்த்து நிசும்பனும்
தோறகாமலே யுத்தம்செய்து நின்றான்

ஆயிரமாயிரம் அம்பு தொடுத்தவன்
அஞ்சாமலே யுத்தம் பண்ணலுற்றான்
நேரேயுத்தம் பண்ணி லீலாவிநோதமாய்
நிசும்பனைக் கொன்றான் ஸ்ரீதேவியும்

தம்பியும் பட்டதைக் கேட்டு சும்பாஸுரன்
சங்கையில்லாத கோபத்துடன்
அம்பிகையெதிரில் வந்து சும்பாஸுரன்
ஆங்காரத்துடன் ஏதுசொல்வான்

உயுத்தம் பண்ணத் தெரித்தவளோ எங்கள்
இத்தனை பேரையும் ஏய்த்தாயேடி
யாருமில்லதே யிருந்தாயடி நீயும்
ஏழுபேருடனிப்போ நின்றாயடி

(என்) அளவில்லாத சேனைகளுக்கெல்லாம்
அனலாக வந்து நின்றாயடி
(என்) சங்கையில்லாத சேனைகளுக்கெல்லாம்
சதிகாரியாக நீ வந்தாயடி

சதிகாரியடி நீயுமிப்போ என்னை
கற்பனை செய்யவே வந்தாயடி
வஞ்சித்தாயடி நீயுமென்னை யிப்போ
வார்த்தைகள் இரண்டு சொன்னாயடி

ஒருத்தியாக இருந்து கொண்டன்றோ நீ
உத்தரஞ்சொல்லி யனுப்பிவைத்தாய்
அத்தனைபேர்களைச் சேர்த்துக் கொண்டு
அமட்டிகிறயாடி நீயுமென்னை (இப்போ)

(உன்) அழகான உருவத்தைக் கண்டபின்
அமர்புரிய வென் கையெழுமோ
துரத்தி எல்லோரையும் காளியை என்னுடன்
தொந்தயுத்தம் பண்ணச் சொல்வா யென்றான்

சும்பன் வார்த்தையைக் கேட்டு சசிகளை
இங்கே வாருங்கள் என்றழைத்து
வாரியணைத்தாள் சசிகள் எல்லலோரையும்
மாரோடு மறைந்து ஐக்கியமானாள்

இரண்டாம் பேரிங்கில்லை காளியுடன் நீ
எதிர்த்து யுத்தமும் பண்ணாயென்றாள்
அம்மன் செயலையும் வார்த்தையையும்கேட்டு
அம்புபட்டாப் போலுத்தானுருகி

சும்பாஸுரனும் காளிகாதேவியும்
தோற்காமலே யுத்தம் பண்ணலுற்றார்
அடித்த பந்து கிளம்பினார் போலவன்
ஆகாயத்தினிலே கிளம்பி

ஒருவருக்கொருவர் சளைக்காமல் அங்கு
ஓடோடியுத்தமும் பண்ணினார்கள்
சும்பாஸுரனும் காளிகாதேவியும்
தொந்தயுத்தமும் பண்ணினார்கள்

தேவர்களெல்லாம் பயத்துடனே மஹா
தேவியை ஸ்துதித்துக் கொண்டிருந்தாள்
எத்தனைபோதாக யுத்தம் பண்ணுவோம்
என்று காளியும் கோபத்துடன்

சும்பாஸூரனை வதைத்தாள் காளியும்
துர்காதேவியென்றம்மனை அழைத்தாள்
துக்காதேவியம்மன் அஸூரனை வதைக்க
தேவர்கள் பஷ்பமழை சொரிந்தாள்

அத்தனை தேவர்களும் கூடி ஜக
தம்பிகைதனை ஸ்துதிக்கலானார்
சுப்பநிசும்பதை ஸம்ஹரித்த எங்கள்
துர்காதேவிக்கு நமஸ்காரம்

துக்கம்போக்கியே நாடுதந்த எங்கள்
தேவியுமக்கு நமஸ்காரம்
சண்டமுண்டனை ஸம்ஹரித்த எங்கள்
துர்காதேவிக்கு நமஸ்காரம்

ரத்தபீஜனை ஸம்ஹரித்த எங்கள்
பத்திரகாளி நமஸ்காரம் (என்று)
பக்தியாய்த் தேவர்பணிந்து ஸ்ததித்திடப்
(பர)தேவியும் பார்த்துச் சந்தோஷமானாள்

*****

தேவியைப் பூஜித்து ஸ்துதித்தவர்கள் அடையும் பலனை விவரித்தல்

ஆபத்துக்கள் ஒன்றும் வாராது
அன்புடனிதைப் படித்தவர்க்கு
பேய்ப்பிசாசுகள் அண்டாதவர்களும்
புத்திரசோகம் அனுபவியார்

தரித்திரங்கள் அனுபவியார்
தீர்க்காயுசையும் நான் கொடுப்பேனங
புத்திரசம்பத்தும் நான் கொடுப்பேன்
பரதேவதை பக்தியைச் செய்தபேர்க்கு

விப்ரர்களிரைக் கேட்டு விட்டால்
வேதசாஸ்திரம் விருத்தியாகும்
க்ஷத்திரியர்களிதைக் கேட்டு விட்டால்
ஜயத்துடனே அரசாள் வார்

வைசியர்களிதைக் கேட்டு விட்டால்
வியாபாரத்தில் வெகுலாபமுண்டாம்
சூத்திரர்களிதைக்கேட்டு விட்டால்நல்ல
ஜயமடைவான் கிருஷித்தொழிலில்

ஸ்தீரீகள் பக்தியுடனே படித்தாலிதை
தீர்க்க சுமங்கலியா யிருப்பாள்
கன்னியாப் பெண்களிதைப்படித்தால் நல்ல
கணவர்தன்னை யடைந்திடுவாள்

நவராத்திரியில் தவறாமல் பூஜித்தால்
ராஜேஸ்வரியின் கிருபை யடைவார்
பஞ்சபர்வங்களில் பக்தியாய் பூஜித்தால்
பரதேவியின் பதமடைவார்

நித்தியமாக ஸ்துதித்தவர்களுக்கு
நினைத்த வரமும் நான் கொடுப்பேன்
வெள்ளி செவ்வாயில் ஸ்துதித்தவர்களுக்கு
வேண்டும் வரங்கள் கொடுத்திடுலான

மனதிலுள்ள அபீஷ்டங்களெல்லாம்
வருந்தும் உங்கட்கு தருவோமென்றான்
தருவேனென்றம்மன் சொல்லலுமே அந்த
தேவர்களெல்லாம் மனமகிழ்ந்து

ஒருக்காலும் ஆபத்து வந்திடாமல்
உகந்த ரக்ஷிக்க வேணுமம்மா
உகந்து ரக்ஷிக்க வேணுமென்றவுடன்
உலகநாயகி ஏது சொல்வாள்

அநேககாலங் கழித்தவுடன் பொல்லா
அஸுரர் மிகவும் உபத்திரவிப்பாள்
நந்தகோபர் அரண்மனை தன்னில்
கண்ணனாய் பிறந்து ரக்ஷிக்கிறேன்

பாரத மாதாவாய் ராஜ்யங்களெல்லாம்
பரிபாலித்து நான் ரக்ஷிக்கிறேன்
ஆறுதல் சொல்லியே தேவர் எல்லோருக்கும்
அம்பிகை அந்தர்த்தான மடைந்தாள்

****

சூரதனென்னற ராஜனும் சமாதி என்ற கோமுட்டியும் தேவியைப் பூஜித்துப் பலனடைதல்

வைசியனும் மகாராஜாவும் தேவியின்
மகிமை கேட்டு மனமகிழ்ந்து
தவமுனிவர் அனுக்கைஞயினால் ஜகத்
தம்மனை நோக்கித் தபசு செய்ய

சையபருவதம் சாரலிலே வந்தார்
சமாதியுடளே இராஜனப்போ
இந்திரியங்களுடன் வாயுவையும்
எல்லாவற்றையும் உள்ளடக்கி

அம்மனை நோக்கி இருவரமாய்
அநேகங்காலம் தவமிருந்தாள்
தபஸைக்கண்டதில் சந்தோஷமாய்
சங்கரியுமவாள் முன்னே வந்தாள்

என்ன வரவேணுமென்று அரசனை
ஈச்வரி தேவியுங் கேட்கலுமே
எந்தனுடையதோர் நாடுராஜ்ஜியங்களும்
எப்போதும் போலவே வேண்டுமென்றார்

ராஜ்ஜியத்தை யடைவாயென்றம்மன்
ராஜாவைப பார்த்து எடுத்துரைப்பாள்
அறுபதினாயிரம் ராஜ்ஜியத்தையாண்டு
அவதரிப்பாய் மநுவாக

ராஜாவைப் பார்த்து வரங்கொடுத்து அம்மன்
சமாதியை பார்த்துக் கேளுமென்றாள்
(உங்கள்) ஐக்கியம் ஒன்றுமே போதுமம்மா
உம்முடைய கிருபை வேணுமம்மா

அப்படியே உந்தன் சித்தம் துலங்கியே
ஆத்மாக்கியானம அடைந்திடுவாய்
ஜீவன் முக்கியடைந்திடுவாயென்று
தேவியும் அந்தர்த்தான மடைந்தாள்

ராஜனும் தேவிகிருபை யடைந்துதன்
ராஜ்ஜியமடைந்து ஆண்டிருந்தான்
சுமேதஸ் முனியின் ஆசிரமத்தில்
சமாதியும் ஞானவானாயிருந்தான்

தேவி பாகவத புராணத்திலுள்ள
சிறந்த ஐந்தாம் ஸ்கந்தமிதை
துஷ்ட அஸுரரை சம்ஹரித்த இந்த
தேவி மகிமை படித்தவர்கள்

அன்புடன் தேவி மகிமை தன்னைச் சொல்லி
அநுதினமும் ஸ்துதித்தவர்கள்
அம்பிகை பாதாரவிந்தத்திலேயவர்
ஐக்கியப் பதமடைந்திடுவாள்

மங்களம் ஜயமங்களம் ஜயமஹாதேவிக்கு
மங்களம் லலிதாதேவியுடனே மஹாகாளிக்கு
சங்கு சக்கரம் கையில் தரித்த-சக்ரநாதைக்கு
சங்கையில்லாத அஸுரனைக் கொன்ற சாமுண்டிதேவிக்கு
துஷ்ட அஸுரனைக் ஜயித்ததுர்க்காதேவிக்கு
சிஷ்டர்களான தேவரைக் காத்த ரக்தாம்பாளுக்கு
இஷ்டதெய்வமாம் எங்களை ரக்ஷிக்கும் - எமஸ்வரூபிக்கு
கஷ்டம் நீக்கிக் கருணை பொழியும் காமாக்ஷிதேவிக்கு
அஷ்டபோபாக்கியமளிக்கும ஆதிசக்திக்கு
துஷ்டபண்டாஸுரனை வதைத்த ஸ்ரீ லலிதைக்கு
சகலதேவ ஸ்வரூபியான சக்தி கௌரிக்கு
அகிலலோகத்தைப் பரிபாலித்திடும் அம்பாதேவிக்கு
வாழ்க் தேவி நாமம் வாழ்க மறைகள் வாழ்கவே
வாழ்கமானிடர் வாழ்க ஆவிளம் வளமையாகவே
பக்தருக்கருள் பொழியும் ஸ்ரீபர-தேவி வாழ்கவே
அத்யந்தபக்தியுடனே படிக்கும்-அன்பர் வாழ்கவே

தத்-ஸத்-பிரம்மார்பிதம் முற்றிற்று :

சக்தி பீடங்கள் - 64

வ.எண்.	க்ஷேத்ரம்	நாயகி	பீடம்
1.	காஞ்சி	காமாட்சி	காமகோடி பீடம்
2.	காசி (வாரணாசி)	விசாலாட்சி	மணிகர்ணிகா பீடம்
3.	மதுரை	மீனாட்சி	மந்திரிணீ பீடம்
4.	திருவானைக்கா	அகிலாண்டேஸ்வரி	தண்டினி பீடம்
5.	இராமேஸ்வரம்	பர்வதவர்தினி	சேது பீடம்
6.	மகாகாளம்	சங்கரி	மகோத்பலா பீடம்
7.	மைசூர்	சாமுண்டி	சம்பப்பிரதா பீடம்
8.	சோமநாதபுரம்	சந்திரபாகா	பிரபாலா பீடம்
9.	நந்திபுரம்	நந்தினி	கல்யாணி பீடம்
10.	நாகுலம் (தேவிகாதடம்)	நாகுலோஸ் வரி	ஒட்டியாணபீடம்
11.	காளஹஸ்தி	ஞாதனாம்பிகை	ஞானபீடம்
12.	விந்தியாசலம்	விந்தியவாசினி	விந்தியா பீடம்
13.	பாபநாசம்	விமலை	விமலை பீடம்
14.	திருவாரூர்	கமலாம்பாள்	கமலை பீடம்
15.	மணித்தீபம்	ஸ்ரீவித்யா	வித்யா பீடம்
16.	காமரூபம் (அஸ்ஸாம்)	காமரூபி	காமகிரி பீடம்
17.	புட்கரம் (ராஜஸ்தான்)	காயத்திரி	காயத்திரி பீடம்
18.	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	குமரி பீடம்
19.	திருவையாறு	தர்மசம்வர்த்தினி	தர்மபீடம்
20.	ஜலாந்தரம்	திரிபுரமாலினி	ஜலாந்திர பீடம்
21.	திருயம்பகம்	திரியம்பகதேவி	திரிகோண பீடம்
22.	திருவண்ணாமலை	அபீதகுஜாம்பாள்	அருணை பீடம்
23.	திருக்கடவூர்	அபிராமி	காவ பீடம்
24.	திருக்குற்றாலம்	குழல்வாய்மொழி	பராசக்தி பீடம்
25.	கும்பகோணம்	மங்களாம்பிகை	விட்டுணுசக்தி பீடம்
26.	திராட்சராமா	மாணிக்காம்பாள்	மாணிக்க பீடம்
27.	உஜ்ஜெயினி	மாகாளி	ருத்ராணி பீடம்
28.	கயை	மந்திரிணி	திரிவேணி பீடம்
29.	ஸ்ரீநகர் (காஷ்மீர்)	சம்புநாதேஸ்வரி	ஜ்வாலாமுகீ பீடம்
30.	சிருங்கேரி	சாரதா	சாரதா பீடம்
31.	துளஜாபுரம்	பவானி	உத்பலா பீடம்

32.	அம்பத்தூர்	வைஷ்ணவி	வைஷ்ணவி பீடம்
33.	தேவிபட்டணம்	மகிஷமர்த்தணி	வீரசக்தி பீடம்
34.	ருத்ரகோடி (கேதாரம்)	மகாளி	ருத்ராணி பீடம்
35.	பூரிஜகந்நாதம்	பைரவி (சுபத்ரா)	பைரவி பீடம்
36.	திருவெண்காடு	பிரம்மராம்பாள்	பிரணவ பீடம்
37.	ஸ்ரீ சைலம்	பிரம்மராம்பாள்	சைல பீடம்
38.	பிருந்தாவனம்	குமாரி	முக்தி பீடம்
39.	அஸ்தினாபுரம்	முக்திநாயகி	ஜெயந்தி பீடம்
40.	கொல்லூர்	மூகாம்பிகை	அர்த்தநாரீ பீடம்
41.	நீலபர்வதம் (சிம்லா)	நீலாம்பிகை	சியாமளா பீடம்
42.	வைதரணி	விரஜை	விரஜா பீடம்
43.	குருஷேத்ரம்	ஸ்தாணுபிரியை	உபதேச பீடம்
44.	மானசரோவர்	தாட்சாயிணி	தியாக பீடம்
45.	கோகர்ணம் (எமகூடம்)	சண்டி	கர்ண பீடம்
46.	கல்கத்தா	காளிகாதேவி	உக்ரசக்தி பீடம்
47.	திருநெல்வேலி	காந்திமதி	காந்தி பீடம்
48.	ஈங்கோய்மலை	லலிதாம்பிகை	சாயா பீடம்
49.	பிரயாகை (அலகாபாத)	லலிதா	லலிதா பீடம்
50.	திருவொற்றியூர்	வட்டபறையம்மள்	இட்சு பீடம்
51.	கோலாலம்பூர்	மகாலட்சுமி	கரவீர பீடம்
52.	மாத்ருபுரம்	ரேணுகாதேவி	மாத்ரு பீடம்
53.	கனகல்	உக்ராதேவி	உக்ரபீடம்
54.	அம்ராத்கேஸ்வரம்	குச்சுமாதேவி	ஆம்ராத் பீடம்
55.	ஸ்ரீபர்வதம்	சங்கரி	பர்வத பீடம்
56.	பிரபாசம்	புடகரேச்சனி	பிரபா பீடம்
57.	நைமிசாரண்யம்	லிங்கதாரிணி	ஆரண்ய பீடம்
58.	வேதாரண்யம்	யாழ்மொழியம்மை	வசுலா பீடம்
59.	அமரேசம்	கண்டி	அமர பீடம்
60.	கச்சிநகர்	யோகேஸ்வரி	தேஜோ பீடம்
61.	விந்தியமலை	பீமேஸ்வரி	மகாநந்த புரம்
62.	ஸ்துலமேகஸ்வரம்	ஸ்தூலேஸ்வரி	ஸ்தூல பீடம்
63.	ஆஷாடம்	ஸ்ரீதேவி	ரதி பீடம்
64.	சிதம்பரம்	சிவகாமி	சிற்றம்பல பீடம்

துர்கா ஸ்தோத்திரம்

எப்பேர்பட்ட கஷ்டங்களிலிருந்து விடுபடவும் எண்ணியது எண்ணியபடி நடக்கவும், கலிகாலப் பிரத்யட்ச தெய்வமான ஸ்ரீ துர்கையை செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் (மாலை 3 மணி முதல் 4.30) வழிபடுவது பிரத்யட்க்ஷ பலனைத் தருகிறது. ஸ்ரீசௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ கச்சாலீஸ்வரர் ஆலயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ துர்காம்பிகை சந்நதியில் பின் கண்ட ஸ்லோகம் எழுதப்பட்டுள்ளது. ஒன்பது செவ்வாய்க் கிழமை விடாமல் பாராயணம் செய்து வந்தால் நாம் நினைத்தபடி நடந்து அம்பிகையின் பரிபூர்ண கடாக்ஷமும் கிடைக்கின்றது.

மஹாதேவ உவாச

ரக்ஷ ரக்ஷ ஜகந்மாத : தேவி மங்கள சண்டிகே
ஹாரிகே விபதாம் ராசே : ஹர்ஷ மங்கள காரிகே
ஹர்ஷ மங்களே தக்ஷேச ஹர்ஷ மங்கள நாயிகே
சுபே மங்களே தக்ஷேச சுபே மங்கள சண்டிகே
மங்கள மங்களார் ஹேச ஸர்வ மங்கள மங்களே
ஸதாம் மங்களே தேவி ஸர்வேஷாம் மங்களாலயே
பூஜ்ய மங்கள பூபஸ்ய மநு வம்சஸ்ய ஸந்ததம்
மங்களா திஷ்டாத்ரு தேவி மங்களாம் சமங்களே
ஸம்ஸார மங்களாதாரே மோக்ஷ மங்கள தாயினி
ஸாரே சமங்களாதாரே பாரேச ஸர்வ கர்மணாம்
ப்ரதி மங்கள வாரே சபூஜ்ய மங்கள சுகப்ரதே
பூஜ்ய மங்கள வாரே சமங்கள புஷ்ட தேவதே

மஹா சண்டிஹோமம்

(1) மஹா சண்டி ஹோமம் மயா துர்கை நாமம்
மஹா பாவம் போக்கும் - அது
மனதில் இன்பம் சேர்க்கும் (மஹா)

(2) சதா அவளை தியானி
துயர் சுமை நினைக்கும் ஞானி
பதாசுரம் தோணி-அவள்
பாதம் உயர்த்தும் ஏணி (மஹா)

(3) அகிலம் காக்கும் இறைவி
அவள் ஆடல் அரசனின் துணைவி
மகிஷன் என்னும் அரக்கனை
அவனை மர்த்தனம் செய்த தேவி- (மஹா)

◆◆◆◆

அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்ரம்

1. ஆதிலக்ஷ்மி

ராகம் : கல்யாணி
தாளம் : ஆதி

ஸுமனஸ வந்தித ஸுந்தரி மாதவி
சந்த்ர ஸஹோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷ ப்ரதாயினி
மஞ்ஜுள பாஷிணி வேதநுதே !!
பங்கஜ வாஸினி தேவஸுபூஜித
ஸத்குண வர்ஷிணி சாந்தியுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
ஆதிலக்ஷ்மி ஸதா பாலய மாம் !!

2. தான்யலக்ஷ்மி

ராகம் : ஷண்முகப்ரியா

அயிகலி கல்மஷ நாசினி காமிநி
வைதிக ரூபிணி வேதமயே
க்ஷீரஸமுத்பவ மங்கள ரூபிணி
மந்த்ர நிவாஸிநி மந்த்ரநுதே !
மங்கள தாயினி அம்புஜ வாஸிநி
வேத கணாச்ரித பாதயுதே
ஜய ஜய ஹே மதுஸூதே காமிநி
தான்யகக்ஷ்மி ஸதா பாலய மாம் !!

3. தைர்யலக்ஷ்மி

ராகம் : ஹம்ஸாநந்தி

ஜய வர வர்ணிநி! வைஷ்ணவி பார்கவி
மந்த்ர ஸ்வரூபீணி மந்த்ரமயே
ஸுரகண பூஜித சீக்ர பலப்ரத
ஜ்ஞான விகாஸிநி சாஸ்த்ரநுதே !

பவபய ஹாரிணி பாப விமோசநி
ஸாது ஜநாச்ரித பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
தைர்யலக்ஷ்மி ஸதா பாலயமாம் !!

4. கஜலக்ஷ்மி

ராகம் : திலங்

ஜய ஜய துர்கதிநாசினி காமிநி
ஸர்வ பலப்ரத சாஸ்த்ரமயே
ரதகஜ துரக பதாதி ஸமாவ்ருத்
பரிஜன மண்டித லோகனுதே !
ஹரி ஹர ப்ரஹ்ம ஸுபூஜித ஸேவித
தாப நிவாரிணி பாதயுதே
ஜயஜய ஹே மதுஸூதந காமிநி
கஜலக்ஷ்மி ரூபணே பாலய மாம் !!

5. ஸந்தானலக்ஷ்மி

ராகம் : பாகேஸ்வரி

அயி கக வாஹிநி மோஹிநி சக்ரிணி
ராக விவர்த்தினி ஜ்ஞ்ானமயே
குண கண வாரிதி லோக ஹிதைக்ஷிணி
ஸ்வரஸப்த பூஷித கானனுதே !
ஸகல ஸுராஸுர தேவ முநீச்வர
மாநவ வந்தித பாதயுதே
ஜய ஜயஹே மதுஸூதந காமிநி
ஸந்தானலக்ஷ்மி ஸதா பாலய மாம் !!

6. விஜயலக்ஷ்மி

ராகம் : ஸாரங்கா

ஜய கமலாஸநி ஸத்கதி தாயிநி
ஜ்ஞான விகாஸினி கானமயே
அனுதின மர்ச்சித குங்குமதூஸர
பூஷித வாஸித வாத்யனுதே !

கனகதார ஸ்துதிவைபவ வந்தித
சங்கர தேசிக மான்யபதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
விஜயலஷ்மி ஸதா பாலய மாம் !!

7. வித்யலக்ஷ்மி

ராகம் : கானடா

ப்ரணத ஸுரேச்வரி பாரதி பார்கவி
சோகவிநாசிநி ரத்னமயே
மணிமய பூஷித கர்ணவிபூஷண
சாந்தி ஸமாவ்ருத ஹாஸ்யமுகே !
நவநிதி தாயிநி கலிமல ஹாரிணி
காமித பலப்ரத ஹஸ்தயுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
வித்யாலக்ஷ்மி ஸதா பாலய மாம் !!

8. தனலக்ஷ்மி

ராகம் : சுருட்டி

திமி திமி திந்திமி திந்திமி திந்திமி
துந்துபி நாத ஸுபூர்ணமயே
கும கும கும்கும கும்கும கும்கும
சங்க நிநாத ஸுவார்யநுதே !
வேத புராணே இதிஹாஸ ஸூபூஜித
வைதிக மார்க ப்ரதர்சயுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
தனலக்ஷ்மி ரூபணே பாலயமாம் !!

அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

சகலகலாவல்லி மாலை

என்னும்

சரஸ்வதி தோத்திரம்

(கலைமகள் புகழ்மாலை)

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்க என வெள்ளையுள்ளத்
தண்டா மரக்குத் தகாதுகொ
லோசககம் ஏழுமளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாக உண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே (1)

நாடு பொருட் சுவை சொற்சுவை
தோயத் தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கணதனக் குன்றும ஜம்பாற்
காடும் சுமக்கும கரும்பே
சகல கலா வல்லியே (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோஉளாங் கொண்டு தெள்ளித்
தேளிக்கும பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கொண்டு
களிங்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே (3)

தாக்கும பனுவல் துறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வாட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலா வல்லியே (4)

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவசம் உயர்த் தோன்செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே (5)

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி செய்த நல்
காய் எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே (6)

பாட்டும் பொருளும பொருளாற்
பொருந்தும் பயனும என் பாற்
கூட்டும் படி நின் கடைக் கண் நல்
காய் உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம் பால்
அமுதந் தெளிக்கும வண்ணங்
காட்டும் வெள் ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே (7)

செல்விற் பனமும் அவதான
முங்கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந்தந் தடிமை கொள்
வாய்நளி சைனஞ் சேர்
செல்விக் கரிதென் றெருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப பெருஞ் செல்வப பேறே
சகல கலா வல்லியே (8)

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்ப் புழுக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாண நடை
கற்கும் பதாம் புயத் தாளே
சகல கலா வல்லியே (9)

மண்கண்ட வெண்குடைக கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாபடைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல் கோடியுன்
டேனும விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே (10)

* * *

வரலக்ஷ்மி பூஜை பாடல்

பூஜை செய்வோம் நாம் பூஜை செய்வோம்
புண்ணிய தினத்திலே பூஜை செய்வோம்
ஏகாந்தமாக இருக்கும் வரலக்ஷ்மியை
எந்தாளும் பூக்கொர்ண்டு பூஜை செய்வோம் (1)

அன்பர்கள் அனைவரும் அம்புஜ மலர் கொண்டு
ஆனந்தமாகவே பூஜை செய்வோம்
இஷ்டமுடனே கஷ்டங்களை போக்கும்
ஈஸ்வரியை நாம் பூஜை செய்வோம் சதா (2)

புதிதாய சித்திரம் வரைந்திடுவோம் நாம்
பொன்னால் பந்தல் அமைதத்திடுவோம்
வாழைகள் தோரணம் கட்டிடுவோம் நாம்
வரிசையாய் விளக்குகள் ஏற்றிடுவோம் (3)

எழை கோலமிட்டு பலகையின் மேலே
ஏராளமாகவே நெல் பரப்பி
ரேழியில் வைத்து ரத்ன விளக்கேற்றி
ரகசிய அம்மனை அழைத்திடுவோம் (4)

தங்க கலசத்தில் திருமுகம் எழுதி
கங்காஜலம் வைத்து கீர்த்தியுடன்
மங்களகரமாக சிங்காரம் செய்து
மணைமேல் அம்மனை வைத்திடுவோம் - நாம் (5)

அம்மனை பந்தலில் கொண்டுவந்து வைத்து
அந்தணர் பூஜையை ஆரம்பித்தார்
விக்னங்கள இல்லாமலே வேளைதப்பாமலே
விக்னேஸ்வரர் பூஜை ஆரம்பித்தார் ஸ்வாமி (6)

சம்பங்கி ரோஜா சரக்கொன்ன இருவாக்ஷி
நீலோத் புஷ்பமுடன் செவ்வரளி
பிச்சா நந்தியா வட்டை பச்சை துளசியுடன்
வில்வமுடன் பூஜை செய்திடுவோம்-நாம் (7)

பண்டு பலாதிகள் பலபக்ஷ்க்ஷ முடனே
பக்குவமுள்ள நைவேத்தியமுடன்
உடைத்த தேங்காயுடன் கதலி பழமும்
தாம்பூல நைவேத்தியம் செய்திடுவோம் - நாம் (8)

சிறியதோர் பூஜை முடிந்த பின்பு நாம்
சிங்கார ஹாரத்தி எடுத்திடுவோம்
மஞ்சன் குங்குமம் கொடுத்திடுவோம் நாம்
மஹாலக்ஷ்மியை உள்ளே அழைத்திடுவோம் (9)

சூஸ்த்திரதாரமும் கட்டி கொண்டு நாம்
சுகமதாய் எல்லோரையும் நமஸ்கரிப்போம்
அந்தணர்க்கு சிந்தை மகிழவே
பூர்ண தக்ஷிணை கொடுத்திடுவோம் (10)

எளியவரை நாம் அழைத்திடுவோம் நாம்
ஏகமாய் தானமும் கொடுத்திடுவோம்
வயிறு நிறைய இட்டிடுவோம் நாம்
வேணதெல்லாம் பாக்கியம் செய்திடலாம் (பூஜை) (11)

◆◆◆◆

ஸௌந்தர்யலஹரீ
அழகு வெள்ளம்
கணபதி துணை

ஓமென்னும் சக்தியத்தின உட்பொருளாய் நின்றே
உண்மையினைத் தேடு பவர்க்கு வட்டாததேனாய்
ஆமென்ன ஐஞ்கரத் தோடாமுனைமுகம் தாங்கி
அடியவர் கெளியராய் எங்கும் நிறைதேவ
பூமணக்கும அம்பிகைமேல் அழவெள்ளம் பாடி
பூரித்த சங்கரன் சொல்செந் தமிழில் சொல்ல
தேன் மணக்கும் மலர்மாலைக் கணபதியே நின்றன்
திருவடிகள காப்பாக்கித் தொழுதிடுவவேன் தேவே !

1. சுபம் திருவும் சித்தி

இராகம் : ஆனந்தபைரவி

திங்களைச் சடையில் தரித்திடும் சிவன்பால்
தேவிநீ அன்புடன் ஒன்றித்
தங்கிடி லன்றி இயங்கிடும் திறமும்
இறைவனே இழந்திடும் என்னில்
கங்கைவார் சடையன் அயன் திரு மாலும்
கைதொழு தேத்தியே போற்றும்
பங்கையச் செல்வி புண்ணிய மிலார் நின்
பாதேம தொழுவம் எளிதோ !

2. உலகம் உன்வசம்

இராகம் : ஆனந்தபைரவி

தாயுன்றன் பாதத் துகளினைக் கொண்டு
சதுர்முகன் உலகினைப் படைக்க
தூயதோர் ஆதி சேடன் துருவில்
சுடர்முடி ஆயிரம் கொண்ட
மாயவன், உன்றன் மலரடித் துகளாம்
மாபெரு முலகுகள் சுமக்க
நாயகன் சிவனும் மேனியிலதனை
நலமுறப் பூசியே மகிழ்வான்

3. சகல கலையும் அமையும்

இராகம் : யதுகுலகாம்போதி

அறிவிலார் உளத்தே அகத்திருள் மடிய
அருணநல் உதயமாய்த் தோன்றும்
செறிந்திடு கற்பக மலர்மக ரந்தம்
தேர்ந்தநல் ஞானமாய் இலகும்.
வறியவர் துயரம் துடைத்திடும் சிந்தா
மணியென விளங்கிடும். ஆழி
பிறவினின் றெடுக்க முராரியின் வராகப்
பிறையெயி றாகுமத் துகளே !

4. பயநிவர்த்தி ரோக நிவர்த்தி

இராகம் : யதுகலகாம்போதி

விஞ்சையே புரியும் திருவடி யுடையோய்
வேறுள தெய்வங்கள் எல்லாம்
அஞ்சுவோர் தமக்கு அஸ்தமே காட்டி
அபயமே தருவதற் கழைக்கும்
மஞ்சுபா ஷிணியே நீயெதும் காட்டி
மனிதரை அழைத்திலை எனினும்
தஞ்சமென் றுந்தன் தாளினை அடைந்தார்
சகலமும் பெற்றுவாழ்ந் திடுவார்.

5. குடும்ப ஒற்றுமை நிலவும்

இராகம் : ஆரபி

மாந்தருக்கே சௌபாக்கிய மருள்வோய்
மாலுனைப் பூசனை புரிந்து
போந்துதன் எழிலார் மோகினி வடிவால்
புராரியும் மயங்கிடப் புரிந்தான்
எந்தி நின் பாதம் போற்றிய காமன்
இரதியும் மயங்கெழில் வெய்தி
சாந்தமார் முனிவர் தம்மையும் மயக்கும்
சதுரனாய் ஆயின னன்றே

6. மக்கள் பாக்யம்

இராகம் : ஆரபி

அனங்கனின வில்லே மலர்களே யாக
அதற்குறு நாணோ தேனீக்களே யாக
இனங்கொளும் ஐந்து மலர்க ளம்பாக
இன்னிள வேனில் அமைச்சனு மாக
மனங்கவர் பொதியத் தென்றல் தேராக
மலைமகளே நின் பார்வையி னாலே
கனவென உலவும் உருவிலாக் காமன்
காசினி முழுவதும வென்ற னன்றே

7. விரோதம் நீங்கும்

இராகம் : ஸிம்மேந்திரமத்யம்

முழுமதி நிகர்த்த முகம் அருள் பொழிய
முப்புர மெரித்த சிவன்மனம் நெகிழ
தழுவிய இடையில் மேகலை குலுங்க
தளா நகில்கனம் இடைமெலத் துவள
கழைவில்லுடனே கடிமலர் அம்பும்
கையி லங்குச பாசமும் தரித்து
தொழுதிடும் அடியார் முன்வந் தருளும்
தேவி என் முன் நீவர வேண்டும்

8. துயரம் தீரும் இலட்சிய சித்தி

இராகம் : ஸிம்மேந்திரமத்யமம்

அமிர்தக் கடலில் கற்பக மரங்கள்
அழகுறச் சூழ்ந்த இரத்தினத் தீவில்
திமிர்ந்துற கதம்ப மரநிறை காவில்
திகழொளி சிந்தா மணிபுனை மனையில்
இமிழ்சிவ வடிவாம் கட்டிலின் மிசையே
இறைவனாம் சிவன் தொடைகளின் மீதே
குமிண்நகை புரிந்து கொலுவீற் றிருக்கும்
குமரியே நின்னைத் தொழுபவா மேலோர்.

8. மனையைப் பிரிந்தவன் திரும்பி வருவான்

இராகம் : குந்தள, வராளி

மூரதாரநில மணிபூரக நீர்
முண்ட ஸ்வாதிஷ்டா னமர் தீயுடன்
சீல அனாஹத வாயுவும் தாண்டி
சேர் விசுத்த ஆகாயமும் ஏறியே
ஞால ஆக்ஞா மனத் துத்துவங்கள்
யாவையும் சுழிமுனை வழியில் பிளந்து
கோல மாயிர இதழ்க் கம லத்தில்
குலவு கின்றாய சதா சிவர்க் கூடவே

10. சரீர சுத்தி ஆண்மை வரும்

இராகம் : குந்தள, வராளி

திருவடி இரண்டி லிருந்துமே பெருகும்
திருவருள் அமுத் வெள்ளமாய் பெருக
பருவுருக கொள் ஐம் பூதங்க ளாலே
படைப்புறு முடலின் நாடிகள் நனைய
அருள் பொழி மதியின் மண்டலம் விட்டு
அடைகுவை அண்டக் குகையினைத் தேடி
உருவினில் குண்டலி யாம்சிவ சக்தி
உட்புகுந் தங்கே உறங்கிடுவாயே.

11. நன்மக்கட்பேது

இராகம் : பூபாளம்

சிவசக்கரம் ஒருநான்கும் வடதிசையை நோக்க
தேவியுன் ஐந்துவட்டம் தென்புறமே பார்க்க
பவமான ஒன்பதுமே உடலுலக மாக
பரிகார பிண்டாண்ட யோனியது வாகி
சிவயுவதி அஷ்டவசு எண்தளங்க ளாக
சேர்ந்தகலை ஈரெட்டு மேல்தளங்க ளாக
நவமான மூவட்டம் முக்கோடு நால்வாய்
நாற்பத்து நான்காகி ஸ்ரீ சக்ர மானாய்.

12. ஊமையும் பேசும்

இராகம் : பூபாளம்

வாணியருள் மாகவிஞர் நான்முகனார் தாமும்
வாக்காலே நின் அழகை வடித் துவமைகூற
பேணிபல வழிமுயன்றும இயலாதா ராவார்
பேரழகே நின் அழகை ஏர் அமர மாதர்
காணுதற்குக் காதலுற்றுக் கடுந்தவமே செய்து
கண்ணுதலான் கண்ணதனால் நின்னை நிதம் கண்டு
தாணுவருள் சாயுச்ய பதந்தன்னை மட்டும்
தம்மனதால் எய்தி சக்தி தாஸருமே யாவார்.

13. ஆன்ம சுகம் பெற

இராகம் : தேஷ்

தேவிநின் கருணைநிறைக் கடைக்கண்ணின் பார்வை
சிறுமனிதர் தம்மீதே விழுந்திடுமே யாகில்
பூவில்லாக் கொடியெனவேமூடஜட மென்னப்
புகழில்லாப பேதையென அவன்வாழ்ந்த போதும்
ஆவியெனக் கன்னியர்கள் துகல்குழல்தாம் சோர
அவனிடத்து வேட்கையுற்றுப் பின்தொடர்வார் அன்றே
காவியமே சகரமாம் காமேசன் தன்பால்
கலந்திடவே சக்திவெள்ளம் நடத்துகிறாய் தேவி.

14. பஞ்சம், கொள்ளை, நோய் தீர

இராகம் : தேஷ்

நிலம்நீர் தீ வளி வானம் மன மாறு நிலையில்
நிறைகின்ற ஆதாரம் ஆறுசக்ர மாக
உலகிதனில் நாட்களது பிண்டாண்டம் தன்னில்
உணர்வுபெறு கிரணங்கள் எனவிரிந்து நிற்க
குலவிடு மூலதாரக் குகையிருந்து நின்னைக்
குறிப்பாக முத்தீயும் ஒடுங்கு கின்ற சோதி
திலதமிடு ஆயிரமாம் இதழ்க்கமலம் தன்னில்
தேவியுனை ஏற்றிஇரு திருவடிகள் துதிப்போம்.

15. கவித்துவம் பெற

இராகம் : பிலஹரி

சரத்கால வெண்மதிபோல் திகழும்நின் மேனி
சடைமுடியில் பிறைமதியும் மணிமுடியும்சூடி
கரங்களிலே புத்தகம்வெண் ஜபமாலை கொண்டு
கருணை அருள் வரம்தந்து அபயமதும் தருமே
சிரம்தாழ்த்தி ஒரு முறை நின் சேவடியைத் தொழுதே
சிந்திக்கும கவிவாணர் சிந்தையினில் நீயே
சரமழைபோல் தேன்தீம்பால் திராட்சையிலும் இனிதாய்
சத்தயமாம் சொற்கள் தமை சமைத்திடுவாய் தாயே.

16. வேத ஆகம ஞானம் பெற

இராகம் : பிலஹரி

வெள்ளைமனம் படைத்த கவிவாணர்களின் சித்தம்
மேலான கமலவன மேவும இளங் கதிராய்
அள்ளுசுடர் கண்டுன்னை அருணன் எனப்போற்றி
அருளாளர் கவிவாணா தொழுதேத்தி நின்றால்
தெள்ளுதமிழ்க் கவிவாணர் சிந்தையினில் பிரமன்
தேவியவன் நாமகளும தெள்ளமுதம் துள்ள
வெள்ளமென அருட்கவிதை வீறுகொளச் செய்வாள்
மேதினியோர் உள்ளமெலாம் கேட்டுமகிழ் வெய்தும்

17. வெல்லும் சொல் பேச

இராகம் : நீலாம்பரி

சந்திர காந்தக் கல்லொன்று பிளந்ததனால் தோன்றும்
தனிக்காந்தி போல் திகழும்வசீனியெனும் சக்தி
மந்திரம்போல் வாக்கினுக்கு வலிமை தரும் சக்தி
மாசக்தி நின்னுடனே வைத்துவழி பட்டால்
எந்நாளும் வீறுபெற்று மந்திரம்போல் நிற்கும்
எதிரில்லாச்சொற்கள் தமை ஈந்திடுவாய் தாயே
சிந்தையிலே நாமகளும் தீங்கவிதை ஆக்கத்
திறம்தருவாள் சொல்லும் உயிர் பெற்றிங்கே வாழும்

18. வாக்குப் பலிதம்

இராகம் : நீலாம்பரி

இளஞாயி றெனுமுன்றன் எழில்மேனி நின்றும்
எழுகின்ற கிரணங்கள் இவ்வுலகும வானும்
இளம்சிகப்பில் முழுகவைக்கும எழில்காட்சி தன்னை
இனமறிந்து தியானிப்பார் எவரெனினும் அந்த
உருமுருகும் நின்னடியார் வசப்பட்டு நிற்க
ஊர்வசியும் வானகத்து மான்விழியைக் கொண்ட
இளமைமிகு கன்னியரும பின்தொடர்ந்து நிற்பார்
ஈதெல்லாம் நின்னுடைய இன்னருளேயன்றோ.

19. மனிதர், மிருகங்கள் வசப்படுவர்

இராகம் : அசாவேரி

சிவன்மகிழும் மாசக்தி ஸ்ரீசக்ரம தன்னில்
திகழ்பிந்து முகமலராய்த் தியானத்தில் இருத்தி
தவமகள் நின் தனமிரண்டும் அதன்கீழே யுள்ள
சரிபாதி சிவசக்தி குறியைமனங் கொண்டு
சிவசக்தி நின்னுடைய காமகலை க்லீமை
தியானிக்கும் எவரிடத்தும் காமசக்தி யாவும்
யுவதிகளும் ஆதித்த சந்திரரைத் தனமாய்
உற்றுள்ள மூவுலகும் மயங்கிநிற்கு மன்றோ?:

20. விஷஜுரம் தீரும்

இராகம் : அசாவேரி

சந்திகாந் தத்தினையே ஒத்துளநின் மேனி
தனித்தனியே அமிர்தரசம் தான் துளிர்க்கும அங்கம்
மந்திரமாய் மனத்திருத்தித் தியானித்து நின்றால்
மகிமைமிகு கருடனைப்போல் வலிமைமிக ஓங்கி
சந்ததமும் சர்ப்பமதின் மதமடக்கும சக்தி
தாம்பெறுவ தோடமிர்த நாடியதனாலே
சுந்தரமாய்க் கண்பார்வை படுகின்ற போதே
ஜுரமடங்கிப் பீடையது தொலைந்திடுமே தாயே!

21. சகலஜன கோபம் தீரும்

இராகம் : ஷண்முகப்ரியா

வான் தோன்றும் மின்னலெனத் தோன்றிடுநின் மேனி
வடிவாக முகத்தீயில் ஒளிர்கின்ற சோதி
கோனாகு மாதாரம் ஆறதற்கும் மேலாய்க்
கொண்டிடுமா யிரத்தெட்டாம இதழ்க்கமலம் தன்னில்
மேன்மையுடன் நிலைபெறுமுன் "ஸதா" என்னும் கலையை
மெய்ஞானத்தால் காமம் அவித்தைமயல் விட்டுத்
தானறிந்த ஞானியர்கள் தன்மனத்தே போற்றிச்
சத்யமாய் அலையலையாய் நித்யசுகம் பெறுவார்.

22. சகலமும் சித்திக்கும்

இராகம் : ஷண்முகப்ரியா

என்னிடத்தே கருணைவிழி வைத்திடு பவானீ
எனத்துதித்துப் பாடுதற்கே அடியெடுத்து நின்று
அன்னையே பவானிநீ எனத்துதிக்கும போதே
அப்பொழுதே அரிஹரனும அயனும தொழுதேத்தும்
தன்னிகரில்லா நின்றன தாளிணைகள் காட்டிச்
சாயுஜ்ய பதம் அருளும தயவுடைய தாயே
சின்மயமாய் விளங்குதிரு சிவனுடைய தேவி
சித்தமது வைத்தெமக்கே அருள்தருவாய் பவானீ

23. ஸர்வ சம்பத்து வரும், கடன் தீரும்

இராகம் : நாதநாமக்கிரியா

என்உளத்தில் இளம்சிவப்பாய் இலங்குகின்றாய் தாயே !
இருநகிலும் முக்கண்ணும் பிறைமதியும் கொண்டாய்
தன்னிறமாய் வெண்நிறங்கொள் ஸதாசிவனைக் கூடி
தாயேநீ அவனுடலில் இடப்பாகம் பெற்றும்
பொன்னுடலில் ஒருபாதி பெற்றடங்காமனத்தால்
பூரணமாய் சிவன உடலை நீ கவர்ந்தாய் என்பேன்
அன்னையுடன அப்பனுமாய் ஒரு வடிவம் தாங்கி
அனைத்துலயகம் ஆளுகிறாய் அருளுடைய தாயே !

24. பூதப் பிரேத பிசாசு பய நிவாரணம்

இராகம் : நாதநாமக்கிரியா

அயன்படைக்க அரிகாப்பன் உருத்தரனேஅழிப்பன்
அம் மூவர் தம்மையுந் தன்னுள் மறைக்கு மீசன்
இயன்றிடுதன் னுடலினையும் மறைத்திடுவ னாங்கே
எழிலோழுகும கொடிநிகர்நின் புருவ நொடி யசைப
நயமுணர்த்தவ் வாணையினால் சதாசிவனும் அந்த
நால்வரையும் ஏவியுயர் நன்மைபுரி கின்றான்
பயன்புரிய யாவரையும் ஏவுகின்ற அன்னாய்
பாக்கியமே புரியநின்றன் பார்வைவலி என்னே?

25. உன்னத பதவி கிட்டும்

இராகம் : அடாணா

சிவசக்தி நின்னுடைய திருவடிகள் தம்மில்
செய்கின்ற பூசனைகள யாவும் மூர்த்தி
தவமுடைய சிரங்களிலே செய்பூசை யாகும்
தாயுந்தன் திருவடியைத் தாங்கரத்ன பீடச்
சுவடருகில் மூவருமே தொழுதேத்தி நிற்பார்
சுடர் சிரசில் பூசனையின் மலர்விழுமே யன்றோ
சிவசக்தி ஆதாரம் ஆளுடன்முக் கண்டம்
திகழ்கின்ற முக்கிரந்தி மேனின்றாய் நீயே!

26. அகத்தும் புறத்தும் சத்துரு நாசம்

இராகம் : அடாணா

அயன்மாலும ஊழியதில் அமிழ்ந்தழிந்து போக
அண்டத்தில் நமன் அழிய அளகேசன் அழிய
வியனார்ந்த வானகத்தே ஓய்வறியா வாகி
விளங்குகிற இந்திரனார் வரிசையுமே துயில
நயமாகும் "ஸதா" என்னும் கலையாலே நின்னை
நயந்திட்ட ஸதாசிவனை அணைத்தென்னும் காத்தாய்
தயவுடையாய் பதிவிரதைத் தன்மையினாய் நின்றன்
தாள் பணிந்த அடியேனைக் காத்திடுவாய் தாயே

27. ஞான சித்தி

இராகம் : காம்போதி

என்னுரைகள் அத்தனையும் நின்ஜபமே யாக
இயங்கிடுமென் செயலெல்லாம் முத்திரைபத் தாக
உன்னைவலம் வருவதென என் நடைக ளாக
உண்பதெல்லாம் வேள்வீத்தீ ஹோம ஹவிசாக
மன்னுலகில் படுப்பதுமே வணக்கமதே ஆக
மற்றுள்ள செயல்யாவும் நின்பூசையாக
அன்னையென் ஆவியுட லத்தனையும் ஸதாவில்
ஐக்கியமாய் ஆகிவிட அர்ப்பணித்தேன் இன்றே.

28. விஷபயம் தீரும்

இராகம் : காம்போதி

பாற்கடல் கடைந்தே அமுதினைப பகிர்ந்து
பருகயன முதலிய தேவர்
நேர்படு மூப்புப் பிணிதுயர் தீர்ந்து
நிலைக்கினும் ஊழியில் மடிவர்
தீர்த்தனோ கொடிய ஆலகாலத்தைத்
தின்றனன் என்னினும் வாழ்வான்
கார்த்தடங் கண்ணிநின கற்புடன் தோடும்
காத்தது கண்டனை யன்றோ ?

29. மூர்க்கனும் வசமாவான்

இராகம் : முகாரி

தேவியே நீதான் மந்திரத் தவிசில்
திருக்கொலு வமர்ந்துள்ள போது
தேவர்தம் தேவன் ஸதாசிவன் நின்னைத்
தேடியுன் இருக்கைக்கு வரவும்
சேவடி படாமல் அரி. அயன் முடியும்
தேவர்கோன் முடியதும் ஒதுங்க
கூவுசே டியர்தம் குரலதும் ஒலிக்கக்
குமரிநீ எழுந்தெதிர் வருவாய்

30. தைரியம் கிட்டும்

இராகம் : முகாரி

ஆதியந்த மற்றபரம் பொருளாம் தாயே
அழகிநின் மேனியதில் அணிமா சித்தி
சோதிமிகு கிரணங்கள் சூழ்ந்து நிற்கச்
சேவிக்கும் அடியவர்தம் ஆன்மா வென்றே
ஆதிநினைத் தொழுதேத்திச் சிந்தித் தென்றும்
அனுபூதி பெற்றசிவ சாயுஜ்ய மேனும மேதினியில்
துரும்பெனவே மதித்திடுவார் அந்த
மேலவர ஊழித்தீ ஆலம்சுற ளாதோ?

31. ஸர்வ வசீகரம்

இராகம் : தோடி

அவரவர் நாடும் சித்தியை வழங்க
அறுபத்து நான்கு தந்திரத்தால்
பவனெனும் பரமன் இவ்வுலக மெங்கும்
பரப்பியே சிவமென அமர்ந்தான்
தவமகள் நினது விருப்பினை அறிந்த
ஸதாசிவம் அறம்பொருள் இன்பம்
குவலயம் தன்னில் வீடுடன் எல்லாம்
கொடுக்க நின் வித்தையைப் படைத்தான்

32. கார்ய சித்தி, தீர்க்காயுள்

இராகம் : தோடி

அன்னையே காதிவித்யா அக்ஷரங்க ளாகும்
அருளுசிவ பீஜம் வாக் பவகூட மாகும்
கன்னி லோபாமுத்ரா வித்யா மதன்பீஜம்
காமராஜ கூடமென ஆக்ஞையிலே ஆடும்
தன்னுறுதுர் வாசவித்யா சக்திகூட மாகித்
தனியாக லலாடத்தில் வயாபித்து நிற்கும்
உன்வடிவாம் இவற்றோடு புவனேஸ்வரி பீஜம்
ஒன்றாக்கிப் போற்றிடுவோம் மந்திரமாம் இஃதே

33. நினைத்தது நடக்கும்

இராகம் : ஹம்ஸாநந்தி

எங்கணுமே நிறைந்தபர மேஸ்வரியே தாயே
ஈடில்லா நின்பஞ்ச தசாக்ஷரியின் முன்னால்
மங்களமாய் காமபீஜம் க்லிம்தன்னை வைத்து
மா புவனேஸ் வரியுடைய ஹ்ரீம்பீஜத் தோடு
தங்குமகா லட்சுமியின் ஸ்ரீம்பீஜம் சேர்த்து
தவச்செல்வர் எந்நாளும் தளராமல் போற்றி
பொங்குசிவாக் னியில் சிந்தை ஜெபமாலை யென்னப்
பூரிப்பே நெய்யாக்கிப் போற்றுவராம் தாயே.

34. அருள் விளக்கம் பெறலாம்

இராகம் : ஹம்ஸாநந்தி

சந்திரனும சூரியனும இருநகில்க ளாக
தான் கொண்ட தாயேநீ சிவன் உடலமானாய்
எந்தைசிவன் ஒன்பதெனும் வியூகமதின் ரூபம்
ஈடில்லா காலம்குலம் நாமமொடு ஞானம்
பிந்துகலை நாதம்சித்தம் ஜீவன் என்னும் சிவனில்
பேரழகே நின்னுருவை மனக்கண்ணால் கண்டு
அந்தரத்தில் நீ அவனாய் அவன் நீயாய் ஆகி
ஆனந்த பைரவ பைரவி யானாய் தாயே !

35. ஷயரோகம் போகும்

இராகம் : ஹிந்தோளம்

ஆக்ஞையிலே மனதாக விளங்குகின்றாய் தாயே
ஆகாசம் விசுத்தியிலே இருப்பாயும் நீயே
பாக்கியமாய் அனாகதத்தில் வாயுவென ஆவாய்
பாலிக்க ஸ்வரிஷ்டான அக்கினியு மானாய்
தேக்காத நீர் மணிபூ ரகத்தினிலே நிறைந்து
தேர்ந்தமூலா தாரத்தில் நிலமானாய் தாயே
காக்கின்ற கருணையதால் சிவபத்னி சித்தாய்
காண்பொருளாய் பிறிதின்றி எங்குநிறை வானாய்.

36. வியாதிகள் தீரும்

இராகம் : ஹிந்தோளம்

கோடிசூர்ய சந்திரரின ஒளியெல்லாம் கூட்ட
குறையில்லா ஒளிக்காசி புருவமத்தி தன்னில்
ஆடிவரும் பரஞ்சோதி தன்னை இருபுறமும்
அனைத்துளநீ சகுணமுடன் நிர்க்குணமு மானாய்
தேடி அந்த சிவனையான் தொழுதிடுவேன் தாயே
தேவாதி தேவன் அந்த சிவனைஎவ ரேனும்
நாடியபடி பணிந்திடுவார் முக்தீக்கம எட்டா
நயனங்கள காணாநின் சாயுஜ்யம் பெறுவார்

37. மருள் நீங்கும்

இராகம் : கர்நாடகதேவகாந்தாரி

சந்திரனில் நின்றொளிரும் மாசக்தி நீயும்
தனிப்பரிதியில்விளங்கும் சிவனுடனே சேர்ந்து
அந்தரமாம் விசுத்தியிலே தில்லையிலே கூடி
ஆனந்தப் பெருவெள்ள ஆதார மானாய்
சுந்தரமாய்ப பளிங்கென்னச் சிவனுடனே அன்னான்
சுயசங்கல் பங்கொண்ட தேவிநினை நானும்
மந்திரமாய் மருள்நீங்க அருள்வழங்கும் தாயே
மாசற்ற மனத்தோடு வணங்குகிறேன் போற்றி

38. பாலாரிஷ்டம் போகும்

இராகம் : கர்நாடகதேவகாந்தாரி

ஞானியரின உளத்தடத்தே தாமரையே மலர
நல்லமலர் மகரந்தம் நாடியனு பவித்தே
ஆனந்த யோகியான் மானஸர ஸதிலே
“ஹம்” “ஸ“ என நீந்துமிரு ஹம்ஸங்கள் தம்மின்
மோனமெனும் பேச்சினிலே பூத்தபதி னெட்டு
முயதமறைகள் மீமாம்சம் சிட்சை ஆயுர்வேதம்
மேனியிலே அனாஹதத்தில் காளத்தி மேவும்
வினைபிரிந்து குணமோச்சும் அன்னங்கள் போற்றி

39. தீய கனவுகள் தீரும்

இராகம் : யமுனாகல்யாணி

அக்னியாம் ஸ்வாதிஷ்டானத் தாடுகின்ற ருத்ரன்
அணையாக காலாக்னி அண்ணாமலை யாக
நக்கன்நற் றுணைவிநினை சந்திரகலா “ஸமயா”
நயமறிந்தே இருவரையும போற்றிடுவேன் தாயே !
திக்கெட்டும் அனல்கக்க உலகமெல்லாம் எரிய
சிவபெருமான் நோக்குகையில் கருணைநிறை தாயே
பக்குவமாய் உன்னுடைய பார்வையினால் உலகம்
பாலித்து குளிர்விக்கும பார்வதியே போற்றி !

40. நல்ல கனவுகள் தோன்றும்

இராகம் : யமுனா கல்யாணி

மணிபூர கத்தினிலே உறைவிடமாய்க் கொண்டு
மருள் இருட்டை விரட்டுகின்ற மின்னென்று நின்னை
தணியாத காதலுடன் தழுவிஒளி கதுவும்
தனிரத்தின ஆபரண இந்திரவில்லும் கூடி
அணியாகக் கொண்ட இருள் ஆனைக்கா ருத்ரன்
அனல் கக்கும கதிரவனாய் மூவலகும் எரிக்க
பிணிதீர்க்கும கருணைமழை பெய்துலகைக் காக்கும்
பேரகிலாண்டேஸ்வரியேஸதாசிவனு மானாய்.

41. குன்ம நோய் தீரும்

இராகம் : யமுனாகல்யாணி

மூலமுறும் சக்கரத்தில் திருநடனம் செய்யும்
மூர்த்தியுட னேஸமயா எனப்பெயரும் கொண்டு
காலாரத் திருநடன நவரசங்கள் பொங்கக்
களித்தாடும் சிவசக்தி கலந்தாடும் அந்த
வாலறிவன் தனைப்போற்றி தியானிப்பேன் தாயே
வல்லவளே ஊழியதில் மடிந்தவற்றை மீண்டும்
மூலமெனக் கருணையுடன் இருவீரும் சேர்ந்தே
மூவுலகும் படைத்திடுவீர் அம்மையப்பர் நீரே

42. நீர்ரோகம் தீரும்

இராகம் : காபி

இமயத்தின் தவமகளே ஈராறு கதிர்கள்
எந்நாளும் நின்னருகே இருந்திடவே விழைந்து
சமயமெலாம்தவமிருந்து நவரத்தின மாகித்
தங்கமயத் தலைமுடியில் ஒளிகதுவ நிற்கும்
விமலைநின் திருமுடியில் விளங்குபிறை மதியும்
வியத்தகு பன்னிறங்களிலே இந்திரவில்லோ என்ன
சமரிநினை அருட்கவிஞர் வருவகிக்கும் போதுன்
சந்திரகலை வியக்காமல் இருப்பதெங்கண் அம்மா.

43. கேட்டது கிடைக்கும்

இராகம் : காபி

சிவசக்தி கருநெய்தல் மலர்க்காடு மலர்ந்து
திகழ்வதுபோல் நின் கூந்தல் மென்மையுடன் திகழும்
தவச்செல்வி அகஇருளை அகற்றும் தனிக் காந்தி
தலைமுடியும் ஒளிகதுவி திகழ்ந்திடுமே தாயே
சிவன்மகிழும் ஸ்ரீமட்டுவார்குழலி நின்னை
தியானித்துப் போற்றிடுவேன் சிந்தைநிறை தாயே
சுவர்லோக கற்பகப்பூ நின்குழலின் மணத்தைச்
சுவைத்திடவே கூந்தலிலே வந்தமர்ந்த தென்ன?

44. சகல வியாதிகளும் தீரும்

இராகம் : சங்கராபரணம்

காரிருளில் தோன்றுகின்ற மின்னலென நின்றன்
கனிந்தமுக மண்டலத்தில் அழகுவெள்ளம் பாய
வாரியென விளங்கிடுசீர் வகுட்டினது முகப்பில்
வட்டாடும் இளங்கதிர்போல் குங்குமமே இலகும்
பேரிருள்தான் இளங்கதிரைச் சிறைபிடித்தார்ப் போல
பிராட்டிநின் சிந்தூரத் திலகமுமே தோன்றும்
சீரியநற் றிலகமுறும் வகடமெக்கே என்றும்
திகழ்யோக க்ஷேமத்தை தந்திடுமே தாயே !

45. சொன்னது நடக்கும்

இராகம் : சங்கராபரணம்

புன்னகையே மலர்ச்சியென முகமலரும் தோன்றும்
புவனை ! நின் பற்கள்பூக் கேசரங்க ளாகும்
அன்னை அவ் வனங்கனையே எரித்தசிவன் கண்கள்
ஆங்குலவி தேனீக்கள் எனமயங்கி நிற்கும்
சென்னியிலே சுருண்டுனது நெற்றியிலே தவழும்
திருவளகம் சிறுவண்டின் கூட்டமெனத் தோன்றும்
என்னேநின் திருமுகந்தான் தாமரையை விஞ்சி
இன்மனமும் அருளமுதும் பெற்றொளிரு மம்மா!

46. இலட்சிய சித்தி

இராகம் : கேதாரகௌளம்

மனமடங்க யோகியர்நின் நெற்றியிளம் பிறையை
மனத்தினிலே தியானித்து நித்யசுகம் பெறுவார்
கனிவுடைய தாயேநின் நெற்றியிளம் பிறையைக்
கண்டுவெட்கிக் கிரீடத்தில் பிறைமதியும் அங்கே
இனிக்கீழே நோக்க அஞ்சி ஊர்த்துவமுக மானான்
எழில்வடிவே நின நெற்றி சந்திரகலை என்பேன்
மனத்தினிலே பிறைமதிகள் ஒருமுகமே ஆக்கி
மகிழ்வுடனே முழுமதியைத் தொழுதிடுவேன் தாயே.

47. சகல தேவரும் வசமாவார்

இராகம் : கேதாராகௌளம்

உலகத்தோர் பயம் நீக்கும் உமையவளே நின்றன்
உயர்புருவ முனை இருண்டும் அதோ முகமே நோக்கும்
இலகுதிரு கண்விழியாம் வண்டுகளே சேர்ந்து
இணைத்தவில்லின் நாண்கயிறாய் இலகுகின்ற தம்மா!
துலக்கமுறும் நாசியதும் திலதமிடும் வளையும்
சுடர்நெற்றி நடுவதனில் விரல்களுமே மடங்கிக்
கலக்கமிலா அனங்கனிடக் கரந்தனிலே தோன்றும்
கரும்புவில்லே என மயங்கிக் காண்கின்றேன் தாயே !

48. நவநாயகர் தோஷம் தீரும்

இராகம் : பூர்விகல்யாணி

காலத்தை வென்றவளே! கருணைநிறை தாயே
கண்மூன்று கொண்டவளே! காசினியில் நின்றன்
கோவலக் கண்ணதுதான் ஆதவனின் தோற்றம்
கொண்டதனால் பகலெனவே தோன்றுகின்ற தம்மா!
ஆலவட்டம் போல் சுழலும் இடக்கண்ணே இங்கே
ஆனந்த மதியெனவே இரவதனைத் தோற்றச்
சீலப்பொற்றாமரையாய் திகழநெற்றிக் கண்ணும்
செக்கரந்தி வானமெனத் தோன்றுகிற தம்மா!

49. புதையல் கிட்டும்

இராகம் : பூர்விகல்யாணி

மங்களமாய ஒளிகதுவும் மகேஸ்வரிநின கண்கள்
மலர்க்குவமை கற்பிக்கக் குவளைவலு விழக்கம்
சங்கரிநீ ஆங்காங்கே தான்நிறைந்த கோலத்
தனிப்பார்வை எண் நகரப பெயர்களிலே இலகும்
துங்கமுறும் விசாலநற் கல்யாணி அயோத்யா
சுடர்தாரா சீர்மதுரா போகவதி அவந்தி
சிங்கநிகரும் விஜயா என விளங்கும் நகராய்ச்
சீர்பெற்றுநீண் டகன்று திகழ்வது நின்பார்வை

50. அம்மைநோய் தீரும்

இராகம் : ஸஹானா

கவிஞர்களின் உளமுருக்கும் காவியப்பூங் கொத்தின்
களிதேனை அருந்தும்நின் காதுகளும் அந்தச்
செவிகளையே பிரியாமல் நவரசங்கள கொஞ்சத்
திகழ்செவியின் மதுஅருந்த இச்சைமிகக் கொண்டு
உவப்புடனே வண்டுகள்போல் செவிவரைக்கும் சென்றே
உலாவி வரல் கண்டசுடர் நெற்றிவிழி தானும்
தவிப்புடனே சினமிகவே சீறிக்கனல் பொங்கத்
தகதகெனச் செம்பிழம்பாய்த் திகழ்கிறதே அம்மா !

51. சகலரும் வசமாவர்

இராகம் : ஸஹானா

சிங்கார ரஸம்சிவனை நீநோக்கத் தோன்றும்
சிவசக்தி பாபிகளை அருவருக்கும் நோக்கும்
கங்கையினைக் கடுகடுத்தும காமேசன் நெற்றிக்
கண்ணிளையே ஆச்சர்யம் கொண்டுவக்கும் நோக்கும்
சங்கையுடன் அரவணியை நோக்கும்நின் பார்வைத்
தாமரைபோல் சிவப்பாக வீரரஸம துலங்கும்
மங்கையரைப் பரிகசித்தும் மைந்தன்என்மேல் கருணை
வைத்துவிழி நோக்குகின்றாய் வையகத்தின் தாயே.

52. கண்களது நோய் தீரும்

இராகம் : நாட்டைக்குறிஞ்சி

இமவானின் தவமகளே ! நினதுதிருக் கண்கள்
இனியசெவி வரை நீண்டே இயல்புடனே அமையக்
குமரீநின் புருவமயிர் குலவுகின்ற வில்லின்
கொண்டநாண் கயிறதனில் இறகதனை ஒப்பும்
விமலையே! புரமேரித்த சிவனுடைய மனத்தில்
விளங்குகின்ற சாந்தி ரஸம் நிலைகுலையச் செய்யச்
சமரிநீ கண்வில்லால் காமனது வில்லைச்
சமமாக்க நடிப்பதுபோல் தோன்றுகின்ற தம்மா !

53. தேவியில் கருணையைப்பெற

இராகம் : நாட்டைக்குறிஞ்சி

அழகுக்கே அழகுசெய அன்னை நின் இமையில்
அணிசெய்யும் மூவர்ண இமைமையும் தாயே
சுழலுகின்ற பிரளயத்தே மும்மூர்த்தி களுமே
துஞ்சலும்பின் தோன்றுவதும் படம்பிடித்துக் காட்டும்
விழிக்குளததின் ஓரத்தே முக்குணங்கள தேங்கி
வியனுலகின் முத்தொழிலைப பார்வையினால் காட்டும்
குழகமிகு பார்வையினால் குவலயத்தை நீயே
குணமூன்றும் தரிததருள்கொண் டியக்குகிறாய் தாயே.

54. மர்மஸ்தான நோய் தீரும்

இராகம் : தன்யாசி

பசுபதியை உளக்கோவில் பதியவைத்த உமையே
பரிசுத்த தயையினுக்கே உரியவளும் நீயே
கசிந்துருகும் கருணையது கருப்புடனே சிவப்பு
கனகவெள்ளை நிறங்களிலே கண்மலரில் இருத்து
திசைதிருப்பிச் சோணபத்ரா கங்கையொடு யமுனை
சுரநதிகள் சங்கமமாய் இலங்குகின்ற தம்மா
நசித்திட எம்பாவமெலாம், புனிதமெமை ஆக்க
நதிகளெனப் பிரவகித்தாய் கருணை வெள்ளம் நீயே !

55. அண்டரோகம் தீரும்

இராகம் : தன்யாசி

இமையாத கண்படைத்த என்னம்மை நின்தன்
இமைப்பினிலே அழிவுடனே படைப்புமுன் நிகழ
அமைந்திட்ட காரணத்தை அன்னைநீ யறிந்தே
அகிலத்தைக் காப்பதற்காய் இமைக்காமல் நின்றே
எமைக்காக்க அருட்பார்வை கருணையினால் கொண்டு
எக்காலும் இமைக்காமல் எழில்தபசு செய்யும்
உமயவளே மூவுலகும் விழிகளினால் காக்கும்
ஓம்சக்தி இமைமூடா உண்மையிது வாமோ !

56. தடைகள் தீரும்

இராகம் : சாரங்கா

மெதுவாகச் செவியருகே நின்னிமையா விழிகள்
மேவுவதால் தமைப்பற்றிக் கோளுரைக்க மென்று
மதுரைப்பொற் றாமரைப்பூங் குளத்திலுறு மிமையா
மதர்விழிமீன் கன்னியர்கள் அச்சமுற்று மறைவர்
கதிர்பொங்கும் ஒளித்திருவும் அறிதுயில்நீ புரியின்
கருங்குவளை மலர்தாங்கி காலைவரும்போதில்
புதுமலர்போல் விரிவுறுநின் கண்மலரின் உற்று
புவனத்திற் கொளிசேர்க்கும் புதுமையென்ன தாயே!

57. துன்பம் துயரம் தீரும்

இராகம் : சாரங்கா

நெடிதாகிச சிறிது அலர்ந்த நீலோத்பல மலரே
நினைவுறுத்தும் நின்விழியால் நெடுந்தொலைவில் தனித்து
கொடியதுயர் வறுமையினால் வாடும் எளியேனைக்
குளிர்விக்கக் கருணைமழை பெய்திருடுவாய் தாயே
முடிமதிதான் கானகத்தும் பொற்கோவில் மீதும்
முழுநிறைவாய் ஒருசமமாய் ஒளிவீசல் போல
அடியவர்க்க வற்றாதே அருள்சுரக்கும் தாயே
அருள்விழியில் யான்உவப்ப என்பாலே நோக்காய்

58. உடல் உபாதை நீங்கும்

இராகம் : ஆஹிரி

மலையரசன் மடக்கொடியே வளைந்தநின்றன் பொட்டு
வளைசெவிக்கும் கண்களுக்கு இடைபாளீ யாகும்
சிலைமதனன் தொடுத்தஎழில் சிலையதன் யொப்பத்
திகழ்ந்துநெடுங் கண்களிலே கடைப்பார்வை தானும்
தொலைதூரம் அம்பினைபபோல் செல்கிறது தாயே
தொடுமதனன் சிலைக்கசையாக் காமேசன் தானும்
நிலைகுலைந்து நின்நோக்கால் காமியுமே யானான்
நினையன்டி வந்தஎன்னை நெருங்கிடுமோ காமம்?

59. வீறு பெறலாம்

இராகம் : ஆஹிரி

திரிபிரத்தைச் சட்டெரிக்கப் பரமசிவனார் அன்று
திங்களையும் மதியினையும் தேர்க்கால்கள் ஆக்கி
விரிபுவியை ரதமாக்கி போர்செய்து வென்றார்
விமலனையே தானெதிர்க்கும் சிலைமதனன் தேரோ !
பரிவுடைய நின்முகமாய் திகழ்கின்ற தம்மா !
பாங்குடன்நின் தாடங்கம் கன்னமதில் மின்னத்
தரித்த மதன் தேரினுக்கு நாலுசக்கர மாகித்
தாயேநின் ஸ்ரீசக்கரம் திகழ்கின்ற தம்மா !

60. ஊமையும் பேசும் சொல் பலிதம்

இராகம் : வஸந்தா

அமிர்தரஸம் போல்இனிக்கும் நினது திருவாக்கின்
அற்புதமாம் நாதமதை செவியதனில் மாந்த
விமிதமொடு வாணியவள் வாய்திறவா திருந்து
வீணையினை மீட்டாமல் மெய்மறந்து நின்று
குமுதமொழி கேட்டவளும் தலையசைக்கும் போது
குழைக்காதின் குண்டலங்கள் ஜணஜண வென்றொலித்தே
அமிர்தமொழி தனக்கிசைந்தே எதிரொலிப்ப தொக்கும்
அன்னைநின் வாக்கினிமை யானுரைக்கப் போமோ !

61. மனம் வசப்படும்- திருசேரும்

இராகம் : வசந்தா

இமவானின் குலக்கொடியே ஈஸ்வரியே நின்றன்
எழில்தவழும் நாசிகைதான் மூங்கிலைப்போல் இலகும்
கமகமக்கும் மென்காற்றை உள்வாங்கிக்கும்பிக்
கழற்றிவிடப் பிங்களைதான் முத்தொன்றை அள்ளி
அமைதியொடு வருகையினில் ஆங்கந்த முத்தும்
அன்னை நினைப்பிரியமன மின்றிவெளித் தங்கும்
சமிக்ஞையிது தான் அறிந்துன் மூக்குத்தி தானும்
தனித்திலங்கம் சத்தியத்தைத் தியானித்தேன் தாயே !

62. நல்ல நித்திரை வரும்-ஜெயம் வரும்

இராகம் : அம்ருதவர்ஷிணி

முத்தொத்த பலவரிசை மூடிநிற்கும் அதரம்
மேவிநிற்கும் எழிற்சிவப்பிற் கீடிணையும் ஏது?
கொத்துநற் பவளமெனும் கொடியதற்கோ புவியில்
கொஞ்சுகனி தானிருந்தால் உவமிக்கக்கூடும்
சுத்த வெண்மை யாகிநின்றன் தோட்டினிலேஇலகும்
சூரியனின் சுடர்பட்டே கொவ்வைக்கனி சிவக்கும்
நத்தியதை உவமித்தால் நாணித்தலை கவிழ்ந்து
நழுவாமல் எப்படித்தான் தலைநிமிரும் அம்மா.

63. ஸர்வ ஜனமும் வசியமாவர்

இராகம் : அம்ருதவர்ஷினி

முழுமதியை நிகர்த்தநின் முகமதனில் பொங்கும்
முல்லையொத்த புன்னகையில் பிரவசிக்கும் அமுதம்
தழுதழுக்க மாந்துகின்ற சகோரங்கள் எல்லாம்
தனித்தினிக்கு இன்சுவையால் திகட்டிடவும் அவைகள்
விழுமிநிற்கும் வேட்கையினால் மேலுமதைமாந்த
வேறொன்று மாற்றறிய வேண்டியங்கு வானில்
கழிவுநீர் புளிப்புடனே விண்வெளியில் தூவும்
கலைமதியின் கிரணமதை மாந்துகின்ற தம்மா !

64. வாணியின நல்லருள் வரும்

இராகம் : பரசு

எம்பெருமான் காமேசன் குணநலனை பென்றும்
இடைவிடா துன்நாவும் ஜபிப்பதனால் தாயே
செம்பருத்திப் பூவொத்துச் செபித்ததிரு நாவும்
செக்கரெனத் தான்சிவந்து திகழ்கின்ற தம்மா !
அம்மென்னும் ஒலிஉதவி நாவதனில் வதியும்
அழகுவெள்ளை ஸ்படிகமெனத் திகழுமகலை வாணி
தம்முடைய நாவதனில் வதிவகனால் தாயே
சரஸ்வதியும் செக்கரேனச் சிவந்ததனளோ சொல்வாய்?

65. வெற்றிக்கு மேல் வெற்றி

இராகம் : பரசு

அசுரரைவென் றழித்தஎழிற் குமர வேலன்
அன்னை நின் சன்னதிக்கு விரைந்துவரும் போது
விசும்பொத்த தலைஅணியைத் தன்கையி லேந்தி
மேலிருக்கும் கவசமுடன் விரைந்துவந்து தொழுவார்
பசுபதியை அருகணைக்கும் நின்அருளை வேண்டிப்
பாலன்வர மென்றதாம் பூலமதைத்தந்து
பசிதணித்து ஞானமருள் பார்வதிநின் குமரன்
பகவன்சண்டி கேசன்பால் பரிவுகொண்ட தென்னே?

66. ஸங்கீத ஞானம்

இராகம் : மோகனம்

வீனையினை மீட்டிகலை வாணிசிவன் மீதே
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சால நன்றோ அடியேன் முடைநாய்த் தலையே! 60

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறிவும் அறிவு தந்தாய்: என்ன பேறு பெற்றேன்
தாயே மலைமகளே, செங்கண்மால் திருத் தங்கைச்சியே 61

தங்கச் சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கட கரிஉரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே 62

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்று கொண்டாடிய வீணருக்கே 63

வீணே பலி கவர் தெய்வங்கள்பால் சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்புபூண்டு கொண்டேன். நின் புகழ்ச்சி அன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப்பிரகாசம் அன்றிக்
காணேன் இரு நிலமும் திசை நான்கும் ககனமுமே 64

ககனமும், வானும் புவனமும் காண, விற் காமன் அங்கம்
தகனம் முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இரு மூன்று எனத் தோன்றிய மூதறிவின்
மகனும உண்டாயது அன்றோ? வல்லி! நீ செய்த வல்லபமே 65

வல்லபம் ஒன்று அறியேன்; சிறியேன் நின் மலரடிச் செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்று இலேன் பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே 66

தோத்திரம் செய்து தொழுது, மின் மேலும் நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம், கல்வி, குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பார்எங்குமே 67

பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர் விசும்பும்
ஊரும், முருகு சுவை ஒளி ஊறு ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி, சீரடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம் இல்லையே 68

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவம் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே 69

கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம்பாடவியில்
பண் களிக்கும் குரல் வீணையும், கையும், பயோதரமும்
மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே 70

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்து பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பு இருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே! இரங்கேல் உனக்கு என் குறையே 71

என்குறை தீர நின்று ஏத்துகின்றேன் இனி யான் பிறக்கில்
நின்குறையே அன்றி யார் குறைகாண்? இருநீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேர்இடை மெல்லியலாய்
தன்குறை தீர, எம்கோன் சடைமேல் வைத்த தாமரையே! 72

தாமம் கடம்பு, படை பஞ்ச பாணாம், தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும பொழுது எமக்கு என்று வைத்த
சேமம், திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே 73

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும் நாரணனும்
அயனும், பரவும், அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர், பாவையர்ஆடவும், பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

தங்குவர், கற்பத் தாருவின் நீழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால் வரையும்
பொங்கு உவர் ஆழியும், ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே 75

குறித்தேன மனத்தில், நின்கோலம் எல்லாம் நின் குறிப்பு அறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான் ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகுதும், பஞ்ச பாண பயிரவியே 76

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயா சண்டி, காளி ஒளிரும் கலா
வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி என்றே
செயிர் அவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி, அணி தரளக்
கொப்பும் வயிரக் குழையும விழியின் கொழுங்கடையும்
துப்பும், நிலவும் எழுதிவைத்தேன், என் துணை விழிக்கே 78

விழிக்கே அருள் உண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ் நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே 79

கூட்டியவா, என்னைத் தன் அடியாரில் கொடிய வினை
ஓட்டியவா, என கண் ஓடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா, நடம ஆடகத் தாமரை ஆரணங்கே 80

அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றுஇலேன் என்கண் நீ வைத்தபேர் அளியே
81

அளிஆர் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர் திருமேனியை உள்ளுதொறும்
களி ஆகி அந்தக் கரணங்கள் விம்மிகரைபுரண்டு
வெளியாய் விடின எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே? 82

விரவும் புதுமலர் இட்டு நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே 83

உடையாளை ஒல்கு செம்பட்டுடையாளை ஒளிர்மதி செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை தயங்கு நுண் நூல்
இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னை இனிப்
படையாளை உங்களையும படையா வண்ணம் பார்த்திருமே 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும், என அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும், சிற்றிடையும்
வார்க் குங்கும முலையும், முலைமேல் முத்து மாலையுமே 85

மால் அயன் தேட, மறை தேட வானவர் தேட நின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளி நில்கண்டாய்
பாலையும், தேனையும், பாகையும் போலும் பணி மொழியே 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தம் என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர், அழியா விரதத்தை அண்டம் எல்லாம்
பழிக்கும்படி ஒரு பாகம் கொண்டு ஆளும் பராபரையே 87

பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும என் பத்தருக்குள்
தரம் 'அன்று' இவன் என்று தள்ளத் தகாது தரியலர் தம்
புரம் அன்று எரியப பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப பாகல் சிறந்தவளே 88

சிறக்கும் கமலத் திருவே! நின் சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தர வந்து, உடம்போடு உயிர் உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது என முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே 89

வருந்தாவகை, என மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாய், பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை விண் மேவும் புலவருக்கு
விருத்தாக வேலை மருந்தானதை நல்கும மெல்லியலே 90

மெல்லிய நுண் இடை மின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனையாளை புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்து எழ வெண் பகடு ஊரும் பதம் தருமே 91

பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி, உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய், இனி யான் ஒருவர்
மதத்தே மதி மயங்கேன், அவர் போன வழியும் செல்லேன்
முதல் தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகில் நகையே! 92

நகையே இஃது இந்த ஞாலம் எல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகில் முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதும் நாம்
மிகையே இவள் தன் தகைமையை நாடி விரும்புவதே 93

விரும்பித் தொழும் அடியார் விழி நீர் மல்கி, மெய் புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தம் ஆகி அறிவு இழந்து
கரும்பிற் களித்து மொழி தடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும் பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே 94

நன்றே வருகினும், தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கே உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்திட்டேன்; அழியாத குணக்
குன்றே! அருட்கடலே! இமவான் பெற்ற கோமளமே! 95

கோமளவல்லியை அல்லியத் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னை தம்மால்
ஆமளவும் தொழுவார் எழு பாருக்கும் ஆதிபரே 96

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன் அமரர்தம் கோன்
போதிற் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றும் தையலையே 97

தை வந்து நின அடித்தாமரை சூடிய சங்கரற்குக்
கை வந்த தீயும் தலை வந்த ஆறும், கரந்தது, எங்கே?
மெய் வந்த நெஞ்சின் அல்லால், ஒரு காலும் விரகர்தங்கள்
பொய் வந்த நெஞ்சில் புகல அறியா மடப்பூங் குயிலே 98

குயிலாய் இருக்கும் கடம்பா வியிடை: கோல இயல்
மயிலாய் இருக்கும இமயாசலத்திடை: வந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்: கமலத்தின் மீது அன்னம் ஆம்
கயிலாயருக்கு அன்று இமயவான அளித்த கனங்குழையே 99

குழையத் தழுவிய கொனறையந் தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப பொருத திருநெடுந்தோளும் கரும்பு வில்லும்
விழையப பொரு திறல் வேரியம பாணமும், வெள் நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே

ஸ்ரீ அபிராமிபட்டர் அருளிச் செய்த

அபிராமியம்மை பதிகம் - 1

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணிஇ லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்!

அலையாழி அறிதுயில் கொள் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமியே 1

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ண குண்டலமுமதி முகமண்ட லம்நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழி யுஞ்சிறிய
கொவ்வையின கனிய தரமும்
குமிழனைய நாசியும் குந்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகாச முமாக
வல்வினையை மாற்றுவாயே:
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத் சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 2

மகரவார் குழல்மேல் அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல் விழியருள்
வரம்பெற்ற பேர்களன்றோ?
ஜெகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்துமோர்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்றமிகு
திகிரியுல காண்டு பின்பு
புகர்முகத்(து) ஐராவ தப்பாக ராகிநிறை
புத்தேளிர் வந்து போற்றிப்
போகதே வெந்திரன் எனப்புகழ விண்ணிற்
புலோமசை யொடுஞ்சு கிப்பர்

அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 3

மறிகடல்கள ஏழையுந் திகிரிஇரு நான்கையும்
மாதிரக் கரிஎட்டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையு மோர்
பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புந்தேளிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையிற்
புலியாடை உடையா னையும்
முறைமுறை ளாயீன்ற முதியவர்க ளாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்
அறிவுநறை விழுமியர்தம ஆனந்த வாரியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 4

வாடாமல் உயிரெனும பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதிலே நின்ன தன்பெறுஞ் சிறகால்
வருத்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்ச்சிசிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான ஜீவ
கோடிகள் தமக்குப் புசிக்கம் புசிப்பினைக்
குறையாம லேகொடு த்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங்களுக்(கு) அன்னை என்றோதும்
நீலியென்(று) ஓதுவாரே?

ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 5

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும்அன றுற்பவித் திடுகருப்
பையுறும் ஜீவனுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கும யாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லாமலே
நல்குந் தொழிற்பெருமை உண்டயிருந்துமிகு
நவநிதி உனக்கிருந்தும்
நானொருவன வறுமையிற சிறியனானால் அந்
நகைப்புனக் கேஅல்லவோ?
அல்கலந் தும்பர்நா டளவொடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 6

நீடுலோ கங்களுக்கு ஆதாரமாய் நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத்திரண்டறம் வளர்க்கின்ற
நீமனைவியாய் இருந்தும்
வீடுவீ டுகள்தோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலச்சையும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்து நின்(று)
உன்மத்தனாகி அம்மா!
உன் கணவன் எங்கெங்கும் ஐயம புகுந்தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்

ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 7

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினிற் போய்
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு
ஈனந் தனைத்தள்ளி எனது நா னெனுமானம்
இல்லா மலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்து நெஞ்(சு)
இருளற விளக்கேற்றியே
வானந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
மனத்தாமரைப் போதிலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாததோர்
ஆனந்த (வாரிதியில்) ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 8

ஜலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினாளெ னக்குத்
தாயல்லவோ? யான் உன்மைந் தனன்றோ? எனது
ஸஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன முகத்தைஉன்
முன்தானை யால்துடைத்து
மொழிகின்ற மழலைக் குகந்து கொணடிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான்
குலவிவிளை யாடல்கொண்டருண்மழை பொழிந்(து) அங்கை
கொட்டிவா வென்(று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந் தனுக்(கு) இளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலிலே தோன்றும் ஆராத அமுதமே!
ஆதிகட வூரின் வாழ்வே!

அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 9

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக்கிலேன்
கண்போதி னாலுன் முகப்போது தன்னையான்
கண்டுதரி சனைபுரி கிலேன்
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆலயத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்
மோசமே போய் உழன்றேன்

மைப் போதகத்திற்கு நிகரெனப் போதும் எரு
மைக்கடா மீதேறி யே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங்கித் தியங்கும்
அப்போது வந்துன் அருட்தே தந்தருள்
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத ககபாணி
அருள்வாமி அபிராமியே ! 10

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியிந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந்து ரத்தப்
பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்தப்
பாசியென் பதுந்து ரத்தப்
பாவந் துரத்த பதி மோகந் துரத்த
பலகரர்யமுந் துரத்த
நகையுந் துரத்தஊழ்வினையுந் துரத்தஎன்
நாளந் துரத்த வெகுவாய்
நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னைஅந்
நமனுந் துரத்து வானோ?
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 11

ஸ்ரீ அபிராமிபட்டர் அருளிச் செய்த

அபிராமியம்மை பதிகம் - 2

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் வியக்குங்
  கலாமதியை நிகர்வத னமுங்
கருணைபொழி விழிகளும் விண் முகில்கள் வெளிறெனக்
  காட்டிய கருங்கூந் தலுஞ்
சங்கையில் லாது ஒளிரு மாங்கல்ய தாரணந்
  தங்குமணி மிடறு மிக்க
சதுர்பெருகு துங்க பாசாங்குசம் இலங்குகர
  தலமும் விரலணியும் அரவும்
புங்கவர்க்கு அமுதருளு மந்தரகுசங்களும்
  பொலியுநவ மணி நூபுரம்
பூண்டசெஞ்சேவடியை நாளும்பு கழ்ந்துமே
  போற்றியென வாழ்த்த விடைமேல்
மங்கள மிகுந்தநின் பதியுடன் வந்தருள்செய்
  வளர்த்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
  வாமி!அபி ராமி! உமையே

சந்திர ஜடாதரி! முகுந்த ஸோ தரி!துங்க
  ஜலசுலோ சனமா தவி!
ஸம்ப்ரம பயோதரி! ஸுமங்கலி! ஸுலட்சணி!
  சாற்றருங் கருணா கரி!
அந்தரி! வராகி! சாம் பவி! அமர தோத்திரி!
  அமலை ஜெக ஜால ஸூத்ரி
அகிலாத்ம காரணி! வினோதஜய நாரணி!
  அகண்ட சின்மய பூரணி!
ஸுந்தரி! நிரந்தரி! துரந்தரி! வரைராஜ
  ஸுகுமாரி! கௌமாரி! உத்
துங்ககல் யாணி! புஷ் பாஸ்திரம் புயபாணி!
  தொண்டர்கட்கு அருள்சர் வாணி
மந்தரி! மலர்ப்பிரம ராதிதுதி வேதவொலி
  வளர்த்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
  வாமி! அபிராமி! உமையே 2

வாசமலர் மருவளக பாரமும் தண்கிரண
மதிமுகமும் அயில்விழி களும்
வள்ளநிகர் முலையுமான் நடையு நகை மொழிகளும்
வளமுடன் கண்டு மின்னார்
பாசபந் தத்திடை மனங்கலங் கித்தினம்
பலவழியும் எண்ணி யெண்ணிப்
பழிபாவம் இன்னதென்று அறியாமல் மாயப்ர
பஞ்சவாழ் வுஉண்மை என்றே
ஆசைமேலிட்டு வீணாக நாய் போல்திரிந்(து)
அலைவதல் லாமல் உன்றன்
அம்புயப் போதெனுஞ் செம்பதந் துதியாத
அசடன்மேற் கருணை வருமோ?
மாசிலா தோங்கிய குணாகரி! பவானி!சீர்
வளர்த்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 3

நன்றென்று தீதென்று நவிலுமிவ் விரண்டினுள்
நவின்றதே உலகி லுள்ளோர்
நாடுவார் ஆதலின் நானுமே அவ்விதம்
நாடினேன் நாடி னாலும்
இன்றென்று சொல்லாமல் நினதுதிரு வுள்ளம(து)
இரங்கி யருள் செய்கு வாயேல்
ஏழையேன் உய்குவேன் மெய்யான மொழியிஃதுன்
இதயம் அறியாதது உண்டோ?
குன்றமெல் லாம்உறைந்(து) என்றும்அன் பர்க்கருள்
குமார தேவனை அளித்த
குமரி!மர கதவருணி! விமலி!பயி ரவி!கருணை
குலவுகிரி ராஜ புத்ரி!
மன்றல்மிகு நந்தன வனங்கள்சிறை அளிமுரல
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 4

ஒருநாள் இரண்டுநாள் அல்லநான் உலகத்து
உதித்தஇந் நாள்வ ரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல்கொண்(டு)
உள்ளந் தளர்ந்து மிகவும்
அருநாணி அற்றிட்ட விற்போல் இருக்குமிவ்
வடிமைபாற் கருணை கூர்ந்திங்(கு)
அஞ்சே லெனச சொல்லி ஆதரிப் பவர்கள் உனை
அன்றியிலை உண்மை யாக
இருநாழி கைப்போதும் வேண்டாது நிமிடத்தில்
இவ்வகில புவனத் தையும்
இயற்றியரு ளுந்திறங் கொண்டநீ ஏழையேன்
இன்னல்தீர்த் தருளல் அரிதோ?
வருநாவ லூரர்முத லோர் பரவும் இனியபுகழ்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி!கப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 5

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேலும்
ஏறிப் டொறுக்க அந்தோ
எவ்விதம் உளஞ்சகித்துய்குவேன் இப்பொழுது
எடுத்திட்ட ஜன்மம் இதனில்
நண்ணிஎள் ளளவுசுக மானதொரு நாளிலும்
நான்அனு பவித்த தில்லை
நாடெலாம் அறியுமிது கேட்பதேன்? நின்னுளமும்
நன்றாய்அறிந் திருக்கும்
புண்ணியம் பூர்வஜன னத்தினிற் செய்யாத
புலையனா னாலும் நினது
பூரண கடாட்சவீக் சண்ணியஞ் செய்தெனது
புன்மையை அகற்றி யருள்வாய்
மண்ணவர்கள் விண்ணவர்கள் நித்தமும் பரவுமிசை
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 6

தெரிந்தோ அலதுதெரி யாமலோ இவ்வடிமை
செய்திட்ட பிழையிருந்தால்
சினங்கொண்ட தோர்கணக் காகவை யாதுநின்
திருவுளம் இரங்கி மிகவும்
பரிந்துவந் தினியேனும் பாழ்வினையில் ஆழ்ந்(து) இன்னற்
படாதுநல் வரம் அளித்துப்
பாதுகாத் தருள்செய்ய வேண்டும்அண் டாண்டவுயிர்
பரிவுடன் அளித்த முதல்வி!
புரந்தரன் போதன்மா தவனாதி யோர்கள் துதி
புரியும் பாதாம்பிய மலர்ப்
புங்கவி!புராந்தகி! புரந்தரி! புராதனி!
புராணி! திரி புவனேச்வரி!
மருந்தினும் நயந்தசொற் பைங்கிளி வராகி! எழில்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 7

வஞ்சகக் கொடியோர்கள் நட்புவேண் டாமலும்
மருந்தினுக் காவேண்டினும்
மறந்துமோர் பொய்ம்மொழி சொலாமலுந் தீமையாம்
வழியினிற் செல்லா மலும்
விஞ்சுநெஞ் சதனிற் பொறாமைதரி யாமலும்
வீண்வம்பு புரியா மலும்
மிக்கபெரி யோர்கள்சொலும் வார்த்தை தள்ளாமலும்
வெகுளியவை கொள்ளா மலும்
தஞ்சமென நின(து) உபய கஞ்சந் துதித்திடத்
தமியனுக் கருள்பு ரிந்து
ஸர்வகா லமுமெனைக் காத்தருள வேண்டினேன்
ஜலக்கயல்கள் விழியை அனைய
வஞ்சியர்செ(வ்) வாய் நிகரும் வாவியாம் பன்மலரும்
வளர்த்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 8

எனதின்னல் இன்னபடி யென்றுவே றொருவர்க்(கு)
இசைத்திடவும் அவர்கள் கேட்(டு)இவ்
வின்னல்தீர்த்துள்ளத்(து) இரங்கிநன் மைகள் செயவும்
எள்ளளவு முடியாது நின்
உனதமரு வங்கடைக் கண்ணருள் சிறிதுசெயின்
உதவாத நுண் மணல் களும்
ஓங்குமாற் றுயர்சொர்ண மலையாகும் அதுவன்றி
உயரகில புவனங் களைக்
கனமுடன் அளித்துமுப் பத்திரண்டு அறங்களுங்
கவின்பெறச் செயயு நின்னைக்
கருதுநல் லடியவர்க்கு எளிதிற்வந்து சடுதியிற்
காத்துரட் சித்த தோர்ந் து
வனஜம்நிகர் பாதம் நம்பினேன் வந்தருள்செய்
வளர்த்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 9

கருநீல வடிவமார் மாடேறி உத்தண்ட
கனதண்ட வெம்பா சமுங்
கைக்கொண்டு சண்டமா காலன்முன் எதிர்க்கமார்க்
கண்டனும வெருண்டு நோக்க
இருநீல கண்டனெனும் நின்பதியை உள்ளத்தில்
அன்புகொண் டர்ச்சனை செய
ஈசன்(அவ்) விலங்கம் பிளப்பநின் னொடுதோன்றி
யமனைச் சூலத்தி லூன்றிப்
பெருநீல மலையென நிலத்தில்அன் னவன்விழப்
பிறங்கு தாளால் உதைத்துப்
பேசுமுனி மைந்தனுக் கருள்செய்த(து) உனதரிய
பேரருளின் வண்ண மலவோ?
வரு நீல மடமாதர் விழியென்ன மலர்வாவி
வளர்த்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 10

ஸகலசெல் வங்களுந் தருமிமய கிரிராஜ
தனயைமாதேவி! நின்னை
ஸத்யமாய் நித்யமுள் ளத்தில் துதிக்கும் உத்
தமருக்(கு) இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி
ஆகுநல் லூழ்நு கர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும தந்தருளிநீ
சுகானந்த வாழ்வளிப்பாய்
சுகிர்தகுண சாலி! பரி பாலி! அநு கூலி!திரி
சூலி!மங் களவி சாலி!
மகவுநான் நீதாய் அளிக்கொணா தோ? மகிமை
வளர்த்திருக் கடவூரில் வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே 11

ஸ்ரீவாராஹி மாலை

இருகுழை கோமளம் தாள்புஷ்ப ராகம் இரண்டுகண்ணும்
குருமணி நீலம்கை கோமேதகம் நகம் கூர்வயிரம்
திருநகை முத்துக் கனிவாய் பவளம் சிறந்தவல்லி
மரகதநாமம் திருமேனி யும்பச்சை மாணிக்கமே
தோராத வட்டமுக் கோணம் ஷட்கோணம் துலங்கு வட்டத்து
ஈராறிதழ்இட்டு ரீங்காரம் உள்ளிட்டதுநடுவே
ஆராதனைசெய்து அருச்சித்துப் பூஜித்தடி பணிந்தால்
வாரா திராள்அல்ல வோலை ஞான வாராஹியுமே 2

மெய்ச்சிறத் தாற்பணி யார்மனம் காயம் மிகுவெகுண்டு
கைச்சிரத் தேந்திப் புலால் நிணம் நாறக் கடித்துதறி
வச்சிரத் தந்த முகப்பணி யாற்குத்தி வாய்கடித்துப்
பச்சிரத் தம்குடிப் பாளே வாராஹி பகைஞரையே 3

படிக்கும் பெரும்புகழ்ப் பஞ்சமி அன்பர் பகைஞர்தமை
அடிக்கும் இரும்பு தடிகொண்டு பேய்கள் அவர்கருதி
குடிக்கும் குடர்கொண்டு தோள்மாலை இட்டுக் குலாவி மன்றில்
நடிக்கும் வாராஹி பதினா லுலகம் நடுங்கிடவே 4

நடுங்கா வகைஅன்பர் நெஞ்சினிற் புக்கவர் நண்ணலரைக்
கொடும்காளி உண்ணக் கொடுக்கும் குருதிகள் கொப்பளித்திட்டு
இடும்பாரக் கொங்கையின் மீதே இரத்தத் திலகம்இடும்
தொடும்கார் மனோன்மணி வாராஹிநீலி தொழில் இதுவே. 5

வேய்க்குலம் அன்னதிண் தோளான் வாராஹிதன் மெய்யன்பரை
நோய்க்குலம் என்னஇடும்பு செய்வார்தலை நொய்தழித்துப்
பேய்க்குலம் உண்ணப் பலிகொண்டு போட்டுப் பிணக்குடரை
நாய்க்குலம் கௌவக் கொடுப்பாள் வாராஹீஎன் நாராணியே 6

நாசப் படுவர் நடுங்கப்படுவர் நமன்கயிற்றால்
வீசப்படுவர் வினையும் படுவர்இம் மேதினியோர்
ஏசப் படுவர் இழுக்கும் படுவர்என் ஏழைநெஞ்சே
வாசப்புதுமலர்த் தேனாள் வாராஹியை வாழ்த்திலரே 7

வாலை புவனை திரிபுரை மூன்றும் இவ வையகத்திற்
காலையும் மாலையும் உச்சியும்ஆகஎக் காலத்துமே
ஆலயம் எய்தி வாராஹிதன் பாதத்தை அன்பின் உன்னி
மாலயன் தேவர் முதலான பேர்களும் வாழ்த்துவரே 8

வருத்திப் பகைத்தீர்என் னோடறி யாமல்முன் வானவர்க்காகச்
சிரித்துப் புரம்எரித்தோன் வாமபாகத்துத் தேவிஎங்கள்
கருத்திற் பயிலும் வாராஹிஎன் பஞ்சமி கண் சிவந்தாற்
பருத்திப் பொதிக்கிட்ட தீப்பொறி காணும் பகைத்தவர்க்கே 9

பாப்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் நின்மலர்ப்பாதம் தன்னிற்
பூப்பட்டதுவும் பொறிபட்டதோ? நின்னை யேபுகழ்ந்து
கூப்பட்ட துன் செவி கேட்கிலையோ? அண்ட கோளமட்டும்
தீப்பட்ட தோ? பட்டதோநிந்தை யாளர்தெரு எங்குமே 10

எங்கும் எரியக் கிரிகள் பொடிபட எம்பகைஞர்
அங்கம் பிளந்திட விண்மண் கிழிந்திட ஆர்த்தெழுந்து
பொங்கும் கடல்கள் சுவறிடச் சூலத்தைப் போகவிட்டுச்
சிங்கத்தின் மீது வருவாள் வாராஹி சிவசக்தியே 11

சக்தி கவுரிமஹாமாயி ஆயிஎன் சத்துருவைக்
குத்தி இரணக் குடரைப் பிடுங்கிக் குலாவிநின்றே
இத்திசை எங்கும் நடுங்கக் கிரிகள் இடிபடவே
நித்தம் நடித்து வருவாள் வாராஹி என் நெஞ்சகத்தே 12

நெஞ்சகம் தன்னில் நிறைந்திருக்கின்றவன் நிர்க்குணத்தி
நஞ்சனி கண்டத்தி நாரா யணிதனை நம்புதற்கு
வஞ்சனை பண்ணி மதியாத பேரைவாழ் நாளை உண்ணக்
கொஞ்சி நடந்து வருவாள் வாராஹி குலதெய்வமே 13

மதுமா மிஸம்தனைத் தின்பாள் இவள் என்று மாமறையோர்
அதுவே உதாஸினம் செய்திடுவார் அந்த அற்பர்கள் தம்
கதிர்வாய் அடைத்திட உள்ளம் கலங்கக் கடித்தடித்து
விதிர்வாளில் வெட்டி எறிவாள் வாராஹிஎன் மெய்த் தெய்வமே 14

ஐயும் கிலியும் எனத்தொண்டர் போற்ற அரியபச்சை
மெய்யும் கருணை வழிந்தோடுகின்ற விழியு(ம்) மலர்க்
கையும் பிரம்பும் கபாலமும் சூலமும் கண்எதிரே
வையம் துதிக்க வருவாள் வாராஹி மலர்க்கொடியே 15

தாளும் மனமும் தலையும் குலைவத் தரியலர்கள்
மாளும் படிக்கு வரம்தருவாய் உன்னை வாழ்த்தும் என்பர்
கோளும் பகையும் குறியார்கள் வெற்றி குறித்த சங்கும்
வாளும் கடகமும் சூலமும் ஏந்தி வரும் துணையே 16

வருந்துணை என்று வாராஹிஎன் றன்னையை வாழ்த்தி நிதம்
பொருந்தும் தகைமையைப் பூணா தவர் தம் புலால் உடலைப்
பருந்தும் கழுகும் வெம் பூதமும் வெய்ய பசாசுகளும்
விருந்துண்ணப் பட்டுக் கிடப்பர்கண் டீர்: உடல் வேறுபட்டே 17

வேறாக்கும் நெஞ்சும வினையும்வெவ் வேறு வெகுண்டுடலம்
கூறாக்கும் நெஞ்சத்திற் செந்நிறம் ஆன குருதிபொங்கச்
சேறாக்கும் குங்குமக் கொங்கையிற் பூசும் திலகம் இடும்
மாறாக்கும நேமிப் படையாள் தலைவணங்காதவர்க்கே 18

பாடகச் சீதறடிப் பஞ்சம் அன்பர் பவகளுர் தமை
ஓடவிட் டேகை உலக்கைகொண் டெற்றி உதிரம் எல்லாம்
கோடாகத் திட்டு வடித்தெடுத் தூற்றிக் குடிக்கும் எங்கள்
ஆடகக் கும்ப இணைக் கொங்கை யாள் எங்கள்
அம்பிகையே 19

தாமக் குழலும் குழையும் பொன் ஓலையும் தாமரைப்பூஞ்
சேமக் குழலும் துதிக்கவந் தோர்க்கு ஜெகம் அதனில்
வாமக் கரள களத்தம்மை ஆதி வாராஹிவந்து
தீமைப் பவத்தைக் கொடுத்தாண்டு மொள்வாள் சிவசக்தியே20

ஆரா கிலும்நமக்கேவினை பெய்யின அவர் உடலும்
கூராகும் வாளுக்கிரை இடு வால்கொன்றை வேணிஅரன்
சீரார் மகுடத் தடிஇணை சேர்க்கும் திரிபுரையாள்
வாராஹீ வந்து குடிஇருந் தாள் என்னை வாழ்விக்கவே 21

தரிப்பாள் கலப்பை என் அம்மை வாராஹியின் சத்துருவைப்
பொரிப்பாள் பொறிஎழச் செந்தீயில் இட்டு பொரிந் ததலை
நெரிப்பாள் தலைமண்டை மூளையைத் தின்றுபின் நெட்டுடலை
உரிப்பாள் படுக்க விரிப்பாள் கக்காக உலர்த்துவளே 22

ஊராகிலும் உடன நாடா கிலும் அவர்க் குற்றவரோடு
யாராகிலும் நமக் காற்றுவரோ? அடல் ஆழி உண்டு
காரார் கருத்த உலக்கையும் உண்டு கலப்பை உண்டு
வாராஹி என்னும்மெய்ச் சண்டப் ப்ரசண்ட வடிவிஉண்டே 23

உலக்கை கலப்பை ஒளிவிடு வாள்கட காழிசங்கம்
வலக்கை இடக்கையில் வைத்த வாராஹி என் மாற்றவர்கள்
இலக்கம் இல்லாத எழிற்பெரும் சேனை எதிர்வரினும்
விலக்கவல்லாள் ஒரு மெல்லிதன் பாதம் விரும்புகவே 24

தஞ்சன் பாதம் சரணாகதி என்று சார்ந்தவர் மேல்
வஞ்சனை பில்லிகொடி தேவல் சூனியம் வைத்தவரை
நெஞ்சம் பிளந்து நினக்குடல் வாங்கி நெருப்பினிலிட்டு
அஞ்சச் சுரங்கொண்ட றுப்பாள் திரிபிரை ஆனந்தியே 25

அலைபட்டு நெஞ்சம் அலைந்துயிர் சோர அலைக் கையால்
கொலைபட் டுடலம் கழுகுகள் சூழக் குருதி பொங்கத்
தலைகெட் டவயவம் வேறாய்ப் பதைப்புற்றுச் சாவர்கண்டீர்
நிலைபெற்ற நேமிப் படையாள் தனைநினை யாதவரே 26

சிந்தை தெளிந்துனை வாழ்த்திப் பணிந்து தினம்துதித்தே
அந்திபகல் உன்னை அர்ச்சித்தபேரை அசிங்கமாய் நிந்தனை
பண்ணிமதியாத உலுத்தர் நிணம் அருந்திப்
புந்தி மகிழ்ந்து வருவாய் வராஹிநற் பொற்கொடியே 27

பொறுப்புக்கு மாறுசெய் ஆழியும் தோடும் பொருப்பைவென்ற
மருப்புக்கு நேர்சொலும் கொங்கையும் மேனியும் வாழ்த்தும் எனது
இருப்புக் கூடிய மனதிற் குடிகொண்டு எதிர்த்தவரை
நேருப்பு குவால்எனக் கொல்வாள் வாராஹி என் நிர்க்குணியே 28

தேறிட்ட நின்மலர்ப் பாதார விந்ததைச் சிந்தைசெய்து
நீறிட்டவர்க்கு வினைவருமோ? நின் அடியவர்பால்
மாறிட்டவர் தமைவாள் ஆயுதம் கொண்டு வாட்டிஇரு
கூறிட்டெறிய வருவாய் வாராஹி குலதெய்வமே 29

நரிபரி ஆக்கிய சம்புவின் பாகத்தை நண்ணியமான்
அரிஅயன் போற்றும் அபிராமி தன்அடி யார்க்கு முன்னே
ஸரியாக நின்ற தருக்கம் செய் மூடர் தலையை வெட்டி
எரியாய் எரித்து விடுவாள் வாராஹி எனும் தெய்வமே 30

வீற்றிருப்பாள் நவ கோணத்திலே நம்மை வேண்டும் என்று
காத்திருப்பாள்கலி வந்தணு காமல் என் கண் கலக்கம்
பார்த்திருப்பாள் அல்லள் எங்கேஎன் றங்குச பாசம் கையில்
கோத்திருப்பாள் இவளே என்னை ஆளும் குலதெய்வமே 31

சிவஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரிதல்
தவம்ஆளும் கெய்யன்பாக் கேஇடர் சூழும் தரியலரை
அவமானம் செய்யக் கணங்களை ஏவும அகோரி இங்கு
நவமாக வந்தெனைக் காக்கும் திரிபுர நாயகியே 32

துதித்துளிகள்

கண்ணே! அக்கண்ணின் மணியே! மணியிற் கலந்ததொளி செய்
விண்ணே! வியனொற்றியூர் அண்ணல் வாமத்தில் வீற்றிருக்கும்
பெண்ணே! மலைபெறும் பொன்மணியே! தெய்வப் பெண்ணமுதே!
மண்நேயம நீத்தவர் வாழ்வே! வடிவுடை மாணிக்கமே!

திருஅருட்பா

சீதங்கமமும் பிறையணி செஞ்சடைச் செல்வரோடும்
ஏதங்கமமும் இருளாரென் உள்ளத் தெழுந்தருள்வாய்
வேதங் கமமும் செவ்வாயர்க்குப் பாலருள் வித்தகியே
காதங் கமமும் பொழில்சூல் தென் கூடற் கயற்கண்ணியே

உ. வே. சா

கல்லாத நெஞ்சம் கரைந்துருக எத்தொழிற்கும்
வல்லாய் நின் இன்பம் வழங்கினால் ஆகாதோ?
என்னை அறிய எனக்கு அறிவாய் நின்றருள்
தன்னையறிந்து இன்பநலஞ் சாரவைத்தால் ஆகாதோ? தாயுமானவர்

துன்பமிலாத நிலையே சக்தி தூக்கமிலாக் கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்பம் முதிர்ந்த முதிர்வே சக்தி எண்ணத் திருக்கும் எரியே சக்தி
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி முக்தி நிலையின் முடிவே சக்தி

மகாகவி பாரதியார்

மண்டலந் தன்னிலே கண்கண்ட தெய்வம்நீ மளூமொரு தெய்வமுண்டோ?
மந்திரப் பேய்களும் தந்திரச் சூனியமும் மற்றுஞ் சத்ராதி பகையும்
கண்டு உனது பாதமலர் நின்றுதுதி செய்திட கலங்கிடப் பறந்தோடுமே
கன்மமும் பிணிகளும் வன்மமில்லாமலே கண்டவுடன் தெண்டனிடுமே

இன்று முதலாய் வந்த பண்டுபழி பாவமும் இனிமேல் வரும் வினைகளும்
எந்தன் மேல் கணக்காகச் சிந்தையில் நினைக்காம லியமணுகாம லருள்வாய்
தண்துளப மாலையணி மார்பனிட தங்கையே தரணிபுக் ழொற்றியூர் வாழ்
தங்கமலர் நாதர்சடை கங்கையுருவான கொடி திங்கள் ஒளிவானவடிவே

மங்களப் பாடல்கள்

வண்டுவார் குழலி மாதா போற்றி
செண்டாடும் விடைச் சிவையை போற்றி
உண்ணாமுலை யெம் உயர்ந்தாய் போற்றி
இமவான் பெற்ற இளையாய் போற்றி
மலையத் துவசன் மகளே போற்றி
கலையாய் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய் தனித்தாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி - உமையம்மை வழிபாடு

அஷ்ட மங்கள ஜோதி நமோ நம
இஷ்ட வரம் தர சக்தி நமோ நம
அஷ்ட ஐஸ்வர்ய லக்ஷ்மி நமோ நம - (பலகோடி)

பாவம் தீர்க்கும் பவானி நமோ நம
பாட்டில் மகிழும் கல்யாணி நமோ நம
பாசம் விலகும் பத்மாக்ஷி நமோ நம - (எழில் மேவும்)

காஞ்நி நகர நிவாஸி நமோ நம
காமகோடி ஸ்வரூபி நமோ நம
கால பைரவி காளி நமோ நம - (புண்ணிய புரியாகும்)

வாரணாசி உறைவாசி நமோ நம
நாரணி சிவகாமி நமோ நம
ஆறுமுகன் அன்பு தாயே நமோ நம - (நான்மாட கூடல்)

மதுரை ஆள் மகாராணி நமோ நம
மலயத்வஜன் சுகுமாரி நமோ நம
வைகை அமைந்தவள் தேவி நமோ நம (மனம் பொங்கும்)

கவலை தீர்க்கம காமாக்ஷி நமோ நம
கருணை பொழி விசாலாக்ஷி நமோ நம
கை கொடுக்கும் மீனாக்ஷி நமோ நம (அருள் தாராய்)

ஜகன்மாதா ப்ரார்த்தனை

ஷரணு ஷரணு ஜெய துர்க்கே சர்வ சக்தி ஜகன்மாதே
ஷரணு ஷரணு சிவகௌரி ரக்ஷிஸம்ம சுகதாதே (ஷரணு)

மங்களவார சுமங்கலியரு நின்னெய நாமவெ பஜிஸிரலு
ஒம்பத்துவார வ்ரதவிரலு தொரகவுடு இஷ்ட்டார்த்தகளு (ஷரணு)

ரக்ஷிஸவுளு நீனே சிக்ஷிஸவுளுநீனே
அணு அணுவெல்லாம் தும்பஹிநீனு கோரிகே கருணிஸகாமதேணு

ஜெயஷிவ ஷங்கரிஜெய அபயங்கரி
ஜெய ஜெய சக்தி ஜெய ப்ரளயங்கரி
ஜெயசிவே சாம்பவி ஜெய நடபைரவி
ஜெய காதம்பரி ஜெய ஸ்வேதாம்பரி (ஷரணு)

ஜெய மாதங்கினி ஆனந்ததாயினி
ஜெய ஜெயகதம்பே புண்ய ஸ்வரூபிணி
ஓம் ஜகஜ்ஜனனீ மாதா பவானி
ஓங்காரேஷ்வரி சித்த நிவாஸினி (ஷரணு)

ஷரணு ஷரணு துர்க்கே ஷரணு ஷரணு துர்க்கே
ஷரணு ஷரணு துர்க்கே ஷரணு ஷரணு துர்க்கே

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஸ்தோத்ரம்

ஸ்ரீசக்ர வாசிநி ஸ்ரீதேவி நமஸ்தே
சிவகாம சுந்தரி ஸ்ரீதேவி நமஸ்தே
ஸ்ரீகிருஷ்ணா ஸோதரி ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 1

பத்மதளலோசனி ஸ்ரீதேவி நமஸ்தே
பக்தபரிபாலினி ஸ்ரீதேவி நமஸ்தே
பர்வத வர்த்தினி ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 2

கருணாவிலாஸினி ஸ்ரீதேவி நமஸ்தே
காத்யாயனி ஸ்ரீதேவி நமஸ்தே
கதம்பவன வாஸினி ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 3

சக்தி பரமேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே
சம்புமன மோஹினி ஸ்ரீதேவி நமஸ்தே
சங்கரி மஹேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 4

அன்னபூர்ணேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே
அகிலாண்ட நாயகி ஸ்ரீதேவி நமஸ்தே
அபயப்ரதாயினி ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 5

ஸத்யஸ்வரூபிணி ஸ்ரீதேவி நமஸ்தே
ஸத்குருரூபிணி ஸ்ரீதேவி நமஸ்தே
தர்மஸ்வரூபிணி ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 6

அகண்ட பரிபூரண ஸ்ரீதேவி நமஸ்தே
ஆதி பராசக்தி ஸ்ரீதேவி நமஸ்தே
அகில பரிபாலினி ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 7

அனாதரக்ஷகி ஸ்ரீதேவி நமஸ்தே
சௌபாக்யதாயினி ஸ்ரீதேவி நமஸ்தே
ஸந்தானபலப்ரதே ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 8

பாஹி புவனேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே
ஸ்ரீவித்யா ரூபிணி ஸ்ரீதேவி நமஸ்தே
சக்தி ஸ்ரீசாரதே ஸ்ரீதேவி நமஸ்தே
ராஜராஜேஸ்வரி ஸ்ரீதேவி நமஸ்தே 9

*****

கற்பூர நாயகியே

கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளி மகமாயி! கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி! விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே!
சுடராக வாழவைப்பாய் என்னை நீயே!(கற்) 1

புவன முழுதாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி! (கற்) 2

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே! எந்தன்
அன்னயைவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!
கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத்தினம் வழி அனுப்பு! (கற்) 3

கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்!
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்!

பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்!
பக்தியோடு கையுனையே கூட வேண்டும்!
எண்ணமெலாம் உன் நினைவே ஆக வேண்டும்!
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்!
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை தீருமம்மா! (கற்)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்!
நெஞ்சினிலுள் திருநாமம் வழிய வேண்டும்!
கற்றதெலாம் மேன் மேலும் பெருக வேண்டும்!
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்!
சுற்றமெலாம் நீடூழி வாழ வேண்டும்!
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்!
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா! (கற்) 5

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ?
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ?
கன்றுக்கு பகவன்றி சொந்தமுண்டோ?
முள்ளைக்கும் பிள்ளைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணைக்கும் விளக்குக்கும் பேதமுண்டோ?
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ?(கற்) 6

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்!
அறிவுக்கே என்காது கேட்க வேண்டும்!
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்!
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்க வேண்டும்!
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்!
பரிவுக்கே நானென்றும் பணியவேண்டும்!
என்பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்!
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்! (கற்) 7

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை!
கூப்பிடவோநாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை!
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!
செம்பவள வாயழகி! உன்னெழிலோ!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாளே! உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை (கற்) 8

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்!
கயிறாகி உயிராகி உடலாகினாய்!
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்!
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்!
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்!
போற்றாத நாளில்லை தாயே உன்னை!
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை (கற்) 9

★★★

ரோக நிவாரண அஷ்டகம்

பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெய ஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடிடுமே
ஹந ஹந தக தக பசபச வெனவே
தளிர்த்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா । 1

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க்கையளே
தந்தன தான தன தன தான
தாண்டவ நடன ஈஸ்வரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாபநி வாரணி ஜெய் துர்கா । 2

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான்விழியே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாபநி வாரணி ஜெய துர்கா । 3

நாரணி மாயே நான் முகன் தாயே
நாகினி யாயே துர் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய் துர்கா । 4

திருமகளானாய் கலைமகளானாய்
மலைமகளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறிவானாய்
பெருவலி வானாய் பெண்மையளே

நருமல ரானாய் நல்லவளானாய்
நந்தினியானாய் நங்கையளே
ரோக நிவாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய் துர்கா । 5

வேதமும் நீயே வேதியன் நீயே
வேதமும் நீயே துர்கையளே
நாத மும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோக நிவாரணி சோக நிவாரணி
தாபநி வாரணி ஜெய் துர்கா । 6

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண் ஜோதி
பூதநற் ஜோதி பூரணியே
ரோகநி வாரணி சோக நிவாரணி
தாபநி வாரணி ஜெய் துர்க்கா । 7

ஜெய ஜெய சைல புத்திரி பிரஹ்ம
சாரிணி சந்தர கண்டினியே
ஜெய ஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீ நவ துர்க்கையளே
ரோக நி வாரணி சோக நிவாரணி
தாபநி வாரணி ஜெய் துர்க்கா । 8

☆☆☆

நாமாவளி

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தர வதனே சுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனே
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடு வாயுந்தன் தரிசனமே (ஓம்) 1

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வசையாயுன் புகழ் பாடிடவே (ஓம்) 2

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவ மாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்) 3

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்) 4

* * * *

தீபாராதனை

ஜய ஜய ஜய சக்தி ஓம் ஸ்ரீ
ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய ஜய வெனப்பாடிப் பணிந்தோம்
ஜக மெங்கும் அமைதியைதா ஓம் (ஜய)

திருப்தியுமின்பமும் வாழ்வினில் துலங்க
தேவையெல்லாம் அடைய-அம்மம்மா
பக்தி பெருகிடப் பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெமை ஓம் ஸ்ரீ (ஜய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வர மருள்வாய்-அம்மம்மா
கரங்குவித்தோமினி காலைவிடோமடி
கருணையுடன் அணைப்பாய் ஓம் ஸ்ரீ (ஜய)

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தனில் அன்பருள்வாய்-அம்மம்மா
தேசுடன் வாழ காட்டடி காட்சி
தேவியுடன் அடைக்கலமே ஓம் ஸ்ரீ (ஜய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து-அம்மம்மா
நமஸ்காரம் செய்துஹாரத்தி எடுத்தோம்
ஞாலத்துக் கமைதியை தா-ஓம் ஸ்ரீ

ஓம் கணபதி சிவ ஷண்முக நாதா
ஓம் த்ருகுணாதீத கிருஷ்ணா
ஓம் ஸ்ரீ ராமா மஹா தேவசம் போ
ஓம் ஜய ஜகஜ்ஜனனி-ஓம் ஸ்ரீ

* * *

குங்கும அர்ச்சனை

குங்கும அர்ச்சனை செய்தவர்க்கு அம்பாள்
கோடிக் கோடி பொன்னைக் கொடுப்பவளாம்
சந்தனத்தால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
சர்வா பீஷ்டங்களும் கொடுப்பவளாம்

சந்தனத்தால் அலங்காரம் செய்தவர்க்கு அம்பாள்
சர்வா பீஷ்டங்களும் கொடுப்பவளாம்
தேனால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
திவ்ய தரிசனம் கொடுப்பவளாம்

பாலால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
பல ஜன்ம பாவத்தைப் போக்கு பவளாம்
கனியால் அபிஷேகம் செய்தவர்க்கு அம்பாள்
கண் முன்னே வந்து நிற்பவளாம்

மனதால் எப்போதும் நினைப்பவர்க்கு அம்பாள்
மாங்கல்ய பாக்யம் கொடுப்பவளாம்
மும்முறை வலம் வந்து தொழுபவர்க்கு அம்பாள்
முன்நின்று காத்தருள் புரிபவளாம்

அடிமேல் அடிவைத்து அவளை வலம் வந்தால்
அஷ்ட்ட சம்பத்தும் கொடுப்பவளாம்
கற்பூர ஜோதியை காண்பவர்க்கு அம்பாள்
கைமேல் பலன்களை கொடுப்பவளாம்

தீராத வினைகளை தீர்ப்பவளாம் தேவி
திருவடி சரணம் சரணம் அம்மா
பவ பய ஹாரினி அம்பா பவானி ஜெய்
துக்க நிவாரிணி துர்கே ஜெய ஜெய

காலவிலாசினி காளி ஜெய ஜெய
சக்தி ஸ்வரூ பிணி மாதாகீ ஜெய் ஜெய்

★★★★

தேவி கன்யாகுமரி

தேவி கன்னியாகுமரி பராசக்திதேவி கன்னியாகுமரி
தாவி வருகுதம்மா என் நெஞ்சம் உன் தாளினை நாடுதம்மா 1

ஞாலமெல்லாம் ஈன்றும் கன்னியென்று ஞாயம் உரைக்குதம்மா
ஞாயிறு திங்களெல்லாம் நின்திருஞான ஒளியின் பொறி 2

பார்க்க வந்த என்னை தேவி நீ பக்கத்தின் வா என்று
பார்த்த பார்வையிலே என் மனம் பாகாய் உருகிற்றம்மா 3

நீலக்கடலோரம் கன்னித்தாய் நின்னைக் கண்ட பின்னர்
நானாவித உலகில் என் கண்கள் நின்னையே நாடுதம்மா 4

பார்க்கும் இடம்தோறும் நின்முக புன்சிரிப்புள்ளதம்மா
யார்க்கினி அஞ்சவேண்டும் உலகில் எல்லாம் உனது மயம் 5

தேகம் புனிதமாக தேவியே உன்னைத் தேடி அலைந்தேன்
மோகத்தை ஊட்டி விட்டாய் இனி அகம்பாவம் துலைந்ததம்மா 6

கரணத்தால் ஆளப்பெற்ற என் ஜீவன் கசடற்ற தாயிற்றம்மா
மரணம் எனக்கில்லை என்றே மனம் மகிழ்ந்தே குதிக்குதம்மா 7

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் பராசக்தி ஆனந்த சக்திமயே
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் அன்னையே அன்பு கன்னியாகுமரி

பவ பய ஹாரிணி அம்பா பவானி ஜெய்
துக்க நிவாரிணி துர்கே ஜெய ஜெய
காலவி லாசினி காளி ஜெய் ஜெய்
சக்திஸ்வரூபணி மாதாகீ ஜெய் ஜெய்

* * *

மங்களம்

ராகம் : சுருட்டி ஆதிதாளம்

காமகோடி வாசினிக்கி
தஞ்ச தளாக்ஷிணிக்கி
கோமள ஸ்வரூபிணிக்கி
குஞ்சர ஜனனிக்கு
மங்களம் ஜய மங்களம்

சந்த்ர மௌளீச்வரர்க்கும்
சாரத-காமேச்வரர்க்கும்
ஸௌந்தர் யலகரிக்கும்
ஜெகத்குரு சங்கரர்க்கும்
மங்களம் ஜெய மங்களம்

சிவசக்தி லலிதைக்கும்
ஸ்ரீ குரு பாதத்திற்கும்
புவனேஸ்வரி பாதத்தை
போற்றும் அடியார்கட்கும்
மங்களம் ஜெய மங்களம்

கருணா கடாக்ஷிணிக்கு
கல்யாணி சைலபதிக்கும்
அருள்தரும் விசாலாக்ஷி
போற்றும் திருவடிக்கி
மங்களம் ஜெய மங்களம்

மங்களம்

சங்கரன் சங்கரி தேவி மனோஹரி
சந்தர கலாதரி அம்பிகையே
எங்கும் நிறைந்த உன் இணையடியை
தொழும் பேர் எனக்கே அருள் பைரவியே

மரகத ச்யாமள ரூபிணியே
மகிஷாஸூரமர்த்தினி அம்பிகையே
பரமக்ருபாகரி பார்வதியே
பரமேஸ்வரியே ஜகதீஸ்வரியே
மங்களமே தந்து எங்களை ரக்ஷிக்க
மனமுவந்தே இங்கு வருவாயே
ஐங்கரனைப் பெற்ற அன்னையே
உன்னை நம்பிடும் எங்களைக் காப்பாயே

ஆதிபராசக்தி மாதா கீ ஜெய்
துர்கா பரமேஸ்வரி கீ-ஜெய்
நமபார்வதி பதயே ஹரஹர மஹா தேவா

* * *

மங்களம்

கணேச ஸ்கந்த ஜனனீ மாதங்கீ புவனேஸ்வரீ
பத்ரகாளி ஸ்தா துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்
மதுகைடப ஸம்ஹர்த்ரீ கதம்பவன வாஸினீ
மஹேந்த்ர வரதே துப்யம சாமுண்டாயே ஸூமங்களம்
மஹாகாளி மஹாலக்ஷ்மி மஹாவாணி மனோன்மணி
யோக நித்ராத்மிகே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்
ஸ்ரீசைல ராஜதனயே சண்டமுண்ட நிஷூதனி
ம்ருகேந்த்ர வாஹனே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்

நிஸூம்ய ஸூம்ய மஹிஷ ரக்த பீஜாதி மர்த்தினி
மஹாமாயே சிவே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்
ஸர்வதோஷ ப்ரசமனி ஸர்வ ஸௌபாக்ய தாயினி
ஸர்வஸித்திப்ரதே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்

ஸ்வயந்த்ராத்மிகே ப்ராக்ஞே ஸர்வயந்த்ர ஸ்வரூபிணி
ஸர்வதந்த்ராத்மிகே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்
வேதமாதக மஹாராக்ஞே லக்ஷ்மிவாணி வஸூப்ரியே
த்ரைலோக்ய வந்திதே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்

அஷ்டாதச மயாபீட நிவாஸாத்ம விலாஸினி
அபார மஹிமே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்
ப்ருமேந்த்ர மஹேந்த்ராதி ஸம்பூஜிதா பதாம்புஜே
ஸர்வாயுததே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்

ஸர்வப்ராணிஹ்ருதாவாஸே ஸர்வசக்தி ஸ்வரூபிணி
ஸர்வாபீஷ்டப்ரதே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்
சந்த்ரலேகா லஸத்பாலே ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வரீ
காமேச்வரி நமஸ்துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்

மஹாவித்யா ஸம்ப்ரதாய ஸம்வேத்ய நிஜவைபவே
ஸர்வமுத்ராகரே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்
தேஜோமயி தயாபூர்யே ஸச்சிதானந்த ரூபிணி
ஸர்வ வர்ணாத்மிகே துப்யம் சாமுண்டாயே ஸூமங்களம்

ஹம்ஸாரூடே சதுர்வக்த்ரே ப்ராஹ்மரூப ஸமன்விதே
தூம்ராக்ஷ ஹந்த்ரீ துப்யம் சாமுண்டாயே ஸுமங்களம்
மயூரவாஹன ஷட்வக்த்ரே கௌமாரீ ரூசோபிதே
ஸக்தியுக்தகரே துப்யம் சாமுண்டாயே ஸுமங்களம்

தம்ஷ்டராகாரள வதனே ஸிம்ஹ வக்த்ரே சதுர்புஜே
நாரஸிம்ஹி ஸதா துப்யம் சாமுண்டாயே ஸுமங்களம்
சதுர்புஜே ஸிம்ஹவாஹே ஜடாமண்டல மண்டிதே
சண்டிகே ஸுபதே துப்யம் சாமுண்டாயே ஸுமங்களம்

சாமுண்டே சண்டிகே தேவீ சக்தித்ரய ஸ்வரூபிணி
த்வத் ஆச்ரிதாணாம் பக்தானாம் அஸ்மாகம் ஸந்ததம் மங்களம் குரு

◆◆◆◆


ஸ்ரீ வெங்கடேசபெருமாள்
திருப்பதி

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்

ஸ்ரீமன் நாராயண த்யானஸ்லோகங்கள்

சாந்தாகாரம் புஜகசயனம் பத்மநாபம் ஸுரேசம்
விச்வாகாரம் ககனஸத்ருசம் மேகவர்ணம் சுபாங்கம
லக்ஷ்மீ காந்தம் கமலநயனம் யோகிஹ்ருத் த்யானகம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக நாதம் 1

மேகச்யாமம் பீதகௌஸேய வாஸம்
ஸ்ரீவத்ஸாங்கம் கௌஸ்துபோத் பாஸிதாங்கம்
பண்யோபேதம் புண்டரீ காயதாக்ஷம்
விஷ்ணும் வந்தே ஸர்வலோகைக நாதம் 2

ஸ சங்கசக்ரம் ஸ கிரீட குண்டலம்
ஸ பீத வஸ்த்ரம் ஸரஸீரு ஹேக்ஷணம்
ஸஹார வக்ஷஸ்தல சோபி கௌஸ்துபம்
நமாமி விஷ்ணும் சிரஸா சதுர்ப்புஜம் 3

கஸ்தூரீ திலகம் லலாடபலகே வக்ஷ: ஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே நவமௌக்திகம் கரதலே வேணும் கரே கங்கணம்
ஸர்வாங்கே ஹரிசந்தனம் ச கலயந் கண்டே ச முக்தாவளிம்
கோபஸ்த்ரீ பரிவேஷ்டிதோ விஜயதே கோபால சூடாமணி: 4

கோபோல ரத்னம் புவனைக ரத்னம்
கோபாங்கனா யௌவன பாக்ய ரத்னம்
ஸ்ரீக்ருஷ்ண ரத்னம் ஸுரஸேவ்ய ரத்னம்
பஜாமஹே யாதவ வம்ச ரத்னம் 5

வந்தே முகுந்தம் அரவிந்த தளாயதாக்ஷம்
குந்தேந்து சங்கதசனம் சிசுகோபாவேஷம்
இந்த்ராதிதேவ கணவந்தித பாதபீடம்
ப்ருந்தாவாலப்மஹம் வஸுதேவ ஸுனும் 6

பாலாய நீலவபுஷே நவகிங்கிணீக
ஜாலாபிராமஜகநாய திகம்பராய
சார்தூல திவ்யநகபூஷண பூஷிதாய
நந்தாத்மஜாய நவநீதமுஷே நமஸ்தே

பாலாய நீலவபுஷே நவகிங்கிணீக
ஜாலாபிரமஜகநாய திகம்பராய
சார்தூல திவ்யநகபூஷண பூஷிதாய
நந்தாத்மஜாய நவநீதமுஷே நமஸ்தே 7

ஹே கோபால! ஹே க்ருபாஜலநிதே! ஹே ஸிந்து கன்யாபதே!
ஹே கம்ஸாந்தக! ஹே கஜேந்த்ரகருணாபாரீண! ஹே மாதவ!
ஹே ராமாநுஜ! ஹே ஜகத் த்ரயகுரோ! ஹே புண்டரீகாக்ஷ! மாம்
ஹே கோபீஜனநாத! பாலய பரம் ஜாநாமி ந த்வாம் விநா 8

இந்த்ரியாணி மயா ஜேதுமசக்யம் புருஷோத்தம
சரீரம் மம தேவஸ வ்யாதிபி: பரிபீடிதம்
மனோ மம புண்டரீகாக்ஷ விஷயாநேவ தாவதி
வாணீ மம ஹ்ருஷீகேச மித்யாபாருஷ்யதூஷிதா
ஏவம் ஸாதநஹீ நோ(s)ஹம் கிம் கரிஷ்யாமி கேசவ
ரக்ஷ மாம் க்ருபயா க்ருஷ்ண பாவப்தௌ பதிதம் ஸதா 9

வம்சீவீபூஷிதகரான் நவநீர தாபாத்
பீதாம்பரா தருணபிம்ப பலாதரோஷ்டாத்
பூர்ணேந்து ஸுந்தர முகா தரவிந்தநேத்ராத்
க்ருஷ்ணாத் பரம் கிமபி தத்வமஹம் ந ஜானே 10

யசோதா வத்ஸலம் ராஜகோபாலம் யதுவம்சஜம்
ருக்மணீ சத்யபாமாப்யாம் ஸஹிதம் க்ருஷ்ணமாச்ரயே 11

க்ருஷ்ணாய வாஸுதேவாய தேவகீ நந்தனாய ச
நந்தகோப குமாராய கோவிந்தாய நமோ நம:
நம பங்கஜ நாபாய நம: பங்கஜ மாலி நே
நம: பங்கஜ நேத்ராய நமஸ்தே பங்க ஜாங்க்ரயே 12

சூர்யவம்ச ஸமுத்பூதம் ஸீதாலக்ஷ்மண ஸம்யுதம்
த்ருத கோதண்ட ஹஸ்தாப்ஜம் ராமம் த்வாம் ப்ரணமாம்யஹம்
ஸ்ரீராம சந்த்ர கருணாகர தீனபந்தோ
ஸீதாஸமேத பரதாக்ரஜ ராகவேச
பாபார்த்தி பஞ்ஜன பயாதுர தீனபந்தோ 14
பாபாம்புதௌ பதித முத்தர மாமநாதம்

ஸ்ரீராகவம் தசரதாத்மஜ மப்ரமேயம்
ஸீதாபதிம் ரகுகுலர் ந்வய ரத்னதீபம்
ஆஜாநுபாஹூம் அரவிந்த தளாளதாக்ஷம்
ராமம் நிசாசர விநாசகாம் நமாமி 15

வந்தே வ்ருந்தா வனசரம் வல்லவீஜன வல்லபம் 16
ஜயந்தீஸம்பவம் தாம வைஜயந்தீவிபூஷணம்

பதவீம் அதவீயஸீம் விமுக்தே
அடவீஸம்பதம் அம்புவாஹந்தீம்
அருணாதரஜாபிலாஷ வம்ஸாம்
கருணாம் காரணமானுஷூம் பஜாமி 17

யஸ்யாபவத் பக்த ஜநார்த்தி ஹந்து:
பித்ருத்வ மந்யேஷூஅ விசார்ய தூர்ணம்
ஸ்தம்பே: அவதாரஸ் தமநந்ய லப்யம்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே 18

அஹோபிலே காருட சைல மத்யே
க்ருபா வசாத் கல்பித ஸந்நிதானம்
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாம பாகம்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே 19

துஷ்டானாம் பீகரம் தேவம் சிஷ்டானாம் அபயங்கரம்
ப்ரஹ்லாதவரதம் விஷ்ணும் ஸ்ரீந்ருஸிம்ம மஹம் பஜே 20

சேஷதல்ப சயானம் த்வாம் ஸ்ரீபூமி ஸஹிதம் ப்ரபும்
ப்ரஹ்மாதி சுரநாதம் தம் ரங்கனாதமஹம் பஜே 21

புராணம் பவித்ரம் நியந்த்ரம் சரண்யம்
பராபக்தி ஸாத்யம் ப்ரசாந்தாத்ம வேத்யம்
நகாராதி ப்ரம்ஹ த்ரினேத்ராதி ஸேவ்யம்
ஜகன்மூல கந்தம் முகுந்தம் பஜேஹம் 22

ஸூராத்யம் ரமேசம் விசுத்த ப்ரபோத
ஸ்வரூபம் ஜகத் ஸ்ருஷ்டி ஸம்ஹாரலீலம்
நிராலம்ப மஜ்ஞான நிர்வ்ருத்தி ஹேதும்
ஸ்திரா நந்ததம் வாஸூதேவம் பஜேஹம் 23

விஷ்ணும் சதுர்புஜம் தேவம் சங்கசக்ர கதாதரம்
பக்தாபீஷ்ட ப்ரதாதாரம் வரதம் த்வாம் நமாம்யஹம் 24

ஸ்ரீநிவாஸம் ஸ்ரியாயுக்தம் வேங்கடேசம் சதுர்புஜம்
பக்தானாம் இஷ்டதம் நாதம் ஜகாதாம்த்வாம் நமாம்யஹம் 25

வைனதேய மஹாபாக விஷ்ணு வாஹ நமோஸ்துதே
நாராயணஸ்ய ஸேவார்த்தம் அனுக்ஞாம் தாதுமர்ஹஸி 26

ஸ்ரீ கருடன்

கருடம் வரதம் தேவம் ஸ்ரீவிஷ்ணுப் பிரிய வாஹனம்
சர்ப்பாதி விஷ ஹர்த்தாரம் சிரஸாத்வாம் நமாம்யஹம்

குங்குமாங்கித வர்ணாய குந்தேந்து தவளாய ச
விஷ்ணுவாஹ நமஸ்துப்யம் பஷிராஜாய தே நம: 27

ஸ்ரீ ஆஞ்சநேயர்

அஞ்ஜனா நந்தனம் வீரம் ஜானகீ சோக நாசனம்
கபீசமக்ஷ ஹந்தாரம் வந்தே லங்கா பயங்கரம்
மனோஜவம் மாருத துல்ய வேகம் ஜிதேந்த்ரியம்
புத்திமதாம் வரிஷ்டம் வாதாத்மஜம் வானரயூதமுக்யம்
ஸ்ரீராம தூதம் சிரஸா நமாமி

அஞ்சனா தனயம் வீரம் ராமதூதம் மஹாமதிம்
ஹனுமந்தம் நமாமித்வாம் பலம்புத்திம் ப்ரயச்சமே 28

ஸ்ரீ விஷ்ணு காயத்ரீ

ஓம் நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்

ஸ்ரீ க்ருஷ்ண காயத்ரீ

ஓம் தாமோதராய வித்மஹே ருக்மணீ வல்லபாய தீமஹி
தந்தோ க்ருஷ்ண ப்ரசோதயாத்

ஸ்ரீ ராம காயத்ரீ

ஓம் தாஸரதாய வித்மஹே ஸீதாவல்லபாய தீமஹி
தந்நோ ராம: ப்ரசோதயாத்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ காயத்ரீ

ஓம் நிரஞ்ஜநாய வித்மஹே நிராபாஸாய தீமஹி
தந்நோ ஸ்ரீநிவாஸ : ப்ரசோதயாத்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ காயத்ரீ

ஓம் வஜ்ரநகாய வித்மஹே தீக்ஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ நாரஸிம்ஹ : ப்ரசோதயாத்

ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ காயத்ரீ

ஓம் வாகீஸ்வராய வித்மஹேஹயக்ரீவா கீமஹி
தந்தோ ஹம்ஸ ப்ரசோதயாத்

ஸ்ரீ லக்ஷ்மி வராஹ காயத்ரீ

ஓம் த நுர்த்தராய வித்மஹே வக்ரதம்ஷ்டராய தீமஹி
தந்நோ வராஹ : ப்ரசோதயாத்

ஸ்ரீ பரசுராம காயத்ரீ

ஓம் ஜாமதக்ன்யாய வித்மஹே மஹாவீராய தீமஹி
தந்நோ பரசுராம : ப்ரசோதயாத்

ஸ்ரீ ஸுதர்ஸன காயத்ரீ

ஓம் ஸுதர்ஸனாய விதம்ஹே மஹாஜ்வாலாய தீமஹி
தந்நோ சக்ர : ப்ரசோதயாத்

ஸ்ரீ கருட காயத்ரீ

ஓம் தத்புருஷாய வித்மஹே ஸுவர்ணபக்ஷாய தீமஹி
தந்நோ கருட : ப்ரசோதயாத்

ஸ்ரீ ஆஞ்ஜநேய காயத்ரீ

ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே வாயுபத்ராய தீமஹி
தந்நோ ஹநூமத் : ப்ரசோதயாத்

ஸ்ரீ ஸுதர்ஸன மூலமந்தரம்

ஓம் க்லீம் க்ருஷ்ணாய கோவிந்தாய கோபீஜன வல்லபாய பராய பரமபுருஷாய பரமாத்மனே பரகர்ம மந்த்ர யந்த்ர ஔஷத அஸ்த்ர சஸ்த்ராணி ஸம்ஹர ஸம்ஹர ம்ருத்யோர் மோசய மோசய ஓம் நமோ பகவதே மஹா ஸுதர்சனாய தீப்த்ரே ஜ்வாலா பரீதாய ஸர்வதிக்க்ஷோபணகராய ஹும் பட் ப்ரஹ்மணே பரஞ்ஜ்யோதிஷே ஸ்வாஹா.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த
திருப்பாவை

மார்கழித் திங்கள மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன்அடி பாடி
நெய்யுண்யோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்வோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறொண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைப் பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற்பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய் 3

ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிரிந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்றும் அணி விளக்கை
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர்தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய் 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்து அரவில் துயில மாந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்று பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய் 6

கீசுகீசு என்று எங்கும் ஆனைச்சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழலாய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய் 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல்காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய் 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய் 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டு ஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ?
ஆற்ற அனந்தம் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய் 10

கற்றுக் கறவை கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்
சுற்றுத்துத் தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி ! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய் 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழ நின்வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய் 12

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக்களம் புக்கார்
வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய் ! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய் 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடலோ ரெம்பாவாய் 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின்! நம்கைமீர்! போதர்கின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை?
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்தெண்ணிக்கொள்
